இலவச வெளியீடு: GERMANY , ENGLAND புரட்டாதி.Sept.2017

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

1950 (67)

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
தொடர்
மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க
நகை மாளிகை
Tel:0231 162377
Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Germany Fax:0231 147836



# யேர்மனியில் காணாமற் போன கிராமம்!



## பாடுங்கள் சுவாச நோய் பறந்தோடும்

Dr IN Page 09

## விழாத அடி!!!

## ஒலிவியாவின் ஆற்றலுக்கு ஏ.ஆர்.ரஹ்மான் மரியாதை



S.K.Silks & Gold Paraadise
மாபெரும் ராஜமுத்திரை
15 YEARS CELEBRATING
தடம் பதிக்கிறது
அழகிய சேலைகள்
என்றும் புதுப் புது வரவாகப்
பூத்துக்குலுங்கும்
சோலை! நமது சேலை மாளிகை!
Mr.P.Sritharan.
Proprietor
Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund



செல்வராஜா
Selvaraja Gold House
162b,Mitcham Road
London SW17 9NJ
U.K
Tel:02087673795
0782500269
Page.02

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.9

Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Germany
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
Page.24

# அன்றும் இன்றும்
## அச்சுக்கலை

**வெற்றிமணி மு.க.சு.சிவகுமாரன் யேர்மனி**




இந்தியாவில் கேரளாவில் கோலம் என்ற நகரில் வெளிவந்தது. அப்புத்த கத்தின் பெயர் தம்பிரான் வணக்கம் (Christiani Vanakkam') வெளியிட்ட வர்கள் (Portuguese missionary) போத்துக்கிச மிஷனரி. வெளியிட்ட ஆண்டு October 20, 1578 . இந்தியாவில் உள்ள அத்தனை மொழிகளிலும் முதல் அச்சேறிய பெருமை மிக்க மொழி தமிழ்மொழியே என்றால் அது மிகை யாகாது.

சரி மீண்டும் புத்தகத் தாயரிப்பக்குள் வருவோம்.

ஒரு புத்தகம் அடித்து முடிந்தால் அடித்த அத்தனை பக்கத்துக்குரிய எழுத்துக்களை மீண்டும் தனித்தனியாக எடுத்து அவற்றை முன்பு இருந்த பெட்டிக்குள்ளேயே போடுதல் வேண்டும். ஆப்படி ஒரு ஒழுங்குமறையில் அந்த எழுத்தக்கள் பெட்டிக்குள் இருந்தால்தான் அச்சுக் கோப்பவர்கள் இலகுவாக விரைவாக எழுத்தக்களை எடுத்து மீண்டும் கோர்க்கமுடியும்.

ஆதலால் எழுத்துக்கள் இருந்த இருந்த பெட்டிக்குள்ளேயே போட வேண்டும்.

எழுதி வைத்த கட்டுரையயை சேமித்து (Save) வைக்க மறந்தாலோ அல்லது வைரஸ் அழித்தாலோ எப்படி இருக்குமோ? அதனைவிட கட்டிவைத்த கோர்வை களன்று விழுந்தால் இருக்கும்.

நான் ஒரு முறை சுன்னாகத்தில் வெற்றிமணி அடிக்கும் சக்தி அச்சகத்தில் பக்கங்கள் யாவும் எழுத்துப்பிளை பார்கப்பட்டு அச்சு அடிப்தற்கு தயாராக இருந்த அந்த எழுத்துக் கட்டின் நூலைத் தொட்டுப்பாத்தேன், எது நடந்ததோ தெரியவில்லை சர சர என்று அத்தனை எழுத்துக்களும் குலைந்து வீழந்து விட்டன. அவ்வளவுதான்.






அந்த் இடத்தில் நான் இல்லை. குறைந்தது ஆறுமாதம் தலையே காட்வில்லை. பின்புதான் தெரிந்தது அந்த எழுத்துக்கூட்டம் வெற்றிமணி அடித்து முடிந்து குலைத்துப் போடுவதற்காக நூல்கட்டு அகற்றப்பட்டு இருந்தாகவும், அதனையே நான் குலைத்துவிட்டதாகவும் அறிந்து கொண்டேன்.இப்போது பாருங்கள் அன்ற உள்ள சிரமங்களை.

அன்று ஒரு பாடல் கூட குலமகள் ராததை படத்தில் சிவாஜிபாடுவதாக வரும். 'உலகம் இதிலே அடங்குது உண்மையும் பொய்யும் துலங்குது ....பின் 'மையில தோய்த்து பேப்பரில் அடித்தால் மறுத்துப்பேச ஆள் இல்லை" என்று. ஏன் என்றால் அப்போது அச்சு அடித்தல் என்பதும்,பத்திரிகை நடத்தல் என்பதும் யாவரும் எளிதாகச் செய்வது விடக்கூடிய தொழிலும் அல்ல. அத்தோடு உண்மையை உரக்கவும், ஆதாரத்துடன் பத்திரிகைகள் வெளிவந்த காலம் அது.

எனவே அப்படியான ஒரு தொழிலில் புனிதம் இருக்கும், நேர்மை கட்டுப்பாடும் இருக்கும். இவ்வளவு கஸ்டப்பட்டு செய்கிறோமே உண்மையானதாக மக்களுக்கு பிரயோசனமாக இருக்கவேண்டும் என்ற துடிப்பும் கூடவே இருக்கும். ஆனால் இன்று புத்தகம் என்றதுமே பேஸ் புத்தகமோ என்று கேட்டுகும் காலம். எல்லோருமே பத்திரிகையாளர்கள்.

மேல் உள்ள வெற்றிமணி (15.01.1969) ஆண்டு வெளிவந்தது. அதன் அட்டைப்படம் கலாகேசரி ஆ.தம்பித்துரை (ஆ.த) அவர்கள் வரைந்தது. அதாவது மரத்தில் அந்த ஓவியத்தை செதுக்கி அதனை அப்படியே மையில் தோய்த்து அடித்தது. அதாவது அந்தக்காலத்து புளக்மாதிரி)

தமது செய்தியை உடன் உடன் எழுதிப்போடுவார்கள். தங்கள் எண்ணத் தையே தீர்ர்வாகவும் போடுவர். அதுக்கு விழும் (Like) லைக்கைக்கொண்டு அதனை உண்மை என்றும் நம்புவர்.

ஒரு வைத்தியக் குறிப்பை சம்மந்தம் இல்லாத ஒருவர் எழுதுவர். அந்தக் குறிப்பை அப்படியே கட்பண்ணி பேஸ்பணிவிட்டால் அடுத்த புத்தமாகி அசத்தும்.

இவை யாவும் இலகுவாக செய்ய முடிவதால் உண்மை நிலைக்கு பஞ்சம் ஏற்பட்டுவிட்டுது.

எங்கும் கூட்டங்களுக்கு முன்பு போனால் உதாரணங்கள் பெரிய பெரிய நூல்களில் இருந்து வரும் இப்ப பேஸ்புக்கில் இருந்து வருகிறது. உர்யிதம் செய்யப்படாத பல ஊகங்களை அங்க ஆணித்தரமாக எடுத்துவைப்பார்கள்.

இது எல்லாம் ஒரு தொழில் இலகுவாக எல்லோர் கைக்கும் போனதால் வந்த குறை. நிறையும் இருக்கு அதனைவிட குறையே மிஞ்சிக்கிடக்கு.

படங்கள் அன்று புத்தகத்தில் போடவேண்டும் என்றால் அவை புளக் செய்ப்பட்டு போடப்படும். ஒரு படம் ஒரு முறை உபையோகித்தால் மறுமுறை தேவை இல்லை என்றாகிவிடும். ஆந்த ஒரு முறைக்காக பல ரூபாய்க்களை செலுத்தவேண்டி இருந்தது.

மகாத்மா காந்தியின் படம் உன்றால் பல தடவை பாவிக்கலாம், ஒரு செய்தியின் படம் என்றால்? எத்தனை முறை பாவிப்பது. இப்போ அப்படியா?

அன்று ஒரு பெரிய நோட்டீஸ் அடிக்க வேண்டும் என்றால் எழுத்து அந்த அளவிற்கு கிடையாது. எனவே மரத்தில் சிற்பம் செதுக்குவதுபோல் செதுக்கி அல்லது லியோனியம் சீட்டுடில் அந்த பெரிய எழுத்தை வெட்டி அடிப்பார்கள். அத்துடன் அதன் நீளம் ஒரு மீற்றர் என்றால் அதன் அரைவாசியா அடித்து அதாவது இரு துண்டுகளாக அடித்து அதனை தெருமதில்களில் ஒட்டும் போது இரண்டினையும் சேர்த்து ஒட்டுவார்கள். இப்போ 15 மீற்றர் நீளம் கொண்ட பெரிய பனர்கள் எல்லாம் தெருவை குறுக்காவெட்டிப் மேலே பறக்கின்றன.

அன்று சினிமா விளம்பர பனர்கள் மட்டும்தான் பெரிதாக இருக்கும். இப்போ எதற்கெடுத்தாலும் நம்நாட்டில் பனர்கள்தான்.

ஒரு விழா என்றால் நோட்டீஸ் அடிப்பார்கள். அதனை பாதுகாப்பாக பக்குவமாகக் கொடுப்பார்கள். (புதுப்படம் வந்தால் ஒலிபெருக்கியில் பாட்டுப் போட்டுக்கொண்டு பட நோட்டீசை காற்றில் பறக்காமல் இருக்க கசக்கிப் போட்டும் போடுவார்கள் இதுமட்டும் (வீதியில்) விதிவிலக்காக அன்று இருந்ததுதான்) இன்று கடைகளில் பத்திரிகைகளைவிட துண்டுப்பிரசுரங்கள் தான் அதிகம்.

காலம் ஒரு வண்டிச் சக்கரம் என்பது போல் அன்று 1970 களில் தாய்நாட்டில் பெருமளவு கையெழுத்து சஞ்சிகைகள் மாணவர்கள் வெளியிட்டனர். பின்பு புலம்பெயர் நாட்டில் நாம் வந்த அந்த எண்பதுகளில் (1980) கையெழுத்து பிரதிகளே புத்தகங்களாகவும் சஞ்சிகைகளாகவும் வந்தன.

பின்னர் 1988-1989 களில் யேர்மனியில் கணணி எழுத்துக்கள் தலைகாட்டின.

நன்றி: தமிழர் தகவல் (கனடா) ஆண்டுமலர் 2017 தொடர்ச்சி 6ம் பக்கம்





வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 252





ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம் )

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


**"வெற்றிமணிமொழி"**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276


# விழாத அடி!!!

## "இந்த துப்பாக்கியை வைத்துக்கொண்டு ரோட்டில திரியிற நாயை தான் இதால கலைக்க ஏலும்"

யூட் பிரகாஷ்



கொழும்பு துறைமுகத்தை அண்டியுள்ள சிறிலங்கா கடற்படைத் தளத்தில், ரோஹன தனது வெள்ளை நிற சீருடையை அணிந்து கொண்டிருந்தான். நன்றாக சலவை செய்யப்பட்டு விறைப்பாக சைழெ பண்ணப்பட்டிருந்த வெள்ளை வெளீரென்ற இலங்கை கடற்படை சீருடையை அணிய ரோஹணவிற்கு பெருமிதமாக இருந்தது.
"சண்டையை நிற்பாட்டி போட்டு, என்ன மண்ணுக்கு எங்களை இங்க கொண்டு வந்தவர்கள்" ரோஹண சத்தமாகவே முணுமுணுத்தான். காரைநகர் கடற்படைத் தளத்தில் நிலைகொண்டிருந்த இலங்கை கடற்படை படையணியில் தான் ரோஹண ஒரு மாலுமியாக கடமையாற்றிக் கொண்டி ருந்தான்.

"இந்திய பிரதம மந்திரி வந்திருக்கிறாராம்" ரோஹணவிற்கு பக்கத்தில் இருந்த மரக்கதிரையில் அமர்ந்திருந்து சப்பாத்தை காலில் மாட்டிக்கொண்டு இருந்த காமினி, ரோஹணவிற்கு பதிலளித்தான். காமினியும் ரோஹண வோடு இணைந்து வடமராட்சியில் முன்னெடுக்கப்பட்ட "ஒபரேஷன் லிபரேஷன்" இராணுவ நடவடிக்கையில் பங் கேற்றிருந்தான்.

"அதுக்கு... நாங்க அவருக்கு மாலை போட வேணுமோ.. இல்லை மரியாதை செய்ய வேணுமோ" அறையில் இருந்த சிறிய கண்ணாடியில் முகம் பார்த்து தலைவாரிக் கொண்டே ரோஹண கேட்டான். இந்திய விமானப்படையின் போர் விமானங்கள் யாழ்ப்பாணத் தீபகற்பகத்திற்கு மேலே பறந்ததோடு, தாங்கள் இருவரும் பங்கெடுத்துக் கொண்டிருந்த "ஒபரேஷன் லிபரேஷன்" இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டது, அவர்கள் இருவரிற்கும் கடும் கோபத்தையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியிருந்தது.
"மச்சான் சரியாய் சொன்னாய்டா, மரியாதை செய்யத் தான் எங்களை யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வந்தவங்கள்" காமினி சப்பாத்துக்களை அணிந்து கொண்டு எழுந்து, ரோஹணவிற்கு பக்கத்தில் வந்து ஒரு சல்யூட் அடித்தான்.

"அம்மட்ட சிரி... விளையாடாதே மச்சான்" ரோஹணவின் முகத்தில் கோபத்தின் ரேகைகள் படரத் தொடங்கின. "வடமராட்சியில் புலிகளை விரட்டிக் கொண்டிருந்த எங்களை, இங்க அந்த இந்திய ஒஒஒக்கு சல்யூட் அடிக்கவா கொண்டு வந்தவங்கள்" என்று கொப்பளித்த ரோஹண, பக்கத்தில் இருந்த வெறும் பெட்டியை காலால் உதைத்தான்.
"எல்லோரும் தயாராகி விட்டீர்களா" லெப்டினன்ட் மென்டிஸின் குரல் அறைக்கு வெளியே கேட்டது. "இன்னும் ஐந்து நிமிடங்களில் எல்லோரும் வாசலில் நிற்க வேண்டும்" லெப்டினன்ட் மென்டிஸின் குரலில் அதிகாரம் தொனித்தது. சில கணங்கள் கடந்து மீண்டும் "ஐந்து நிமிடங்கள்" என்று எச்சரித்த லெப்டினன்ட் மென்டிஸின் குரலைக் கேட்ட சிப்பாய்கள் அவசர அவசரமாக தங்களது சீருடைகளை அணிந்து கொள்ளத் தொடங்கினார்கள் கடற்கடைத் தளத்தின் வாயிலில் தரித்து நின்ற நீல நிற பஸ் வண்டியில் கடற்படை மாலுமிகள் அனைவரும் ஏற்றப்பட்டனர். பஸ்ஸில் ஏறுவதற்கு முன்னர் மாலுமிகள் ஒவ்வொருவருக்கும் ரவைகள் அகற்றப்பட்ட Lee-Enfield ரக துப்பாக்கிகள் கொடுக்கப்பட்டன.
"இந்தப் பகிடியை பாரு மச்சான், ரவையில்லாத துப்பாக்கியை வைத்துக்கொண்டு நாங்க என்ன செய்யுறது" ரோஹண பஸ்ஸில் தனக்கு பக்கத்தில் இருந்த பண்டாவிடம் பகிடிவிட்டு சிரித்தான். "ரோட்டில திரியிற நாயை தான் இதால கலைக்க ஏலும்" பண்டா சொல்லிக்கொண்டு இருக்க பஸ் நகரத் தொடங்கியது.
ஐந்து நிமிட ஓட்டத்தில் பஸ், ஜனாதிபதி மாளிகையை வந்தடைந்தது. கொழும்பு கோட்டையில் அமைந்திருக்கும் அந்த பெரிய வெள்ளைநிற மாளிகையை அன்று தான் ரோஹண முதன்முறையாக பார்க்கிறான். ஜனாதிபதி மாளிகையை சூழ ஆயுதம் தாங்கிய விசேட அதிரடிப் படையினர் காவலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

"என்னடா மச்சான் கடுமையாக யோசிக்கிறாய்". பஸ்ஸிலிருந்து இறங்கி மாளிகையை பிரமித்துப் போய் பார்த்துக் கொண்டிருந்த ரோஹணவைப் பார்த்து காமினி கேட்டான். "எனக்கு வாற கோபத்திற்கு... இன்றைக்கு" ரோஹண சொல்ல தொடங்கவும் எங்கிருந்தோ ஒலி பெருக்கியில் ஒலித்த கட்டளை, இருவரையும் விரைந்து சென்று தங்களது படையணியினரோடு வரிசையில் நிறுத்தியது.
"என்ட துவக்கில் மட்டும் இன்றைக்கு ரவை இருந் திருந்தால், நடக்கிறதே வேற" வரிசையின் முன்வரிசையில் நின்ற மாலுமி ரோஹண, பக்கத்தில் நின்ற காமினிக்கு மட்டும் கேட்கத்தக்கதாக கிசுகிசுத்தான். ஒரு முறை திரும்பி ரோஹணவை பார்த்துவிட்டு மறுபடியும் நிமிர்ந்த நிலையெடுத்தான் காமினி.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இலங்கை வந்திருந்த இந்தியப் பிரதமருக்கான மரியாதை அணிவகுப்பில் கலந்து கொள்ளும் சிப்பாய்கள், கொளுத்தும் கொழும்பு வெயிலில் நிலையெடுத்து நின்றார்கள். காலையில் வந்திறங்கியவர்கள் நிலை யெடுத்து நின்று சில மணித்தியாலங்கள் கடந்திருந்தன.

தொடர்ச்சி 4ம் பக்கம்




03ம் பக்கத் தொடர்ச்சி

# விழாத அடி!!!



யுத்த களத்திலில் இருந்து தங்களை திருப்பி அழைத்த கோபம் ஒரு புறம், இலங்கை விவகாரத்தில் மூக்கை நுழைத்த இந்தியாவின் மேலெழுந்த வெறுப்பு மறுபுறம், கால்கடுக்க கடும் வெயிலில் இந்திய பிரதமருக்கு மரியாதை செலுத்தவென நிற்பாட்டியிருந்த களைப்பு மற்றபுறம் என்று ரோஹணவிற்கு மண்டை கொதிக்கத் தொடங்கியது.

"இன்றைக்கு இவனுக்கு ஏதாவது செய்யோணும்" ரோஹண தனக்குள் கறுவிக் கொண்டான். மணிக்கூட்டு கோபுரத்தடியில் சைரன் பூட்டப்பட்ட ஜீப்பும் அதனைத் தொடர்ந்து சில கார்களும் வந்து நிற்பதையும் அதிலிருந்து சிலர் இறங்குவதும் ரோஹணவிற்கு தெரிந்தது. முதலில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் நின்று அணிவகுப்பை ஏற்ற இந்தியப் பிரதமர், பின்னர் பாதுகாப்பு அதிகாரிகள் புடைசூழ கடற்படை சிப்பாய்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

வரிசையாக அணிவகுத்து நின்ற சிப்பாய்களின் மரியாதையை ஏற்க, அவர்களின் முன் இந்தியப் பிரதமர் நடக்கத் தொடங்கினார். இந்தியப் பிரதமருக்கு வலப்புறத்தில் லெப்டினன்ட் மென்டிஸ் வாளேந்தி அவரிற்கு ஓரடி முன்னால் நடக்க, இடப்புறத்தில் இன்னொரு கடற்படை அதிகாரி ஆயுதமின்றி சற்றுப் பின்னால் நடக்க, அவரிற்கு பின்னால் இந்திய பிரதமரின் மெய்ப் பாதுகாவலர் நடந்து வர, இந்திய பிரதமர் ரோஹண நின்ற இடத்தை அண்மித்துக் கொண்டிருந்தார்.

முன்வரிசையில் நின்ற கடற்படை மாலுமிகள் ஒவ்வொருவரினதும் முகத்தை கூர்ந்து கவனித்துக் கொண்டே இந்தியப் பிரதமர் நடந்து வந்து கொண்டிருந்தார். தனக்கு இடப்பக்கமாக அண்மித்துக் கொண்டிருந்த இந்திய பிரதமரை கடைக் கண்ணால் ரோஹண அவதானித்துக் கொண்டிருந்தான். "இன்னும் பத்து பதினோரு அடி வைத்தானென்றால் எனக்கு கிட்ட வந்திடுவான்" ரோஹண மனதுக்குள் கணக்கு போட்டான்.

"இன்னும் நாலு அடிதான்" ரோஹணவின் கை துறுதுறுத்தது. இடப்பக்கம் நின்ற காமினியை தாண்டி, ரோஹணவிற்கு முன்னால் நகர்ந்த இந்திய பிரதமர் அவனையும் உற்றுப் பார்க்கிறார். இந்திய பிரதமரின் பார்வையில் ஒரு கணம் பின்வாங்கிய ரோஹண, அவர் அவனை தாண்டியதும், துப்பாக்கியை தலைகீழாக புரட்டி, துப்பாக்கியின் பிடியால், பிரதமரின் பிடறியை குறிவைத்து தாக்க.....ரோஹணவின் அசைவை உணர்ந்த இந்திய பிரதமர் சற்றே சரிந்து முன்னோக்கி நகர, துப்பாக்கியின் அடி பிரதமரின் இடது தோள் பட்டையில் தான் படுகிறது.

அன்று மட்டும் ரோஹணவின் குறி தவறாமல் பிடறியில் அடி விழுந்திருந்தால்....

செய்தி

"ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டிருக்காவிடின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டிருக்கும்" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இரா.சம்பந்தன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.




## உலகத்தமிழர் பண்பாட்டு இயக்க நிறுவனர் "ஆவணஞானி"
## குரும்பசிட்டி இரா. கனகரட்ணம் அவர்களின் முதலாண்டு நினைவு நிகழ்வு

உலகத்தமிழர் ஆவணக்காப்பகம், மற்றும் உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் ஆகியவற்றின் நிறுவனர், ஆவணஞானி குரும்பசிட்டி இரா. கனகரட்ணம் அவர்களின் முதலாண்டு நினைவு நிகழ்வு, Scarborough Civic Centre இல் ஜூலை மாதம் 8ம் திகதி நடைபெற்றது. இந்த உணர்வுபூர்வமான நிகழ்வினை பொன்னையா விவேகானந்தன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

ஆவணஞானியின் பாரியார் பவளராணி கனகரட்ணம் குத்துவிளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். மலர் வணக்கத்தை தொடர்ந்து கனடா தேசிய கீதத்தை மைத்திரி சுரேஷ்குமார், தமிழ்த்தாய் வாழ்த்தினை ஜெகன் கோபிநாத் அவர்களும் பாடினர். உஷா கனகரட்ணம் அவர்களின் வரவேற் புரையை தொடர்ந்து, கவிஞர் கந்தவனம், உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில், சர்வதேச ஊடகத்துறை பொறுப்பாளர் லோகேந் திரலிங்கம் அவர்கள், வட அமெரிக்க பொறுப்பாளர்,இராஜரட்ணம் அவர்கள், கவிஞர் சேரன்,நூலகம் நிறுவனம் சார்பில் நற்கீரன், மற்றும் அருண்மொழி வர்மன் அவர்கள், வல்வை ஆவணக்காப்பகம் நகுலசிகாமணி அவர்கள், அசோகமூர்த்தி செல்லையா அவர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் நாடுகடந்த அரசாங்கம் கனடா பிரதிநிதி ஈழவேந்தன் அவர்கள், மற்றும் மொன்றியல் கவிஞர் தமிழ்மணி க. உயிரவன் அவர்கள் உரையாற்றினார்கள். பவளராணி கனகரட்ணம் அவர்களுடன் நந்தகுமார் செல்வநாயகம் அவர்களின் நேர்காணல், தமிழ் நெட் ஜெயச்சந்திரன் கோபிநாத் அவர்கள் தயாரித்த காணொளி, மற்றும் டென்மார்க்கிலிருந்து கி. செ. அ. துரை அவர்கள் வாழ்த்துச்செய்தி என்பன காணொளியாக காண்பிக்கப்பட்டன. ஆவணஞானி பற்றிய நூலும் வெளியிடப்பட்டது. ஈழவேந்தன் அவர்கள், மற்றும் அசோகமூர்த்தி செல்லையா, வாணி சிவராஜன் அவர்கள், திருமதி கனகரட்ணம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். புஷ்பா கனகரட்ணம் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவேறியது.




Bochum
முற்பதிவுக்கு முந்துங்கள்
Lucky Fly Reisebüro
Lucky Fly Reisebüro வழங்கும்
சிறப்பு விலையில் Rail and Fly
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Allee Str.38-40a
44793 Bochum
Sondertarif Frankfurt -Colombo
Sep,Okt,Nov,Dez,Jan,Feb
Ab : 579 €
இந்தியா செல்வதற்கான 1 மாத,2.மாத,3.மாத விசாக்கள் பெற்றுத்தரப்படும்
Frankfurt- Colombo
Gulf Air
Allee Str.38-40a
44793 Bochum
Altendorfer Str:266
45143 Essen
Tel: 0201 8009 3749
Email: info@lucky-fly.de
www.Lucky-fly.de
Graphic Design Vettimaniy Ltd
Hinflug: Mi,Do,Fr.
Rückflug :Nur:Di,So.
ab Stunden Transit mit Hotel
6 மணித்தியாலம் Transit ல் செல்பவர்களுக்கு
Hotel தங்குமிட வசதியுடன்
Mob:No: 0179 1484 892
Tel: 0234-2399032
FaX 0234-79457171
e.mail:siva 0108 @hotmail.com
Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171
துரித பணமாற்றுச் சேவை!!!
MoneyGram
WESTERN UNION WU
moving money for better

# ஒரு நாள் மட்டும்..!

## விழாக்கால பிரம்மாண்ட விற்பனை..!

4-வது ஆண்டில் கால் பதிக்கும்...

**07.10.2017** அன்று நீங்கள் நம்ப முடியாத அளவில் தரமான பொருட்கள் நியாயமான விலையில்...!

TKS BEST FOODS

வழங்கும்... மாபெரும் மலிவு விற்பனையும் குலுக்கல் முறையிலான பரிசுப் பொருட்களும்...!

100 € க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு குலுக்கல் முறையிலான பரிசுப் பொருட்கள்..!

| | |
|---|---|
| 1-ம் பரிசு | இலங்கை-இந்தியாவுக்கான விமான பயணச்சீட்டு Gutschein ( Gultig bis 31.12.2018 ) |
| 2-ம் பரிசு | TKS BEST FOOD 300 euro பெறுமதியான Gutschein ( Gultig bis 31.06.2018 ) |
| 3-ம் பரிசு | STAR IMPEX 150 euro பெறுமதியான Gutschein ( Gultig bis 31.06.2018 ) |
| 4-ம் பரிசு | ADCHAYA INTERNATIONAL 150 euro பெறுமதியான Gutschein ( Gultig bis 31.06.2018 ) |
| 5-ம் பரிசு | Ammas Food ன் ஒருகுடும்பத்துக்கான ஒருவேளை உணவுக்கான Gutschein ( Gultig bis 31.06.2018 ) |

## கொள்வனவுக்கான பரிசுப் பொருட்கள்..!

ONE DAY BIG SALE 07.10.2017

தள்ளுபடின்னாலே TKSதானே..!

- 50euroவிற்கு மேற்பட்ட கொள்வனவுக்கு ஒரு BOX அகர்பத்தி
- 100euroவிற்கு மேற்பட்ட கொள்வனவுக்கு ஒரு புட்டுப்பானை
- 200euroவிற்கு மேற்பட்ட கொள்வனவுக்கு ஒரு PURI PRESS
- 300 euroவிற்கு மேற்பட்ட கொள்வனவுக்கு ஒரு CHAPATHI MAKER அல்லது இட்லிச்சட்டி
- 400 euroவிற்கு மேற்பட்ட கொள்வனவுக்கு ஒரு 3 CUP MIXIE GRINDER
- 500 euroவிற்கு மேற்பட்ட கொள்வனவுக்கு ஒரு 12 Ltr RICE COOKER

தள்ளுபடியிலும் தரம்...உங்க பட்ஜெட்டுக்குள்ளேயே SHOPPING...கூடவே பரிசுப்பொருட்களையும் அள்ளிச் செல்லலாம்... வந்து பாருங்க, வியந்து போவீங்க...!

**Rheinische Str. 79, 44137 Dortmund, Germany, Tel : 49 231 95046883**

# ஒரு சொல்லை மறக்காமல் இருப்பது எப்படி?





நுண்நொதுமி என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? தெரியவில்லை என்றாலும் பரவாயில்லை, ஆனால் நுண்நொதுமி என்கின்ற இந்தச் சொல்லை நான் நாளை உங்களிடம் கேட்டால் உங்களுக்கு நினைவு இருக்குமா? உங்களில் பெரும்பாலானவர்கள் இந்தச் சொல்லை நாளை என்ன, இன்றே சில நிமிடங்களில் மறந்துவிடுவீர்கள். ஆனால், இப்படியான கஷ்டமான சொற்களை எப்படி மனப் பாடம் பண்ண முடியும் என்று உங்களுக்குத் தெரியுமா? ஆராய்ச்சிகள் ஊடாக நிருபிக்கப் பட்ட இந்த முறையை நீங்களும் அறிய விரும்பினால், கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்!

விஷயத்துக்குப் போக முதல், நான் ஆரம்பத்தில் கூறிய வார்த்தை என்னவென்று உங்களுக்கு இன்னும் நினைவிருக்கிறதா? இல்லையா...? சரி பரவாயில்லை, அந்தச் சொல்லை மட்டும் இல்லை எதிர்காலத்திலும் கூட அனைத்துச் சொற்களையும் எப்படி 100% நினைவில் வைத்திருப்பது என்பதை இப்பொழுது பார்ப்போம். இதைப் பற்றி பல்வேறு பல்கலைக் கழகங்களிலும், ஆய்வுக் கூடங்களிலும் ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டது. ஆனால் ஒரு புதிய சொல் ஒன்றை மறந்து விடாமல் இருப்பதற்கு ஒரு இலகுவான முறையை கேம்பிரிட்ச் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தான் கண்டுபிடித்து இருக்கின்றார்கள். அது எப்படி என்றால், ஒரு புதிய சொல்லை நாம் 14 நிமிடங்களில் 160 தடவை கேட்டாலே போதுமாம். அந்தச் சொல் உடனடியாக மூளையில் பதிவாகி அதை மறந்துவிட மாட்டோம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். நீங்கள் நினைப்பது போல் அந்தச் சொல்லை உங்கள் வாயால் சொல்லக்கூடத் தேவையில்லை. அதை உங்கள் காதுகளால் கேட்டால் மட்டுமே போதும். அப்படிக் கேட்கும் போது உங்கள் மூளை கொஞ்சம் கொஞ்சமாக அந்தச் சொல்லை நீங்கள் மறக்காத மாதிரி பதித்து விடும்.


**Dr.நிரோஷனின்**
**அதிசய உலகம்**


இது ஒரு இலகுவான முறை அல்லவா? எனவே, என்னைப் போல் மறதி அதிகமாக இருப்பவர்களுக்கு இது ஒரு அருமையான வழியாக அமைந் திருக்கிறது. அது சரி, நான் ஆரம்பத்தில் கூறிய அந்த நுண்நொதுமி என்றால் என்ன தெரியுமா? அது வேறு ஒன்றுமே இல்லை, Neutrino என்றும் ஆங்கிலத்தில் அழைக்கப்படும் அணுவின் அடிப்படைத் துகள்களுள் ஒன்றாகும். ஆனால், இதைப் பற்றி நான் இன்னுமொரு கட்டுரையில் எழுதுகிறேன்.



சரி நண்பர்களே, நீங்கள் அனைவருமே இன்று நான் கூறிய இந்தச் சொற்களை மறக்காமல் இருப்பதற்கான முறையை முயற்சித்துப் பாருங்கள்.

# நமது சூரியன் எதிர் காலத்தில் அழிந்துவிடுமா?





நமது பூமியில் உயிரினங்கள் வாழ்கின்றன என்றால், அதற்கு நமது சூரியன் தான் காரணம். நமது சூரியன் இல்லாவிட்டால், புவியில் உயிர் தோன்றியே இருக்காது. ஆனால், இதில் கவலைக்கிடமான விஷயம் என்ன தெரியுமா? நமது சூரியன் எதிர் காலத்தில் அழிந்துவிடப் போகின்றது. அடடா, என்ன நண்பர்களே பயமாக இருக்கின்றதா? சரி சரி, இதற்குப் பின்னால் அப்படி என்ன இருக்கிறது என்பதைப் பார்ப்போம்.

தற்போது சூரியன் இருப்பதால் தான், நமது புவியில் ஒரு இன்பமான, உயிர் வாழக்கூடிய வெப்ப நிலை இருக்கிறது. ஆனால், போகப் போக சூரியனில் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கி விடும். அந்த மாற்றங்களுள் நமது சூரியனின் அளவு அதிகரிப்பதும் ஒன்றாகும். இவ்வாறு ஒரு நட்சத்திரம் பெரிதாகியதும் அதைச் சிவப்பு அரக்கன், அதாவது சநன பயைெ என்று அழைப்பார்கள். சரி, இதுவே நமது சூரியன் ஒரு சிவப்பு அரக்கன் ஆனால் என்ன நடக்கும், தெரியுமா? இதன் விளைவாக நமது புவியில் உள்ள வெப்ப நிலை அதிகரித்துவிடும். இவ்வாறு புவியில் வெப்ப நிலை அதிகரித்துப் போகும் பொது, முதலாவதாக அனைத்துத் தாவரங்களும் அழிந்து போய்விடும். தாவரங்கள் அழிந்தால் புவியில் பிராணவாயு, அதாவது Oxygen உற்பத்தி நின்றுபோய்விடும். மேலும் தாவரங்களை உண்ணும் விலங்குகளுக்கு உணவு இல்லாமல், அந்த விலங்குகளும் கூட அழிந்து விடும். பிராணவாயு உற்பத்தியும் இல்லாமல், மேலும் பல விலங்குகளும் இறந்துவிட்டால் என்ன நடக்கும்? ஆம் ஆம், அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக அனைத்து உயிரினங்களும் அழிந்தே போய் விடும்.



புவியில் வாழும் மனிதர்களாகிய நமக்கு அழிவு நிச்சயம் என்பதில் மாற்றுக் கருத்தே இல்லை. எனவே, இதற்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறது. நமது புவியை விட்டு வேறு ஒரு உலகத்திற்குச் சென்றால் தான் நமது மனித இனமே உயிர் வாழமுடியும். இதைக் கேட்கவே பயங்கரமாக இல்லையா...?

அட இப்படி உங்களைப் பயமுறுத்திய நான், ஒரு மிக மிக முக்கியமான விஷயத்தை சொல்லவே இல்லை! அது என்னவென்றால், நமது சூரியன் எப்போது ஒரு சிவப்பு அரக்கனாக மாறப் போகிறது என்று தெரியுமா? நமது சூரியன் ஒரு சிவப்பு அரக்கன் ஆவதற்கு இன்னும் 500 கோடி வருஷங்கள் இருக்கிறது.

சபா... என்ன பெருமூச்சு விடுகின்றீர்களா...? சரி, நண்பர்களே, இனி நீங்கள் கூறுங்கள். நமது பூமியை விட்டு இன்னுமொரு கிரகத்திற்குப் போகவேண்டிய ஒரு நிலை வந்தால், நீங்கள் யாரை எல்லாம் அழைத்துக்கொண்டு போவீர்கள்? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!

SANGEETHA JEWELLERS
"Specialist in 22 ct Gold Jewellery UK"
MONTHLY SEETU FACILITIES
ONSITE WORK SHOP REPAIRS AND
ALL OTHER NEEDS
EXCHANGE YOUR OLD FOR NEW JEWELLERY
Tel:020 8902 9246
FOLLOW US ON . I INSTAGRAM I FACEBOOK
#SANGEETHA JEWELLERS
"PRICE GURANTEE ON THE DAY OF PURCHASE"
190 EALING ROAD,ALPERTON,WEMBLEY,HA0 4QD - U.K
" TERMS AND CONDITION APPLY"

சங்கீதா நகையகம்



2ம் பக்கத் தொடர்ச்சி

அச்சுப்பதிவாக வெளியிட பணம் அதிகம் என்பதனால் போட்டோக் கொப்பி எடுத்து, அதனை கிளிப்பண்ணி வெளியிட்டனர். இது மிகப் பெரிய வேலை. ஒரு கட்டுரையின் தலைப்பு பெரிதாகவேண்டும் என்றால், அதனை மட்டும் பெரிதாக கொப்பி பண்ணி, பின் வெட்டி சரியாக ஒட்டுதல் வேண்டும்.



இவர் யேர்மனியில் வெற்றிமணி அச்சாகும் அச்சக ஊழியர் இவருக்கு தமிழ் தெரியாது ஆனாலும் திறமையாக அச்சப்பதிவு செய்யும் ஊழியர் .
சிறப்பாக அச்சப்திவாகி வெளிவரும் வெற்றிமணியை உற்சாகமாக வரவேற்கும் காட்சி

ஒவ்வொரு மாதமும் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளர்ந்தது வெற்றிமணி.
இன்று அந்த யேர்மன் அச்சகத்தினருக்கு தமிழ் பதிப்பு என்றால் அச்சுப்படியாக்கிய பெருமை வெற்றிமணிக் உண்டு என்கிறார் அதன் இன்றைய முதல்வர் ஆனோ செல்க்மன்.

அச்சகத்தில் அடிப்பது என்றால் மட்டையில் கட்டுரைகளை ஒட்டி அதனை பக்கமிட்டு கொடுத்தால் அதனை ஒரு போட்டோ போல் படம் எடுத்து (offset) அச்சகத்தில் அடிப்பார்கள். அவர்களுக்கு தமிழ் தெரியாது நாம் கொடுப்பதை அப்படியே அடித்து தருவார்கள்.

ஒரு கட்டுரை தலைகீழாக இருக்கிறதா நேராகத்தான் இருக்கிறதா என்பதனை எழுத்துக்கு மேல் போடும் குற்றைவைத்தே கண்டிபிடிப்பதாக முன்பு இங்கு யேர்மனி அச்சகத்தில் வேலைசெய்யும் யேர்மனியர்கள் சொல்வதுண்டு.
இப்போ கைக்குள் யாவும் அடக்கம் அச்சுக்கு கொடுத்து எடுக்காமலேயே இணையத்தளத்தில் பத்திரிகை சஞ்சிகை என்று பல லட்சம் உலா வருகின்றன.
இந்த உலாக்களினால் இன்று பத்திரிகை புத்தகங்கள் அச்சு அடித்து வெளியிடுபவர்பாடு திண்டாட்டமா உள்ளது. இந்நிலை தொடருமானால்






பத்திரிகைள் சஞ்சிகைகள் அச்சு அடித்து வெளிவரும் காலம் இனிக் குறுகியதாகவே அமையும்.

கைகளில் பிடித்து புத்தகங்கள் வாசிக்கும் உணர்வும், பேப்பர்படிக்கும் சுகமும் வரவே வராது என்று சொல்பவர்கள் மெல்ல மெல்ல ஓய்வை நோக்கி சென்று கொண்டு இருக்கிறார்கள்.

எனவே அச்சில் வரும், மற்றும் வந்த புத்தகங்களும், பத்திரிகைளும், காட்சிப்பொருட்களாக நம்முன்னோர்கள் பாவித்த பொக்கிஷங்களாக மாறிடுமோ என்ற அச்சமே மிஞ்சுகிறது. இருந்தாலும் வெற்றிமணி அச்சாகும் அச்சக உரிமையாளர் திரு அனோ செல்றமன் அடித்துச் சொல்கிறார் " யேர்மனியில் அச்சுக்கலை இறக்காது என்று" அது நிஜமானால் அது எமது சந்திகளுக்கும் நல்ல செய்தியாக அமையும்.

Arno,Bernhard,Frank,Oliver






வெற்றிமணி அச்சாகும் யேர்மன் நிறுவனமான Seltmann இல் பத்திரிகை PDF சரிபார்த்து அச்சுக்கு அனுப்பும் பெரும் பணியைப் புரிபவர் Tanya. நுணுக்கமான அவதானிபு இவரது சிறப்பு


**Nandy's Catering & Partyservice**

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**


ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள்
மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளளோம்

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974




Düsseldorf



www.Nandys.de
e.mail:info@nandys.de

# முடிவு என்பது அடக்கம்




ஆழ்வாப்பிள்ளை

அன்று புதன் கிழமை, வேலை முடிந்து வீட்டுக்கு வந்த பொழுது பக்கத்து வீட்டில் இருந்து வந்த துர்நாற்றம், என்னை எங்கேயாவது ஓடிப் போய்விடு என்று விரட்டியது. இரண்டு போலிஸ் வாகனங்களும் ஒரு அம்புலன்ஸ் வாகனமும் வாசலில் நின்றிருந்தன. என்ன நடந்திருக்கும் என்று நிதானிப்பதற்குள் மைக்கல் என்னை நெருங்கி வந்தான். மைக்கல் ஒரு பொலிஸ்காரன். எனக்குத் தெரிந்தவன். அவன் என்னை நெருங்கி வரும்போதே தனது நெஞ்சில் சிலுவை வரைந்து காட்டினான். பக்கத்து வீட்டு ஸ்ராபில் செத்துப் போய்விட்டார் என்று புரிந்தது.

„அவர் செத்து நாளாயிற்றுது. துர்நாற்றம் வருறதாக தகவல் கிடைச்சதாலே வந்தோம். மாடன்புழு (maggots) வந்திட்டுது. அதுதான் இந்த நாற்றம்" மைக்கல் சொல்லும் போதே ஸ்ராபில் வீட்டு யன்னலைப் பார்த்தேன் இலையான்கள் தங்கள் பரம்பரைகளோடு வந்து கூட்டமாக மொய்த்துக் கொண்டிருந்தன. வாழ்நாளில் தனிமையை விரும்பி வாழ்ந்த ஒருவன் வீட்டில் இன்று கூட்டமாக மாடன் புழுக்களும், இலையான்களும் குடியேறிவிட்டன.

எனது மூக்கைப் பிடித்து தாங்க முடியாத துர்நாற்றத்தை மைக்கலுக்கு சாடையால் காட்டிய பொழுது,"கன நேரமாக இங்கே நிற்கிறன். இசைவாக்கம் பற்றி கேள்விப் பட்டிருக்கிறாய்தானே?" என்று அவன் பரிதாபமாகச் சொன்னான். "உங்கள் சம்பிராதயம் எல்லாம் முடிய நேரம் எடுக்கும் போலே?"

„எல்லாம் முடிஞ்சு வாகனம் வந்து உடலை எடுத்துக் கொண்டுபோக எப்பிடியும் இரவு பன்னிரண்டு மணியாயிடும். அதுக்குப் பிறகுதான் வீட்டுக்கு சீல் வைச்சிட்டு நாங்கள் போகலாம்"

மைக்கல் 'நாங்கள்' என்று சொல்லும் போதுதான் பொலிஸ் வாகனத்தைப் பார்த்தேன். வாகனத்துக்குள்," இனியும் இந்த வேலையை தொடரவேண்டுமா?" என்ற பாணியில் தலையில் கை வைத்துக் கொண்டு இன்னும் ஒரு பொலிஸ்காரன் உட்கார்ந்திருந்தான்.

„வீட்டுக்கு எதுக்கு சீல் வைக்க வேணும்?" „பிரேத பரிசோதனை இருக்கெல்லோ. சாவுக்கான காரணம் தெரிஞ்ச பிறகுதான் அவருக்கு வேண்டப்பட்டவர்கள் உள்ளே போகலாம். பிரேத பரிசோதனை முடிய எப்பிடியும் ஒரு கிழமையாவது பிடிக்கும்" மைக்கலிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டேன். அன்று குளிக்கும் போது, „புறந்தோல்போர்த் தெங்கும் புழுஅழுக்கு மூடி மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய..." என்று அன்று வெள்ளிக்கிழமைகள் தோறும் பாடசாலை மண்டபத்தில் நின்று பாடிய சிவபுராணம்தான் நினைவுக்கு வந்தது.

ஸ்ராபில் ஒரு ஓய்வு பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர். எழுபத்தியெட்டு வயது. அவருடைய அறிவுக்கும், ஆற்றலுக்குமாக அரசாங்கத்திடம் இருந்து பல விருதுகள் கிடைத்திருக்கிறது. சில புத்தகங்கள் கூட எழுதி வெளியிட்டிருந்தார். நான் அறிந்த காலத்தில் இருந்து வாசிப்புதான் அவருடைய முழு வேலையாக இருந்தது. வாசித்த புத்தகங்களை எறியவும் மாட்டார். யாருக்கும் கொடுக்கவும் மாட்டார். தான் வாசித்த புத்தகங்களை தன் வீட்டுக்குள்ளேயே அரண் போலவே அடுக்கி வைத்திருப்பார். தன்னிடம் இருக்கும் புத்தகங்களை வைப்பதற்கு தன் வீட்டில் இடம் போதாமல் இருப்பதாக என்னிடம் ஒரு தடவை ஆதங்கப் பட்டிருக்கிறார். வாசித்த புத்தகங்களை வாசிகசாலைக்கு கொடுத்து விடுங்களேன் இடம் மிச்சமாகும் என்று நான் சொன்ன போது அதெல்லாம் பாவமான செயல் என்பது மாதிரி மறுத்து தலையாட்டி விட்டுப் போனார். இத்தனைக்கும் நான்கு அறைகள் கொண்ட விசாலமான வீடு அவருடயது.

அடுத்த புதன்கிழமை வேலையில் இருந்து வீட்டுக்கு வந்த பொழுது ஸ்ராபிலின் வீட்டு வாசலில் ஒரு ஆணும் பெண்ணும் நின்றிருந்தார்கள். பல வருடங்களாடக நான் அங்கேதான் குடியிருக்கிறேன். அவர்களை இதற்கு முன்னர் நான் அறிந்திருக்கவில்லை. பொலிஸ் சீல் அகற்றப்பட்டு ஸ்ராபிலின் வீட்டுக் கதவு திறந்திருந்தது. ஸ்ராபிலின் சகோதரியின் மகள் என்று அந்தப் பெண் தன்னை அறிமுகம் செய்து கொண்டாள். அருகில் நின்றவன் அவளது கணவன். நிறைய சிகரெட் புகைப்பவன் என்பதை அவனிடம் இருந்து வந்த நெடி சொல்லிற்று. அடுத்த நாள் வந்து தேவையில்லாத பொருட்களை அகற்றப் போவதாகச் சொன்னார்கள். மறுநாள் மாலையில் பார்த்தேன். மூன்று கொண்டெயினர்கள் ஸ்ராபிலின் வீட்டின் முன்னால் இருந்தன. ஸ்ராபிலின் வீட்டின் யன்னலூடாக அந்த கொண்டெயினர்களுக்குள் புத்தகங்கள் விழுந்து கொண்டிருந்தன. புத்தகங்களில் என்ன விடயங்கள் அடங்கி இருக்கின்றன என்றெல்லாம் அவர்கள் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. அதற்குள் பணம் ஏதாவது இருக்கிறதா என்ற பாணியில் அவர்களது தேடல் இருந்ததை அவதானிக்க முடிந்தது. என்னைக் கண்ட போது மிச்ச மீதிப் புத்தகங்களுக்கு மேலும் இரண்டு கொண்டெயினர்களாவது தேவைப் படும் என்றார்கள்.

„ஸ்ராபிலின் நல்லடக்கம் எப்போ?" என்று அவர்களிடம் கேட்டேன். „இப்போதைக்கு இல்லை. அம்மா விடுமுறைக்கு பிறேசில் போயிருக்கிறார். நாங்களும் அடுத்த கிழமை விடுமுறைக்கு தென் ஆபிரிக்கா போகிறோம். விடுமுறை முடிந்த பிறகுதான் நல்லடக்கம். செப்ரெம்பர் நடுப்பகுதியில் நல்லடக்கத்துக்கு தேதி கேட்டிருக்கிறோம்." என்று ஸ்ராபிலின் மருமகளிடம் இருந்து பதில் வந்தது. அந்த வீட்டுக்கு குடிவரும் எண்ணம் அவர்களுக்கு இல்லை என்பதும் அதை நல்ல விலைக்கு விற்பதே அவர்கள் நோக்கம் என்பதும் அவர்களின் பேச்சில் இருந்து அறிய முடிந்தது.

அவர்களிடம் இருந்து நான் விடைபெறும் போது ஸ்ராபிலின் சாவுக்கு கவலை தெரிவிப்பதா அல்லது அவர்களது விடுமுறைக்கு வாழ்த்து தெரிவிப்பதா என்று எனக்குள் ஒரு குழப்பம். வெறுமனே "மீண்டும் சந்திப்போம் " என்று சொல்லி விட்டு வந்து விட்டேன். பக்கத்து வீட்டுக்காரன், அத்துடன் அவருடன் ஏற்பட்ட பழக்கம் இரண்டுக்குமாக ஸ்ராபிலின் நல்லடக்கத்துக்காக நான் காத்திருக்கிறேன்.



## வெற்றிமணியின் இதய அஞ்சலி

**அமரர் பொ.இராசரத்தினம்**

மலர்வு :01.09.1933 உதிர்வு : 18.08.2017

யாழ்.குரும்பசிட்டியை பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம். இராசரத்தினம் அவர்கள் 18-08-2017 வெள்ளிக்கிழமை அன்று காலமானார். .1965 முதல் 1979 வரை தாயகத்தில் வெற்றிமணியின் பதிப்பாசிரியராகக் கடமைபுரிந்தவர் .

அன்னாரின் பிரிவுக்கு

வெற்றிமணியின் அஞ்சலி





# என் பேரனின் மகன், என் மகனின் பேரன்.

ஆக்கம் சிவவினோபன்

"என் பேரனின் மகன், என் மகனின் பேரன்." என்ற வசனத்தை உற்றுப் பார்த்தீர்கள் என்றால், பல வெற்றிகளைக் கண்ட மனிதன் கால ஓட்டத்தில் தொடர்ச்சியாக நகர முடியாமல் அறிவு விருத்தியில்லாமல் ஸ்தம்பித்துப் போய் நிற்பதை உணர முடியும். விஞ்ஞானம் இயற்கையில் உள்ள விந்தைகளை வித்தியாசப் படுத்தி காண்பித்தவுடன் விஞ்ஞானத்தை நம்பத் தொடங்கிய மனிதன் இயற்கையை மறந்து விட்டான் என்பது தான் உண்மை.

அப்படி மனிதன் மறந்த இயற்கையை நோக்கி அறிவியலின் அடுத்தகட்ட பயணம் தான் காலப் பயணம். காலப் பயணம் என்பது கற்பனையில் கூட சாத்தியமாகாது என்று நம்பிய அறிவியல் மேதை ஐன்ஸ்டீன் கூட ஒரு கட்டத்தில் அதற்க்குக் கற்பனைத் தேற்றம் எழுதிவைத்துவிட்டுச் சென்றுள்ளார். அந்தத் தேற்றத்தின் மூலம் தான் இந்தக் கற்பனைக்கே பெயர் வடிவம் கிடைத்தது. காலத்தைக் கடத்தல் என்று கூறிக்கொண்டு இருந்த அறிஞர்கள் அனைவரும் காலப் பயணம் என்ற வார்த்தைப் பதத்தைப் பாவிக்கத் தொடங்கினார்கள். அவ்வாறு காலப் பயணத்தை நிர்ணயித்த ஐன்ஸ்டீனின் கருத்து எவ்வாறு இருந்ததென்றால், ஒளியின் வேகத்தில் பயணித்தால் ஒருவேளை எதிர்காலம் சென்றடைய வாய்ப்புண்டு என்று கூறினார். அவ்வாறு ஒரு சிந்தனை அவருக்கு வரக் காரணமாக இருந்த முக்கிய விடையம் கடிகாரமாகும். அதனால் தான் இன்று வரை அனைவரும் கடிகாரத்தை கால இயந்திரம் என்ற கற்பனையுடன் இணைத்து வருகின்றனர். ஆனால் ஐன்ஸ்டீனின் இந்த தத்துவ விளக்கத்தை ஆதித் தமிழன் அப்போதே நிறுவிக் காட்டி விட்டான் என்றால் நம்ப முடிகின்றதா? அது தான் உண்மை. பாட்டி சொல்லும் கதைகளில், தேவலோகம் என்று ஒன்று உண்டு அங்கு ஒரு நாள் என்பது எங்கள் உலகத்தின் ஒரு வருடம் ஆகும். தேவலோகத்தில் பகல் என்பது எங்கள் உலகில் தை மாதம் தொடக்கம் ஆனிவரை என்றும், இரவென்பது ஆடி தொடக்கம் மார்கழி என்றும் கூறுவார். இதில் இன்னும் ஒரு உண்மை ஒளிந்துள்ளது, அது என்னவென்றால் அதற்கேற்றால் போல் சூரியனும் வெவ்வேறு திசைகளின் இதே கால கட்டத்தில்ப் பயணிக்கின்றது அதை உத்தராயண காலம் தட்சணாயண காலம் என்பார்கள்.

தமிழ் படிக்காத காரணத்தாலும், தலை கனக்காத காரணத்தாலும் இவற்றை நம்மால் வெளி உலகிற்கு வெளிப்படுத்தமுடியவில்லை. ஐன்ஸ்டீன் முந்திக் கொண்டார். அப்படி முந்திக் கொண்ட ஐன்ஸ்டீனின் கருத்துக்களைத் தொடர்ந்து அதை வரையறுக்க பல காரணங்கள் முன்வைக்கப் பட்டது, ஔவையார் கண்டு பிடித்த அணுக்கள் கதிர்வீச்சை வெளிப்படுத்தும். அந்தக் கதிர்வீச்சைக் கொண்டு வினாடிகளைக் கணிக்கத் தொடங்கினார்கள் அறிவியலாளர்கள். அதாவது மணிக்கூட்டில் இருக்கும் ஒரு வினாடிக்கு இன்னுமோர் வரைவிலக்கணத்தை கதிர்களின் வேகம் கொண்டு கணித்தார்கள். அப்படிப் பட்ட கதிர்வீச்சு அணுக்களின் ஆயுட்காலத்தை நிர்ணயிக்கும் ஒரு விடையமாகும், அதனால் விஞ்ஞானிகள் வேகமாக இயங்கும் அணுக்கள்( அண்ணளவாக ஒளியின் வேகத்தில் இயங்கும் அணுக்கள்) 30 மடங்கு அதிகமாக வாழ்வதை உணர்த்தினார்கள். இதுவே அதிக நம்பிக்கையை ஏற்படுத்தியது, மனிதனும் அணுக்களால் உருவானவன் தான் ஆகவே வேகமாகப் பயணித்தால் எதிர்காலம் சென்று விடலாம் என்று நம்பத் தொடங்கினான்.

அதற்கு அத்தனை வேகத்தில் பயணிக்க கண்டு பிடிக்காத இன்றைய கால விஞ்ஞானிகள் கருந்துளையை ஆராய்ச்சி செய்யத் தொடங்கி விட்டனர். இந்தக் கருந்துளை என்பது இன்று விசித்திரமாக இருக்கும் ஒரு விந்தையாகும், ஆனால் அதைக் கூட அன்றே எங்கள் முன்னோர்கள் அடையாளம் கண்டு விட்டனர். ஆதி நாராயணன், சிவன், விநாயகர் என்று தெய்வங்களின் கைகளில் ஒரு சக்கரம் இருக்கும் அது வேகமாகச் சுற்றிக் கொண்டே இருக்கும் என்று சொல்வார்கள், இப்போது கூட உங்கள் வீடுகளில் இருக்கும் தெய்வங்களின் புகைப்படங்களிப் பாருங்கள் அந்தச் சக்கரம் இருக்கும்.

தமிழன் அன்றே கண்டுபிடித்து பயன்படுத்திய அந்த விஞ்ஞானத்தை கால ஒட்டத்தில் தொலைத்துவிட்டோம், அவ்வாறு தொலைத்ததை இன்று கூட கண்டு பிடிக்க முடியாமல் இருப்பது தான் அறிவியலுக்கும் இயற்கைக்கும் உள்ள அதிசய வித்தியாசம் ஆகும். கடவுளின் கைகளில் உள்ள சக்கரத்திற்கும், கருந்துளைக்கும் என்ன ஒற்றுமை என்றால், வேகம் தான் ஒற்றுமை. கருந்துளை என்பது அண்டவெளியில் உள்ள ஒரு சூறாவெளி, அது சுழன்று கொண்டே இருக்கும் நடுவில் ஒரு துளை போல இருக்கும், அதற்குள் செல்லும் விண்கற்கள் நச்சத்திரங்கள் காணாமல்ப் போய்விடுமாம். நிகழ் காலத்தில் வாழும் விஞ்ஞானிகள் அந்தத் துளையைப் பயன்படுத்தி வேகமாகப் பயணனித்தால் எதிர்காலம் சாத்தியம் என்கின்றார்கள்.

இதற்க்கு அவர்கள் கூறும் விளக்கம், ஈர்ப்பு விசை அற்ற விண்வெளியில் பயணிக்கும் செயற்கைக் கோள்கள் எல்லாம் தன் திசையை மாற்ற கோள்களைப் பயன் படுத்துகின்றன. கோள்களின் ஈர்ப்புக்குள் சென்று அதைச் சுற்றி வந்து வேண்டிய திசையை நிர்ணயித்து அத் திசையில் ஈர்ப்பில் இருந்து விடுபடும் போது, தன் திசையை வெற்றிகரமாக மாற்றிக் கொள்கின்றது.அதே போல் கருந்துளைக்குள் சென்று அதன் ஈர்ப்புவிசையைப் பயன்படுத்தி வேகமாகப் பயணித்தால் வேகம் போதுமாகும் போது விடுபட்டு பூமிக்கு வரும் போது காலப் பயணம் நிகழ்ந்திருக்கும் என்று சொல்கின்றனர். ஆனால் அவை அனைத்தும் கற்பனையே, மற்றும் அத்தனை வேகத்தில் பயணித்தால் மனிதனால் உயிர் வாழ முடியாது அதே நேரம் பயணிக்கும் வாகனமும் சேதமடையும். இந்த இரு பிரச்சனைக்கும் எப்போது தீர்வு காண்கின்றதோ அப்போது உள்ள ஒருவரின் பேரனின் மகன் அவருடைய மகனுக்கு மகனாக இருக்க வாய்ப்புண்டு.என் பேரனின் மகன் !என் மகனின் மகன். புரியாதவர்கள் கட்டுரையை முதலில் இருந்து வாசிக்கவும்.

திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி




சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

ALL LUXURY AND EXQUISITE COMFORTS TO SUIT YOUR BUDGET



USD 75.00
• Inclusive of all taxes and service charges
• On Single or Double basis with a complimentary breakfast.

As a special introductory offer Bookings for 5 or more continuous nights will be entitled for 1 free night stay*
*Valid only for the months of September, October and November 2017 and please provide this paper-cutting upon checking in to be entitled for this offer



• எமது விடுதிக்கு அருகாமையில் கொழும்பு இராமகிருஸ்ண மிஷன்,ஐஸ்வரிய அம்மன் கோவில் மற்றும் யாழ்ப்பாணம்,திருகோணமலைக்கான பஸ்தரிப்பிடங்கள் என்பன அமைந்துள்ளன.

FAIRVIEW HOTEL
Welcome home

FAIRVIEW HOTEL, Ramakrishna Road, Colombo-06
T: +94 112 058843, +94 112 058 392 E: reservations@fairviewhotel.lk W: www.tangerinehotels.com
*Terms and Conditions apply.



Dr. IN


# நெஞ்சு நிறையப் பாடுங்கள் சுவாச நோய்கள் பறந்தோடும்.

**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**

பாடுங்கள் பாடுங்கள் நெஞ்சு நிறையப் பாடுங்கள். சுவாச நோய்கள் பறந்தோடும். இசையின் நோய் தீர்க்கும் ஆற்றல் பற்றி நிறையவே பேசப்பட்டிருக்கின்றன. பல திரைப் படங்களில் மயங்கிக் கிட்கதும் நோயாளி மனக்குப் பிடித்தமான பாடலைக் கேட்டவுடன் விழித்தெழுவதைக் கண்டிருக்கிறோம். அது உண்மையாக இருக்க முடியாது என்பதை மூளை சொன்னாலும் மனங் கேட்பதில்லை. இசை எங்கள் உணர்வுகளோடு ஒன்றியது. பாடுவதானது, மூச்செடுப்பதில் சிரமப்படும் நோயாளிகளது துன்பத்தைக் குறைத்து சுவாசத்தை இலகுவாக்கும் என அண்மையில் ஒரு ஆய்வு கூறுகிறது.

மூச்செடுப்பதில் சிரமம் என்பது நோயாளியின் நூளந்த வாழ்வைப் பாழடிக்கக் கூடிய சிரமமான நோயாகும். நாம் எந்த நேரமும் சுவாசித்துக் கொண்டே இருக்கிறோம். அனால் அதை உணர்வதில்லை. அது இயல்பாக நடந்து கொண்டே இருக்கிறது. ஆஸ்த்மா போன்ற நோய்கள் வரும் போதுதான் சுவாசிப்பது சிரமம் என்பதை உணர்கிறோம். ஆனால் ஆஸ்த்மா தணிந்ததும் சுவாசம் இலகுவாகிறது.

Chronic Obstructive Pulmonary Disease (COPD)




ஆனால் நாட்பட்ட சுவாசத் தடை நோய் Chronic obstructive pulmonary disease (COPD) என்பது வெறுமனே மூச்செடுப்பதில் சிரமம் அல்ல. அது வர வர மோசமாகிக் கொண்டு போகும் ஒரு நோயாகும். அத்துடன் ஆஸ்த்மா வின் வரட்சியான இருமல் போல்லல் லாது இருமம்போது நிறையச் சளி கொட்டும். ஆனால் ஆஸ்த்மா போலவே நெஞ்சை அடைப்பது அல்லது இறுக்குவது போன்ற உணர்வையும் ஏற்படுத்தும்.

இது பொதுவாக புகைப்பவர்களிடையே தோன்றும் ஒரு நோயாகும்.

புகைத்தலைத் தவிர சுவாசப்பையை உறுத்தக் கூடிய பலவும் இந்நோய் வருவதற்குக் காரணமாகலாம். உதாரணமாக சூழல் மாசடைதல், வேறு புகைகள், இராசாயன மணங்கள், தூசி போன்றவையும் COPD ஏற்படு வதற்குக் காரணமாகலாம். இந் நோயுள்ளவர்களுக்கு சுவாசிப்பது என்பது பெரும்பாடாக இருக்கும். நாம் சுவாசிக்கும்போது மூக்கு வழியாக உள்ளே செல்லும் காற்றானது மூச்சுக்குழல் வழியாகச் சென்று அதன் கிளைக்குழாய்கள் ஊடாகப் பயணித்து இறுதியாக மூச்சுச் சிற்றறைகளை அடையும். திராட்சைப் பழக் கொத்துகள் போல சுவாசப்பையை நிறைத்திருக்கும் இந்த மூச்சுச் சிற்றறைகள் ஊடாகவே நாம் சூழலிருந்து பெறும் காற்றில் உள்ள ஒட்சிசன் வாய்வு எமது உடலுடன் இணைகிறது.

இரத்தக் குழாய்களின் மிக நுண்ணிய பகுதியான மயிரிழைக் குழாய்கள் மேற் கூறிய மூச்சுச் சிற்றறைகளின் சுவரில் இணைந்திருக்கின்றன. நாம் சுவாசக்கும் காற்று மூச்சுச் சிற்றறைகளை அடைந்ததும் காற்றில் உள்ள ஒட்சிசானது மயிரிழைக் குழாய்களில் நிறைந்திருக்கும் குருதியால் உறிஞ்சி எடுக்கப்படுகிறது. அதே நேரம் கழிவுக் காற்றான காபனீர் ஒட்சைட் குருதியிலிருந்து மூச்சறைச் சிற்றறைகளுக்குள் கடத்தப்பட்டு சுவாசக் குழாய்கள் ஊடாக வெளி யேற்றப்படுகிறது.

இவ்வாறு நடைபெறுவதற்கு எமது மூச்சுச் சிற்றறைகள் நெகிழ்வுத் தன்மையுடையவையாக இருக்க வேண்டும். அதாவது காற்றை ஊதினால் பலூன் விரிவடைவது போல விரிவடைந்து காற்று வெளியேறியதும் சுருங்க வேண்டும்.

ஆனால் மேலே கூறிய நாட்பட்ட சுவாசத் தடை நோயின் போது மிகக் குறைந்தளவு காற்று மாத்திரம் சுவாச தொகுதியூடாக பயணிக்க முடிகிறது. இதனால் குறைந்தளவு ஓட்சிசன் மட்டுமே எமது உடலுக்குக் கிடைக்கிறது. மூச்சுத் திணறலுக்கு இதுவே காரணமாகிறது. படிப்படியாக மோசமாகிக் கொண்டு செல்லும் இந்நோயிலிருந்து மீட்டு எடுப்பது முடியாத காரியமாகவே இருந்தது.

இந்தகைய சூழலில், நாட்பட்ட சுவாசத் தடையுள்வர்கள் மூச்சு எடுப்பதில் சிரமப்படுவதை பாடுவதானது குறைக்கும் என அண்மையில் நடந்த மருத்துவர்கள் (American College of Chest Physicians) கூட்டத்தில் எடுத்துரைக்கப் பட்டதானது நம்பிக்கை ஊட்டும் செய்தியாகும்.

பாடுவது எவ்வாறு சுவாசத்தை இலகுவாக்குகிறது?

பாடுவதானது ஒரு நுணுக்கமான கலையாகும். இதனைச் செய்வதற்கு எமது சுவாசத் தொகுதியில் உள்ள தசைகளின் இயக்கத்தை, துல்லியமாக நாம் எமது கட்டுப்பாடிற்குள் கொண்டு வருகிறோம். எம்மையறியாமலே இது நிகழ்கிறது. தன்னிச்சையாக இயங்கும் எமது சுவாசத் தொகுதியானது இதன் மூலம் எமது மனதின் கட்டுப்பாற்றிற்குள் வருகிறது. இயங்க மறுக்கும் அல்லது இறுகிப் போயிருக்கும் எமது சுவாசத் தொகுதித் தசை நார்கள் இப்பொழுது இசைவாக இயங்குகின்றன.

31 பேரைக் கொண்ட சிறிய ஆய்வுதான் இது. 12 வாரப் பாடற் பயிற்சியின் பின் அத்தகைய நோயாளர்களின் சுவாசத்தில் முன்னேற்றம் காணப்பட்டதாம். 84 சதவிகிதமான நோயாளர்கள் இது ஆறதல் அளிப்பதாகக் கூறினர். 64 சதவிகிதமானவர்கள் இது அசௌகரியமான பயிற்சியாக இல்லை என்றனர். மிகவும் முக்கியமான விடயம் 64 சதவிகிதமானவர்கள் தாம் இதனைத் தொடர்ந்து செய்யப் போவதாகத் தெரிவித்தனர்.

அவர்களது உடல் நலமும், சிரமமான சுவாசமும் தேறியதற்கு உளவியல் காரணங்களும் இருக்கக் கூடும். இசை கொடுக்கும் இதமான உணர்வுகளுக்கு அப்பால் தன்னால் முடியும் என்ற நம்பிக்கையை வளர்ததும் காரணமாக இருக்கலாம். காரணங்கள் எதுவாக இருந்தாலும் பாடுவது நல்லது. அது மன நிறைவைக் கொடுக்கும், மனச்சிறைகளிலிருந்து விடுபட உதவுகிறது. நோயைத் தணிக்கும் ஆற்றலும் இருக்கிறது. பிறகென்ன பாடுங்கள். தினசரி பாடுங்கள். இறைவனைத் துதிக்கையில் பாடுங்கள். குளிக்கும்போது குளியலறையிலும் பாடுங்கள். வானொலியில் தொலைக் காட்சியில் பாட்டுகள் வரும்போது சேர்ந்து பாடுங்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பாடிக்கொண்டே இருங்கள்.



# தமிழ்நாட்டில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர் நாகரிகம் பூதமாக வெளிவந்துள்ளது.






பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டிருக்கும் சுடுமண் உறைகேணிகள் இருந்ததற்கான சான்று





## பழந்தமிழர் நாகரிகத்தின் கருவூலம் !

கீழடியில் இதுவரை கிடைத்துள்ள பொருட்களை ஆய்வுசெய்கையில் ஒன்றில்கூட மதம் தொடர்பான அடையாளங்கள் இல்லை என்பது. "தமிழ் மொழியைச் சமயச்சார்பற்ற மொழி" என்று மதிப்பீடு செய்த அறிஞர் கால்டுவெல்லின் கருத்தை உறுதி செய்கின்றன.

ஆரியர்களுக்கு முன்பே, அவர்களைவிடச் சமூக அமைப்பிலும், கலாச் சாரத்திலும், கலை இலக்கியங்களிலும் முன்னேறிய சமூகமாக, திராவிட சமூகம் விளங்கியது என்பது கால்டுவெல் போன்றவர்களின் மொழி ஆய்வுகள் மூலமாகவும், சங்க இலக்கிய ஆய்வுகள் மூலமாகவும், சிந்து சமவெளி அகழ்வாராய்ச்சியின் மூலமாகவும் ஏற்கெனவே நிருபிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், ஆரிய கலாச்சாரத்திற்கு முந்தைய, அதற்குச் சற்றும் தொடர்பில்லாத, சங்க இலக்கியங்கள் சுட்டிக்காட்டும் வகையில் அமைந்த ஒரு நகர சமூக அமைப்பு தமிழ்நாட்டில் இருந்திருக்கிறது என்பதை உறுதி செய்யும் வரலாற்றுச் சான்றுகள் கீழடி அகழ்வாய்வின் மூலம் தற்போது கிடைத்துள்ளது.

இந்து மதசார்பான அரசு மிக முக்கியமான இந்தக் கண்டுபிடிப்பை இருட்டடிப்பு செய்வதுடன், கீழடி ஆய்வைத் தொடரவிடாமல் முட்டுக்கட்டை போடும் வேலையிலும் மத்திய அரசு இறங்கியது. பா.ஜ.க. அரசின் இந்த போக்கிற்கு எதிராகத் தமிழகத்தின் அறிவுத்துறையினர், அரசியல் கட்சிகள், ஜனநாயக சக்திகள் எனப் பலரும் கண்டனங்கள் எழுப்பிய பிறகு, கீழடி ஆய்வுகள் தொடரும் என அறிவித்துத் தற்காலிகமாகப் பின்வாங்கியிருக்கிறது, இந்து பா.ஜ.க. அரசு.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்திற்கு அருகில் உள்ள கீழடியில் மைய அரசின் தொல்லியல் துறை கடந்த இரண்டு ஆண்டுகளாக, இரண்டு பிரிவுகளாக அகழாய்வு நடத்தியது. வைகையாற்றுக் கலாச்சாரம் என ஆய்வாளர்களால் அழைக்கப்படும் கீழடி பள்ளிச்சந்தைத் திடலில் காணப் படும் தொல்லியல் மேடு 110 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இதில் வெறும் 50 செண்ட் நிலப்பரப்பில் நடந்த அகழாய்வு மூலம், ஏறக்குறைய கி.மு. 1000-இல் தென்னிந்தியாவில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம் போன்றவற்றை நிரூபிப்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

வரிசை வரிசையாகக் கால்வாய்கள் அதன் முகப்பிலே பெரும் தொட்டிகள் தொட்டிக்குள் தண்ணீர் உள் செல்லவும் வெளி வருவதற்குமான அமைப்புகள் கால்வாய் தடத்தை ஒட்டிச் சிறியதும் பெரியதுமான ஆறு உலைகள் கால்வாயின் ஆரம்பப் பகுதியில் வட்டக் கிணறுகள் மூடிய வடிகால்கள், திறந்த வடிகால்கள், சுடுமண் குழாய்களினால் ஆன வடிகால்கள் என மூன்று விதமான வடிகால் அமைப்புகள் என்றவாறு ஒரு முழுமையான நகர அமைப்பை உறுதி செய்யும் சான்றுகள், தென்னிந்தியாவில் முதன் முறையாகக் கீழடியில்தான் கிடைத்திருக்கிறது.

சிவகங்கை மாவட்டம், கீழடியில் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்ட பகுதி. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர் நாகரிகம் பூதமாக வெளிவந்துள்ளது.

பத்திற்கும் மேற்பட்ட வீடுகள் அல்லது கட்டிடங்கள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டு, அதன் மேற்கூரைகள் ஓடுகளால் வேயப்பட்டு இருந்திருக்கலாம் எனவும், வீடுகளின் அருகே பட்டினப்பாலையில் குறிப்பிடப்படும் சுடுமண் உறைகேணிகளும் இருந்திருக்கலாம் எனவும் இங்கு கிடைத்துள்ள சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. மேலும், ஆப்கானிஸ்தானில் கிடைக்கும் சூது பவளத்திலான மணிகளும், ரோமாபுரியைச் சார்ந்த மட்பாண்டங்களும், வட இந்திய பிராகிருத எழுத்துக்களும் கிடைத்துள்ளன. தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கருப்பு, சிவப்பு நிறங்களிலான ஏறத்தாழ 1,000 கிலோகிராம் எடையளவுக்கு மண் ஓடுகளும் அகழ்வாராய்ச்சியில் கிடைத்திருக்கின்றன.

சிந்து சமவெளி நாகரிகத்தில்கூட மட்பாண்டங்கள் வெளிப்புறத்தில் சுடப்பட்டதைக் குறிக்கும் வகையில், அவற்றின் வெளிப்புறம் கருநிறத்தில் இருந்தன. ஆனால், கீழடியில் கிடைத்த மட்பாண்டங்கள் உட்புறத்திலிருந்து சுடப்பட்டதைக் குறிக்கும் விதமாக அவற்றின் உட்புறம் கருநிறத்தில் இருக்கிறது. கீழடியில் வாழ்ந்த சமூகம் தொழில்நுட்பரீதியில் முன்னேறிய சமூகமாக இருந்திருப்பது இதன் மூலம் தெரியவந்துள்ளது.

பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டிருக்கும் சுடுமண் உறைகேணிகள் இருந்ததற்கான சான்று.

தொடர்ச்சி 12ம் பக்கம்...






"சனீஸ்வரனைப் போல் கொடுப்பாரும் இல்லை,
கெடுப்பாரும் இல்லை"

புரட்டாதிச் சனி விரதம்" என அழைக்கப்படுவது புரட்டாதி மாதத்தில் (தமிழ் மாதம்) வரும் சனிக்கிழமைகளில் சனிபகவானை நினைந்து சனி தோஷம் நீங்க கடைப்பிடிக்கப்படும் விரதமாகும். இவ் வருடம் செப்ரெம்பர் மாதம் 23ம் திகதி (23.09.2017) முதலாவது புரட்டாதிச் சனி விரதமும் அன்றிலிருந்து அடுத்து நான்கு புரட்டாதிச் சனி விரத நாட்களாக இவ் வருடம் அமை கின்றது.





சனீஸ்வரன் கோசாரமாக சஞ்சரிக்கும் போது (தற்போதைய கிரக சஞ்சாரத்தில்) ஒருவருடைய ஜாதகத்தில் சந்திரன் நிற்கும் (சந்திர) இராசிக்கு 5 வது இராசியில் சஞ்சரிக்கும் காலம் பஞ்சம சனியென்றும் 8 வது ராசியில் சஞ்சரிக்கும் காலம் அட்டமத்துச் சனியென்றும் 12 வது இராசியிலும், சந்திர இராசியிலும், சந்திரனுக்கு 2 வது இராசியிலும் சஞ்சரிக்கும் காலம் ஏழரைச் சனியென்றும் இவ் மூன்று ராசிகளையும் கடக்க எடுக்கும் காலம் ஏழரை ஆண்டுகள் ஆகின்றன. அதனால் ஏழரைச் சனியென்று கூறுவர்.

சனீஸ்வரர் சூரிய பகவானுக்கும் சாயா தேவிக்கும் புரட்டாதி மாத முதல் சனிக்கிழமை பிறந்தவர். இவர் மந்தகதி உடையவர். சனீஸ்வரர் ஒரு ராசியைக் கடக்க இரண்டரை வருடங்கள் ஆகின்றன. ஆகவே ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒவ்வொரு முப்பது ஆண்டுகளுக்கு ஒரு தடவை இத் தோஷங்கள் சுழற்சியாக ஏற்படுகின்றன. அதனால் போலும் 30 வருடங்களுக்கு மேல் கஷ்டமாக வாழ்ந்தவர்களும் இல்லை சிறப்பாக வாழ்ந்தவர்களும் இல்லை என்ற முதுமொழி பிறந்தது.

வாழ்க்கையில் முதலில் வரும் ஏழரைச் சனி காலத்தை மங்கு சனி என்றும், இரண்டாவதாக வருவதை பொங்கு சனி என்றும், மூன்றாவதாக வருவதை மரணச் சனி என்றும் அழைப்பர். இக்காலங்க்களில் பெயருக்கு ஏற்றாற்போல் மற்றைய கிரகங்க்களின் நிலைகளைப் பொறுத்து பலங்கள் கிடைக்கும் என்கின்றது ஜோதிடம்.

இத் சனிதோஷகாலங்களில் புத்திர பாக்கியக் குறைவு, மரண பயம், அதிக பிரயாணம், அதிக செலவு, பண நஷ்டம், தேகசுகக் குறைவு, வீண் சச்சரவு என்பன உண்டாம். இவை யாவும் சனிதோஷத்தினால் ஏற்படுபவை என ஜோதிடத்தில் கூறப்பெற்றுள்ளது. இத் தோஷத்தினால் பீடிக்கப் பெற்றவர்கள் தோஷநிவர்த்தி செய்வதால் சனீஸ்வரன் மகிழ்வுற்று தாக்கங்கள் குறைவடைந்து நன்மைகள் ஏற்படுவதாக ஐதீகம் இவற்றுள் ஏழரைச் சனிகாலம் மிகவும் கஷ்டமான காலமாகஜோதிடம் கணிக்கின்றது.

இதிகாக புராணங்களில்:-





அரிச்சந்திர மகாராஜான் அரசிழந்து சுடலையில் காவல்காரன் ஆனதும், பாண்டவர்கள் 12 ஆண்டுகள் வனவாசம் செய்ததும், இராமபிரான் வனவாசம் செய்ததும், சீதை இராவணனால் கவரப்பட்டு சிறையிலிருந்ததும் சனீஸ் வரனின் தோஷத்தாலே என்று நூல்கள் கூறுகின்றன.

**"சனீஸ்வரனைப் போல் கொடுப்பாரும் இல்லை,**
**கெடுப்பாரும் இல்லை"**

என்பது சோதிடப் பழமொழி. அதனால் மக்களுக்குச் சனிபகவானிடம் சற்று அச்சம் உண்டு. இவ் இராசிகளில் சனீஸ்வரன் சஞ்சரிக்கும் போது பல கஸ்டங்களையும் நஸ்டங்களையுந் தந்து துன்பப்படுத்திய சனீஸ்வரன் இவ் இராசிகளைக் கடந்து அடுத்த ராசிக்கு செல்லும் போது நஸ்டங்களை ஈடுசெய்யும் வகையில் கொடுத்து விட்டுச் செல்வார் என்பது ஐதீகம்.

**தொடர்ச்சி 21ம் பக்கம்**





பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டிருக்கும் சுடுமண் உறைகேணிகள் இருந்ததற்கான சான்று.

கீழடியில் தொழிற்பட்டறைகள் இருந்ததற்கான அடையாளங்களும் கண்டறியப்பட்டுள்ளன. நெசவுக்குரிய தக்கையில் துவங்கி எண்ணற்ற எளிய தொழில்நுட்பக் கருவிகள் கண்டறியப்பட்டுள்ளன. கீழடியில் கண்டறியப்பட்ட சுமார் 5,300-க்கும் மேற்பட்ட பொருட்களில் வணிகம், கலை, தொழில்நுட்பம், எழுத்தறிவு ஆகியவற்றின் சான்றுகளைக் காண முடிகிறது. மொத்தத்தில், ஒரு மேம்பட்ட நாகரிகத்தைக் கொண்ட சமூக அமைப்பாக கீழடி இருந்துள்ளது.

சென்ற ஆண்டு (டிசம்பர் மாதம்) திருவனந்தபுரத்தில் நடைபெற்ற இந்திய வரலாற்றுப் பேராயத்தின் மாநாட்டில் கீழடி அகழாய்வு தொடர வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றட்டிருக்கிறது. அந்த அமர்வுக்குத் தலைமை வகித்த வரலாற்று அறிஞர் ரொமிலா தாப்பர், "கீழடியானது தமிழகத்தில் கிடைத்துள்ள மிக முக்கியமான கண்டுபிடிப்பாகும். இதன் மூலம் தமிழக வரலாற்றை மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். அதற்கான ஆய்வு மேலும் தொடர வேண்டும்" என்று உரையாற்றியிருக்கிறார்.

கீழடியில் கிடைத்துள்ள சான்றுகள் அனைத்தும், வெறும் 50 செண்ட் நிலத்தில் நடத்தப்பட்ட அகழ்வாய்வில் கிடைத்தவை. மொத்தமாக உள்ள 110 ஏக்கர் நிலத்திலும் அகழ்வாய்வு செய்தால், அது தமிழக வரலாற்றை மட்டுமல்ல இந்திய வரலாற்றையே திருப்பிப் போடும் ஒரு அகழ்வாராய்ச்சியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. 1970-க்குப் பிறகு தமிழகத்தில், மைய அரசின் தொல்லியல் துறையால் நடத்தப்படும் மிகப்பெரிய ஆய்வு கீழடி மட்டுமே.

கீழடியில் இதுவரை கிடைத்துள்ள பொருட்களை ஆய்வுசெய்கையில் ஒன்றில்கூட மதம் தொடர்பான அடையாளங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஏனென்றால், பழங்காலத் தமிழர்களின் பண்பாடு மூத்தோர் வழிபாடு, நடுகல் வழிபாடு சார்ந்த பண்பாடாகும். பிற்காலத்தில்தான் மதங்கள் தோன்றியிருக்கின்றன. சங்க இலக்கியங்கள் கூறுகின்ற, மதங்கள் தோன்றுவதற்கு முந்தைய நாகரிகத்தின் அடையாளம்தான் கீழடி. "தமிழ் மொழியை ஒரு சமயச்சார்பற்ற மொழி" என்று மதிப்பீடு செய்த மொழியியல் அறிஞர் கால்டுவெல்லின் கருத்துக்குச் சான்றாக கீழடி நாகரிகம் இருப்பதை இந்த ஆய்வுகள் உறுதி செய்கின்றன. பெருந்தெய்வங்கள் மற்றும் மதமற்ற சமூகம் இந்தியாவில் இருந்துள்ளது என்பதை நிறுவுகிற ஆய்வுகளை, இந்தியச் சமூகமே வேத-வைதீக மரபுடையது எனக்கூறிக்கொள்ளும் இன்றைய அரசால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மட்பாண்டங்கள் உட்புறத்தில் சுடப்பட்டு பயன்படுத்தப்பட்டிருப்பதற்கான சான்று அதனால்தான் இந்த ஆய்வை, அதன் துவக்க நிலையிலேயே நிறுத்தி வைப்பது என்ற முடிவை மத்திய பா.ஜ.க. அரசு எடுத்தது. குஜராத்தின் தொலவிராவில் 13 ஆண்டுகள், லோத்தலில் 5 ஆண்டுகள், ஆந்திராவின் நாகார்ஜுன கொண்டாவில் பத்து ஆண்டுகள் அகழாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆனால், கீழடி ஆராய்ச்சியை மட்டும் இரண்டே ஆண்டுகளோடு மங்களம் பாடுவதற்கு பா.ஜ.க. அரசு முனைப்புடன் செயல்பட்டது. தற்போது வேறு வழியின்றி மூன்றாம் கட்ட அகழ்வாய்வு நடைபெறும் என அறிவித்திருக்கிறது. தமிழக மக்கள் விழிப்போடு இல்லையென்றால், இந்த அறிவிப்பைக் கிடப்பில் போட்டுவிடவும் காவிக் கும்பல் தயங்காது.

மேலும், அகழாய்வில் கண்டறியப்பட்ட பொருட்களில் எத்தனை பொருட்களின் மூலக்கூறு மாதிரிகளை கார்பன்-14 (கார்பன் தேதியிடல்) பகுப்பாய்வுக்கு அனுப்ப வேண்டும் என்பதை மத்திய தொல்லியல் துறைதான் முடிவு செய்யும். இந்நிலையில் இராஜஸ்தான் காளிபங்கன் அகழாய்வில் இருந்து 28 பொருட்களையும், தொலவிராவில் இருந்து 20 பொருட்களின் மாதிரியையும் ஆய்வுக்கு அனுப்பி வைத்துள்ளனர். கீழடியில் கண்டறியப்பட்ட மூலப் பொருட்களின் மாதிரியில் குறைந்தது பத்து மாதிரிகளையாவது ஆய்வுக்கு அனுப்ப வேண்டும் என ஆய்வாளர்கள் கூறி வந்த நிலையில், இரண்டை மட்டுமே கார்பன்14 பகுப்பாய்வுக்கு அனுப்ப மத்திய தொல்லியல் துறை அனுமதித்துள்ளது.

சரஸ்வதி நதியைக் கண்டறியவும், அந்நதியே சிந்து சம்வெளி நாகரிகத்திற்கான தொடக்கம் எனக் கூறி, தாங்கள் இதுவரைப் பிரச்சாரம் செய்தது அனைத்தும் உண்மை என நிரூபிக்கக் கோடிக்கணக்கில் செலவிட்டுக் கொண்டிருக்கிற இக்கூட்டம், அறிவியல்பூர்வமாக கீழடியில் நடத்தப்படும் ஆய்வை மட்டும் மாற்றந்தாய் மனப்பாங்கு கொண்டு பார்க்கிறது. மேலும், அயோத்தியில் இராமாயண அருங்காட்சியகம் அமைக்க ரூ.151 கோடியை ஒதுக்கியுள்ள மத்திய அரசு, கீழடியில் கண்டறியப்பட்ட பொருட்களைக் காலப் பகுப்பாய்விற்கு அனுப்ப வெறும் ஒரு இலட்சத்தை மட்டுமே ஒதுக்கியுள்ளது.




**வட்டவடிவிலான உலைகள்**

ஒரே கலாச்சாரம், ஒரே மொழி, ஒரே நாடு இந்து, இந்தி, இந்தியா என்ற தங்களது அரசியல் நோக்கத்திற்கு ஏற்றவாறு நம் நாட்டின் வரலாற்றைக் கட்டமைக்கவே இந்திய அரசு விரும்புகிறது. ஆனால், இதனை உண்மை என நிறுவுவதற்கு அவர்களிடம் சான்றுகள் எதுவும் இல்லை. புராணங்களிலும், இதிகாசங்களிலும் கூறப்பட்டுள்ள கதைகளை மட்டுமே அவர்களால் சான்றுகளாகக் காட்ட முடிகின்றது. இந்தக் கதைகளை உண்மை என நிரூபிக்கும் ஆதாரங்களைத் தேடுவதையே இந்தியத் தொல்லியல் துறையின் முழுநேரப் பணியாக அவர்கள் மாற்றியிருக்கின்றனர்.

இந்திய மொழிகள் அனைத்திற்கும் சமஸ்கிருதம்தான் தாய் மொழி என்ற பிரச்சாரத்திற்கு எதிராக, தமிழ் மொழி சமஸ்கிருதத்தின் சார்பு இல்லாமல் தனித்து இயங்கக் கூடிய செம்மொழி என்றும், தமிழ் உள்ளிட்ட தென்னிந்திய மொழிகள் அனைத்தும் சமஸ்கிருதத்துக்கு நேர் எதிர் தன்மை கொண்ட திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்றும் கால்டுவெல்லால் ஏற்கெனவே நிரூபிக்கப்பட்டுள்ளது.

-அழகு

நன்றி வினவு

உங்கள் தாய் மொழியில்....
HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
எமது இணையத்தளத்தை பார்க்கவும்
Fahrschule- hk- hammacher.de


ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு
வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும்
மோட்டோசைக்கிளிற்கும்
சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.
A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen



# இலங்கையின் போக்குவரத்துச் சீர்கேடும் லைக் தேடும் சமூக வலைத்தளங்களும்!





கௌசி



சில ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் தொலைபேசியில் உரையாடிக்கொண்டு தண்டவாளத்தில் உயிர்பிரிந்த உயிர்த்தோழிகள்

தற்பொழுது எம்மவர் கோடை விடுமுறையில் இலங்கை நோக்கிப் படை எடுப்பது அதிகரித்துள்ளது. பிறந்த மண்ணில் காலடி வைக்கின்ற சுகமே அலாதி ஆனதுதான். ஆனால் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் ஐரோப்பிய மண்ணில் வாழ்ந்து இங்குள்ள போக்குவரத்து சட்ட திட்டங்களுக்குப் பழக்கப் பட்டவர்களுக்கு எமது மண்ணின் தற்போதைய போக்குவரத்து சீர்கேடுகள் நிச்சயமாக அவதானத்திற்கு உரியதாகின்றது.



வேகப்பாதை சரியான முறையில் அமைக்கப்பட்டிருந்தாலும் அங்கு வேகக் கட்டுப்பாடு கவனிக்கப் படுவதில்லை. பொது வாகனங்கள் போட்டி போட்டுக் கொண்டு பயணப்படுவது அச்சத்தைத் தருகின்றது. பாதைக் கடவைகள் கவனிக்கப் படுவதில்லை. இங்கு . பாதை விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு செயற்படும் வாகனச் சாரதிகள் அங்கு நிறைந்த வாகன நெருக்கடிக்குள் வாகனம் செலுத்தும் போது பல நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர். இதனால் பல வாகன விபத்துக்களும் ஏற்படுகின்றன.

புகையிரதப்பாதைக் கடவைகள், புகையிரதம் வரும்போது தடுப்பதற்கான எந்தவித பாதுகாப்புத் தடைகளோ, அபாய மின்விள்க்குகளோ இல்லாமல் பல இடங்கள் காணப்படுகின்றன. இதனால் அளவுக்கதிகமான் புகையிரத விபத்துக்களும் அங்கு ஏற்படுகின்றன

விபத்துக்களை சமூக வலைத்தளங்களில் எவ்வித மறைப்புகளும் இன்றி புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளங்களில் போட்டு அதிகம் லைக் சம்பாதிக்கின்ற மனிதர்களும் அதிகரித்து வருகின்றனர். விபத்தினால் ஏற்படும் இறப்பு என்பதும், இறந்த மனிதனும் காட்சிப் பொருளல்ல. பல இளகிய இதயங்களையும் உறவினர்கள் மனநிலையையும் பாதிக்கின்ற விடயம் என்பதை மனமுள்ள ஒவ்வொருத்தரும் உணர்ந்து கொள்ள வேண்டும். கையில்தொலைபேசி இருக்கின்றது என்பதற்காக கண்டபடி புகைப்படம் எடுப்பதும், அதனை சமுக வலைத்தளங்களில் விளம்பரப்படுத்துவதும் பலருக்கு பல லைக்கை கொடுக்கும். ஆனால், உறவுகளுக்கு எத்தனை மனவேதனையைக் கொடுக்கும் என்பதை விளம்பரகாரர் உணர்ந்து கொள்வதில்லை. இதை மனித நேயமுள்ள ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஜேர்மனி நாட்டிலே பார்ப்பதற்கே அச்சப்படுகின்ற விபத்துக்களை புகைப்படம் எடுப்பதற்கும் சமூகவலைத்தளங்களில் போடுவதற்கும் குற்றமாகக் கருதி தடைசெய்யப்பட்டுள்ளது. மீறிச் செய்பவர்கள் அபராதம் செலுத்த வேண்டிவரும். அத்துடன் உரிமையாளர்கள் வழக்கு வைப்பதற்கு உரிமையிருக்கின்றது என சட்டம் நிறைவேற்றப்பட்டு நடைமுறையிலுள்ளது.

இலங்கையில் விபத்து நேர்ந்த உடலை ஒரு வெள்ளைத்துணியால் போர்த்தி வைக்கும் பண்பு கூட இல்லாது. விபத்து நிகழ்ந்த இடத்திலிருந்து அப்படியே புகையிரதத்தில் தூக்கிப்போட்டுக் கொண்டு போய், புகையிரதநிலையத்தில் விபத்து நிகழ்ந்த ஒரு மிருகத்தைத் தூக்கிப் போடுவது போல் போட்டுவிட்டு புகையிரதம் போவதுமான அரக்கத்தனச் செயல்கள் நடைபெறுகின்றன. அந்த உடல் பலரும் பார்த்து அருவருப்புப் பட்டு ஒருதுணியால் கூட போர்த் தப்படாது வைக்கப்படுவதும், அதனைப் புகைப்படம் எடுத்து சமூக வலைத் தளங்களில் பகிரங்கப் படுத்தி, விளம்பரப்படுத்துவதுமான செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன .

இதுவரை இலங்கையில் புகையிரதம் காவு கொண்ட உயிர்களுக்கு பட்டியல் போட்டால் நூற்றுக்கணக்காக உயர்கின்றது. இலங்கையில் உயிர் என்பது ஒரு சாதாரணவிடயமாகப் போய்விட்டது. விபத்துக்கள் நடைபெறுகின்றன. அதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் சரியான முறையில் கண்டுபிடிக்கப்படுவதாக இல்லை. மக்கள் அவதானமே அவசியமாகின்றது.

ஒவ்வொருவர் செய்கின்ற செயலுக்கும் விழைவு இருந்தால் ஒழிய அதைச் செய்வதில் பயனில்லை. புகைப்படம் எடுக்கும் நபர்கள், அதை விடுத்து உயிர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பொது இடங்களில் உள்ள புகையிரதப் பாதைகள் புகையிரதக் கடவையோ, பாதுகாப்பு மின்விளக் குகளோ இல்லாமல் காணப்படுவதையும், இதனால், பல உயிர்கள் பாதிக்கப் படுவதையும் எதிர்த்து நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரியவில்லை.

மனித உயிர்களைக் காவு கொள்ளும் இந்த புகையிரதக் கடவைகளையும், அபாயமின் விளக்குகளையும் கவனத்தில் கொண்டுவர அரசியல்வாதிகளும், பொது அமைப்புக்களும், மக்கள் அமைப்புக்களும் கவனம் எடுப்பதாக இல்லை. அதனால் உல்லாசப்பிரயாணத்தை உலாசமாகக் கழிக்கச் செல்பவர்கள். **உங்களை நீங்களே அவதானமாகக் கண்காணித்துக் கொள்ளுங்கள்.**









# காதலெனும் கற்பக தரு

இம்மாத பாடல் பகுதியில் எவ்வாறு சரணடைகிறார் நம் பாரதி என்று பார்க்க விழையும் போதே பட்டம் பூச்சி சிறகடிக்கும் சத்தம் கேட்கிறது ,இதயத்தில்...

பிரபஞ்சத்தில் தோன்றும் பொருள் யாவும் காதலின் தோற்றம் என்று களித்தவன் காதலன் பாரதி.
மண்ணில் மலர்ந்தவற்றை காதல் அறிவினால் வண்ணம் தீட்டி விண் கொண்டு சேர்த்தவன். மலையும் கலை சொல்ல , அலையும் மன அலையில் காதல் விதைக்க ,காற்றின் கப்பலில் உருவம் தொலைத்து உணர்வின் பயணம் , ஊரறியா மாயம் ,இது உண்மை பல நேரம் .

முன்னே கண்ட வீணான மனித கனவுகளை மாற்றி பின்னே காதலெனும் மந்திர பொருள் கொண்டு தெய்வீக கனவாக்கி உய்வித்த வித்தகன்.
அரிய அறிவாய் காதல் அன்பெனும் தனிச்சுடரில் ஞானமெனும் மணம் வீச சித்தத்தில் சிவம் கான செய்தவன்.

ஒப்புயர்வற்ற உள்ளத்தில் உவகை மட்டுமே ஊறிட காதல் எனும் ஒற்றை மார்கத்தை அருமருந்தாய் ஏற்றியவன்.
தேனுண்ணும் உணர்வு தான் காதல் என்று கனிவித்தவன்

**உனையே மையல் கொண்டேன் வள்ளி**
**உவமையில் அரியாய் , உயிரினும் ,இனியாய்**

உன்னையே ( உன்மேல் மட்டுமே ) மையல் (உன்மத்தம்) கொண்டேன்.
பாரதியின் அன்பினை வெறுமனே மயக்கம் என்றோ சாதாரண பித்து என்றோ பொருளுரைக்க முடியவில்லை. அவனது உணர்வில் தோன்றிய மையல் நிட்சயமாய் உன்மத்தமாய் தான் ,இருந்திருக்க வேண்டும்.

மொழிக்கு உவமை அழகு என்று அறிந்தாலும் மொழி கடந்த காதலுக்கு உவமை அரிதாய் தான் ,இக்கும். எதனோடு ஒப்பிட்டு கூற முடியும் உள்ளமதை மென்மையாக்கும் மேன்மையாக்கும் காதலியை ?

ஆக ஒன்று மட்டும் நிச்சயம் ..உயிரினும் ,இனியதாய் தான் ,இருக்கும்.
அத்தனை ஆழ்ந்த அதி அற்புத சூட்சும உணர்வை எப்படி தான் ஒருசில ,இலகு தமிழ் சொற்களுக்குள் அடக்குகிறானோ பாரதி என்று எண்ணி எண்ணியே அவன் மேல் வற்றா காதலில் சொக்கி நிற்கிறேன் தினம் தினம் பல கணம்.

**எனையாள்வாய் வள்ளி வள்ளி**
**இளமையிலே , என் ,இதயமலர் வாழ்வே**
**கனியே, சுவையூறு தேனே**
**கலவியிலே அமுதனையாய் தனியே , ஞானவிழியாய் நிலவினிலே**
**நினைமருவி , வள்ளி வள்ளி**
**நீயாகிடவே வந்தேன்**

என்னை ஆள்வாய் ..அடடா ஆள்தல் எனும் சொல்லில் அடங்கியுள்ள சரணடையும் தன்மை ....ஆழ்தலில் தானே அடைதலும் உள்ளது .

இங்கு சற்றே விழிக்கிறேன் தமிழை ரசிப்பதா ? ,இல்லை தமிழை சரிவர கையாண்ட கவி கிறுக்கனை ரசிப்பதா ?
காதல் இருக்கும் வரை , இளமைக்கு என்ன குறை ?



என் இதயமலரில் வாழ்ந்து கொண்டு ,இருப்பவளே ..பெண்களுக்கு மட்டும் தானே ,இதயத்தை மலர் என்று உவமை கூறலாம்? இல்லை இல்லை ஆண்களின் மனது பெண்களை விட மென்மையானது என்று விவாதத்திற்கு விடை கூற முயலவில்லை பாரதி.

காதல் என்னும் தன்மை கண்டால் ஆண் பெண் என்னும் பால் நிலை கூட தோற்றிடும். ஏக தன்மை மட்டுமே இருக்கும்.

இதயமே மென்மையானது என்று கருதுவோம் ,இதிலும் ஒரு படி மேலாக மலரையும் சேர்த்து மேலும் மென்மையான ,இடத்தை வழங்குகிறான் காதலி இருப்பிடமாய்.

காதலி நீ அங்கு வாழ்ந்து கொண்டு ,இருக்கிறாய் ஆதலால் தானே நானும் வாழ்கிறேன் என்ற கருத்தில் என் இதயமலர் வாழ்வே என்று கூறுகிறார்

இவ்வாறு கனிந்து என்னுள் ,இருப்பதால் கனியே,வெறும் கனி மட்டுமல்ல சுவை ஊறுகின்ற தேனே என்கிறார்.
என் இதய மலரில் வாழ்ந்து என்னோடு கலந்தவளே,உன்னை கலவியால் கலந்தால் அமுதெனும் பெரும் பொருளிலும் பிறிதுண்டோ ?

அன்று அப்பாற் கடலை கடைந்து எடுத்த அமுது போன்றவளே ,
தனிமையில் ,இருந்து உன்னை நினைத்து நினைத்து ஞான விழி கண்டு,
தண்ணும் நிலவினிலே உன்னை நாடி,
நீயும் நானும் வேறல்ல என்று ஐக்கிய நிலையை அடைய வந்தேன்.

அத்வைத உணர்வினில் உயிர் நோக்கம் காணபோம் என்னும் உத்தம சத்தியத்தை ஊருக்கு எடுத்து சொல்லி சென்ற ஒப்புயர்வற்ற பாரதி.


## ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் திருக்கோவில் - ஹம்

**அடியவர் குறைதீர்க்கும் வெங்கடேஸ்வரப்**
**பெருமானை வணங்கி உங்கள் குறைதீருங்கள்**

**புரட்டாதிச் சனிக்கிழமை மிக மிக விஷேசமானதாகும்.**
அதிலும் வெங்கடேஸ்வரப்பெருமாளுக்கு ஏற்றதினம் சனிக்கிழமை விரதம் இருந்து மாவிளக்கு ஏற்றிப்பூஜை செய்வர். ஆதாரம்- இந்து சமயப்பண்டிகைகள் வழிபாட்டுமுறைகள் .பருத்தித்துறை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவிலும் வண்னை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோவிலும் தனித்துவம் பெற்ற புரட்டாதிச்சனி அனுஷ்டிக்கும் தலங்களாக விளங்குகின்றன. ஆதாரவெளியீடு- சனிஸ்வர வழிபாடு .புரட்டாசி மாதம் புருஷோத்தமனுக்கு உகந்த புண்ணிய மாதம். அதற்கு மேலும் பல சிறப்புகளும் உண்டு. யேர்மன் நாட்டில் உள்ள ஒரே ஒரு ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலயம் (Hamm மாநகரில்) எள்ளண்ணை எரித்து வழிபாடு செய்ய மிக அற்புதமான தலமாக விளங்குகின்றது.

**ஆலய தரிசன நேரம்:**
**காலை 9.00 மணிமுதல் 13.00 மணிவரை**
**மாலை 17.00 முதல் 20.00 வரை**
**பூஜை நேரம்: தினமும்:**
**காலை 10.00 மணி மாலை 18.00 மணி**

**Sri Venkateswara perumal Temple.e.V**
**Nassauerstraße 20**
**59065 Hamm-Mitte/Germany**

Tel:02381 42 66 420
+49(09176 80 56 96 09












# யேர்மனியில் காணாமற் போன கிராமம்!

**சிவப்பிரியன்**

இலங்கையில் யுத்தகாலத்தில் காணமற் போனவர்கள் இன்றும் தேடப்பட்டு வருகிறார்கள். காணமற்போனவர்களைத் தேடியவர்கள் சிலரும் காணாமற்போயுள்ளனர். அங்கு காணாமற்போனது, மனிதர்கள் மட்டுமல்ல, மண்ணும்தான். இன்னும் நான் பிறந்த குரும்பசிட்டி மண்ணைத் தேடுகிறேன். அதனை முழுதாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. குறுகிய இடத்தில் நின்று எட்டிப்பார் என்கிறார்கள்! குரும்பசிட்டி முழுதாகத் தெரியுமாம். ஒரு பகுதியை இராணுவம் விட்டுவிட்டு, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்கிறது.

கிராமம் என்பது ஒரு பகுதியல்ல, பல முற்றங்கள் சேர்ந்த சொர்க்கமே கிராமம். ஒரு முற்றம் அங்கு இல்லை என்றால் கிராமம் கிராமம் இல்லை. என்னுடையதை நீ அபகரித்தால் அபகரித்துள்ளேன் என்பதனை முதல் ஒப்புக்கொள்ள வேண்டும். பின் ஒப்படைக்கவேண்டும்.



ஒப்படைக்க முடியாததற்கு வலுவான காரணம் உண்டு என்றால், அதற்கான ஈடு தரவேண்டும், தேர்தல் வரும் காலத்தில் சில சென்ரிமீற்றர்கள் சென்றியை பின் தள்ளுவதால் கிராமம் முழுமையடையாது. அப்படியானால் இன்னும் எத்தனை தேர்தல்கள் வரவேண்டும். நம்நாட்டில் நடப்பது நல்லாட்சி அரசு.

ஆழகிய பெயர்.

ஓப்பீடு என்பது மனிதனுடன் கூடப்பிறந்த குணம். இங்கு பாருங்கள் எவ்வளவு சுத்தம். இலங்கையில் என்றால் இப்படியா என்று குப்பைகளைகூட ஒப்பிடும் மனசு, யேர்மனியில் ஒரு கிராமத்தை அரசு பறித்துக் கொண்டதும், அதற்கான ஈடு எப்படி செய்யப்பட்டது என்பதனையும் இலங்கையோடு ஒப்பிடுவது தவிர்க்கமுடியாத ஒன்றே.

கிட்லர் ஆண்ட பூமி யேர்மனி. அங்கு கூட சர்வாதிகாரம் தன் காரத்தைக் குறைத்துக்கொண்டுள்ளது.

ஒரு கிராமத்தை யேர்மனியில் காணவில்லை. நான் இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன் அடிக்கடி சென்றுவந்த ஒரு கிராமம் இன்று இருந்த இடத்தில் இல்லை.

முன்பு எல்லாம் நவி இல்லை (navigation) யேர்மனியில் ஒரு இடத் திற்கு போவது என்றால், முன்பே ஒரு குறிப்பெழுதுவோம். (பெரும்தெரு) A45 எடுத்து பின் A1 எடுத்து பின் A46 எடுத்து பின் A61 எடுத்து இமறாத்தில் இறக்கி வலது பக்கம் (win mill) காற்றாடியைக் கண்டதும் மடக்கி வெட்டினால் இமராத் கிராமம் பச்சைப் பசேல் என்று சோளக்காடாகத் தெரியும்.

இப்போ பல நாட்கள், மன்னிக்கவும் பல வருடங்கள் அங்கு செல்லாத மையால் நவியைப் போட்டு சென்றேன். அங்கு அந்த மின்விசிறயைக் காவில்லை. சோளக்காட்டையும் காணாவில். ஆனால் கிராமம் காடாக இருந்தது. வீடுகள் கடைகள் வீதிகள் எல்லாம் நம்நாடுபோல் இடிபாடுடன் சிலவும், மனிதநடமாட்டம் அற்று பலவும் இருந்தது. வேலிபோட்டு தெருக்களை மூடி இருந்தார்கள். அதனூடகப் போகலாம், ஆனால் போக முடியாது. அங்கு ஆமியும் இல்லை, பொலீசும் இல்லை, ஆனால் போகமுடியாது. அங்கு எழுதப்பட்டிருக்கும் வாசகம் புரிந்தால் அதுதான் சட்டம். அதனை மீற யார் சொன்னாலும் மீறமாட்டோம். சட்டத்தை மதிக்க இங்கு நாம் பழகிக்கொண்டோம்.

இமராத் (Immerath) கிராமத்தைக் காணவில்லை. யாரும் இரவோடு இரவாக எடுத்துச் சென்றுவிட்டார்களா? நாய் பூனை இவற்றை எங்கு விட்டாலும் திரும்ப திரும்ப் வீடு வந்து நிற்பது போல், நவியை எத்தனை தடவை மீண்டும் விலாசத்தை போட்டு எடுத்தாலும். அது இதுதான் இமராத் என்று சொல்லிக் கொண்டு நிற்கிறது.

சரி முன்பு போல் (1990) தெருவில் காணும் மனிதர்களை விசாரித்து செல்வோம் என்றால் தெருவில் மனித நடமாட்டமே இல்லை. பற்றைக்குள் சில வாகனங்கள் பின்னுக்கு முன்னுக்கா அசைந்த வண்ணம் இருந்தன. எமது காரை விரைவாக்கி அவர்களிடம் சென்று கேட்கலாம் என்று, யேர்மன் மொழியில் கதைக்க முற்பட, கார் யன்னலைத் திறந்து ஒரு பெண்மணி நாமும் இமராத்தை (கிராமத்தின் பெயர்) அதாவது அந்த கிராமத்தைதான் தேடுகிறோம் என்றனர்.

தொடர்ச்சி 18 ம் பக்கம்

RKL IMMO.de IMMOBILIEN & BAUFINANZIERUNG
Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan|Tel. 05723-914519| www.rklimmo.de|info@rklimmo.de



Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை
நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!

Sinnadurai Kiritharan
Tel:05723 914519

புதிய
வாடிக்கையாளர்களுக்கு
100,00€ இருந்து 500,00€
வரை
பெறுமதியான LIDL
அல்லது TANK Gutschein

01.04.2017 முதல்
31-12-2017 வரை



Tel: 05723- 914519 Mobil 0172-5214530 www.rklimmo.de
EU-VAT / Umsatzsteuer ID-Nr DE 186406298 -- Berufserlaubnis erteilt am 08.01.2002 Registrierungsnummer D-W-133-ADSJ-30



## Blue Whale Game

## புளூா வேல் !

# தற்கொலை விளையாட்டு

சேவியர்

கடந்த ஜூன் மாதம் 30ம் தியதி மும்பையிலுள்ள அந்தேரி பகுதியில் ஒரு தற்கொலை நடந்தது. பதினான்கே வயதான சிறுவன் ஒருவன் ஐந்து மாடிக் கட்டிடத்தின் உச்சியிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டான். பாசமான, சுறுசுறுப்பான, நல்ல அறிவுத் திறமையுடைய அந்த சிறுவனின் மரணம் பெற்றோரைப் புரட்டிப் போட்டது. தற்கொலை செய்து கொள்ளுமளவுக்கு வீட்டிலோ, நண்பர் வட்டாரத்திலோ, பள்ளியிலோ எந்த பிரச்சினையும் இல்லை. பின் ஏன் இந்த தற்கொலை? எனும் விசாரணை திடுக்கிடும் பல செய்திகளை வெளிக்கொண்டு வந்தது.

இந்த தற்கொலைக்குக் காரணம் ஒரு ஆன்லைன் கேம். புளூாவேல் எனும் இந்த விளையாட்டு உலகெங்கும் ஏற்கனவே சுமார் 130 பதின் வயதினரைப் பலிவாங்கியிருக்கிறது. ஐம்பது நாள் சவால் என அழைப்பு விடுத்து, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சவாலைச் செய்யச் சொல்லி படிப்படியாக பதின் வயதினரை உளவியல் ரீதியாக தற்கொலைக்குத் தூண்டுகிறது இந்த விளையாட்டு. முதலில் எளிமையாய் தோன்றும் இந்த விளையாட்டு, பின்னர் உடலைக் கீறிக் காயப்படுத்துவது, உயிரினங்களைக் கொல்வது, நரம்புகளை அறுத்துக் கொள்வது என விபரீதமாய் சென்று, கடைசியில் தற்கொலை செய்து கொண்டால் வெற்றி என முடியும்.

ஒவ்வொரு நாள் சவாலையும் வீடியோ எடுத்தோ, புகைப்படம் எடுத்தோ சமூக வலைத்தளங்களில் பதிவு செய்ய வேண்டும். அதை ஒரு குழுவினர் நேரடியாகக் கண்காணித்து அவர்களை அடுத்த லெவலுக்குள் நுழைய அனுமதிப்பார்கள். நேரடியான சேட் மூலம் இந்த விளையாட்டு தொடரும். இந்த உளவியல் விளையாட்டை எதிர்கொள்ளும் பதின்வயதினர் கடைசியில் தற்கொலை செய்து கொள்வதை வெற்றி எனக் கருதி விடுகின்றனர்.

தற்கொலைக்கு முயன்று படுகாயமடைந்தவர்களும் உலகமெங்கும் பலர் உண்டு. இந்த விளையாட்டை உருவாக்கியவன் 22 வயதான "பிலிப் புடேய்கின்" எனும் ரஷ்ய இளைஞன். உளவியல் பட்டம் படித்துக் கொண்டிருந்தபோதே கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டவன். உளவியல் ரீதியாக மக்களை எப்படி தூண்டி தடுமாற வைக்கலாம் எனும் வித்தை தெரிந்தவன். 2013ம் ஆண்டு இந்த ஆன்லைன் விளையாட்டை சீரியசாக ஆரம்பித்தான். முதலில் சவாலை ஏற்பவர்களிடம் ஆன்லைனில் இவனே நேரடியாய்ப் பேசி தற்கொலைக்குத் தூண்டினான். அப்படி 16 சிறுமிகள் தற்கொலை செய்து கொண்டனர்.

பின் உலகெங்கும் ஏராளமான பதின்வயதினர் இந்த விளையாட்டை விளையாட ஆரம்பித்ததால் ஒரு குழுவை அமைத்து அவர்கள் மூலமாக விளையாடுபவர்களிடம் பேசி வந்தான். எல்லாருடைய சிந்தனையும் எப்படியாவது இந்த விளையாட்டு விளையாடுபவர்களை தற்கொலை செய்து கொள்ள வைக்க வேண்டும் என்பது தான்.

தொடர்ச்சி 17 ம் பக்கம்













அப்படி ஒவ்வொருவர் தற்கொலை செய்து கொள்ளும் போதும் இவர்கள் அதை கொண்டாடி மகிழ்கின்றனர்.
ரஷ்ய அரசு இந்த விஷயத்தை அறிந்ததும் அவனைக் கைது செய்து சிறையில் அடைத்தது.



ஏன் இப்படி மக்களை தற்கொலைக்குத் தூண்டுகிறாய் என கேட்டபோது, "இவங்க எல்லாம் பூமிக்கு பாரம். கோழைகள். இவர்களெல்லாம் செத்துப் போவது உலகுக்கு நல்லது. அதனால தான் அவர்களை தற்கொலை செய்து கொள்ளத் தூண்டுகிறேன். அப்படிச் செய்து நாட்டை தூய்மை யாக்கும் வேலையை நான் செய்கிறேன்" என கூலாக பதிலளித்தான். இன்னும் ஏராளமான மக்கள் தற் கொலைக்குத் தயாராக இருப்பதாக அவன் சொன்னது பெற்றோரை பதட்டத்துக் குள்ளாக்கியிருக்கிறது.

ஒரு முறை இந்த விளையாட்டுக்குள் நுழைந்து விட்டால் வெளியேறுவது உளவியல் சவால். அப்படியே வெளியேற வேண்டும் என நினைக்கும் இளையவர்களை நிகழ்ச்சியை நடத்துபவர்கள் மிரட்டுவார்கள். கொலை செய்து விடுவோம், சொந்தக்காரர்களை கொல்வோம், வீட்டில் உள்ளவர்களை அழிப்போம் என்றெல்லாம் மிரட்டி பயப்பட வைப்பார்கள். இவர்களைக் குறித்த தகவல்கள் எல்லாம் அவர்கள் வசம் இருப்பது போல ஒரு பிம்பத்தை உருவாக்குவார்கள். அந்த பயமே விளையாடுபவர்களை நிலைகுலையச் செய்து விடும். இந்த மிரட்டல்களைத் தாண்டியும் பல நாடுகளிலுமுள்ள தைரியமான இளைஞர்கள் பலர் காவல்துறையினரிடம் இந்த விளையாட்டு குறித்து புகார் அளித்துள்ளனர்.

பிரான்ஸ் போன்ற நாடுகளில் காவல்துறையே இந்த விளையாட்டின் விபரீதம் குறித்து மக்கள் எச்சரிக்கையாய் இருக்குமாறு அறிவுறுத் தியிருக்கிறது. அமெரிக்கா, அர்ஜெண்டினா, சிலி, பிரேசில், பல்கேரியா, சைனா, கொலம்பியா, ஜார்ஜியா,இத்தாலி, கென்யா, பெருகுவே, போர்சுகல், ரஷ்யா, ஸ்பெயின், வெனிசூலா என உலகெங்கும் பலரை பலிவாங்கிய இந்த விளையாட்டு இப்போது இந்திய சிறுவன் ஒருவனையும் பலிவாங்கி நமக்கும் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்திருக்கிறது.

இன்றைய டிஜிடல் உலகில் சிறுவர்களை ஆன்லைன் விளையாட்டுகளை விட்டு விலக்கியே வைத்திருப்பது சாத்தியமற்ற ஒன்று. ஆனால் அவர்கள் என்ன விளையாடுகிறார்கள் என்பதைக் கவனிப்பதும், எவ்வளவு நேரம் விளையாடலாம் என்பதை நெறிப்படுத்துவதும் எளிதான காரியம். அதை பெற்றோர் தவறாமல் செய்ய வேண்டும்.

ஆன்லைன் விளையாட்டுகள் சிறுவர்களையும், இளைஞர்களையும் வெகுவாகப் பாதிப்பதாய் பல்வேறு ஆய்வுகள் தொடர்ந்து எச்சரித்துக் கொண்டே இருக்கின்றன. மன அழுத்தம், தனிமை உணர்வு, வன்முறை




சிந்தனை, உடல் பலவீனம் போன்ற விளைவுகள் இதனால் சர்வ நிச்சயம் என எச்சரிக்கிறது சமீபத்தில் வெளியான "சைக்காலஜிகல் ஹெல்த்" ஆய்வு ஒன்று.

மாணவர்களின் உடல்நலத்தையும், அறிவையும், மனநலத்தையும் மழுங் கடிக்கச் செய்யும் டிஜிடல் விளையாட்டுகளை விட்டுப் பிள்ளைகள் எவ் வளவு தூரமாய் இருக்கிறார்களோ,அவ்வளவுக்கு அவர்களுடைய வாழ்க்கை ஆனந்தமாய் அமையும். அத்தகைய ஆரோக் கியமான சூழலை மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும், நண்பர்களும் இணைந்து உருவாக்க வேண்டும்




## குட்டிக் குட்டிக் காதல் கவிதைகள்

உலக
அதிசயங்கள் எல்லாம்
கல்லால் ஆனவையடி
இல்லையேல்
உன்னையும் சேர்த்திருப்பார்கள்.

ஒவ்வோர் முறை-நீ
என்னைப் பார்த்துக்
கடக்கும் போதும்
என் காதல் வலிமை
சேகரிக்கிறது.

காதலும் கடலும்
ஒன்றே
ஆழமாய் மூழ்காத கைகளில்
கிளிஞ்சல்களே
மிஞ்சும்.

காதலைச் செதுக்குவதாய்
நினைத்து - நான் செய்த
உளிப்பிரயோகங்களில்
காதல் என்னைச்
செதுக்கி முடித்தது.

எத்தனை வார்த்தைகளால்
சொன்னாலும்
உனக்குப்
புரியப் போவதில்லை.
ஒரே ஒரு
முத்தத்தால் உணர்த்தி விடவா
என் காதலை ?

நாமென்ன
இரட்டைக் குழந்தைகளா ?
உனக்கு வலித்தால்
எனக்கு
கண்ணீர் வருகிறதே.

ஒருமுறை தான்
காதல் வருமென்பதெல்லாம்
பொய்யடி பெண்ணே.
எனக்கு
புதிது புதிதாய்- காதல் வருகிறது-
உன்
ஒவ்வோர் புன்னகையிலும்.

உடலுக்கு வெளியே
உயிர் நின்றாலும்
உயிர் வாழ முடியும் என்பதை
நீ
விலகியபோது தான்
உணர்ந்து கொண்டேன்.

உண்மைக் காதல்
என்னும்
உத்தரவாதத்துடன் தான்
துவங்குகின்றன- அத்தனைப்
பொய்க் காதல்களும்.



15 ம் பக்க தொடர்ச்சி....

## யேர்மனியில் ஒரு கிராமத்தைக் காணவில்லை.



காணமற்போன கிராமம்

இது என்ன உமாபதிசிவாச்சாரியாரின் திருவருட்பயனில் வரும் பாடல் - மலையில் நின்று கொண்டு மலையைத் தேடுபவனும், மடுவில் நின்று மடுவைத் தேடுபவனும் .... போல நாமும் நாம் தேடிவந்த இமராத் கிராமத்தில் நின்று கொண்டு கிராமத்தை தேடிய வண்ணம் நின்றோம்.
திரும்பவும் நாம் தேடிவந்த அந்த திருமண மண்டபத்தின் விலாசத்தை பார்த்தோம், அதில் நியு இமராத் என்று இருந்தது. அப்படி என்றால் பழைய இமராத்துக்கு என்ன நடந்தது என அறிய முற்பட்டோம். நமக்கு முன் தேடுபவர்கள் யாராவது படலையத்தட்டுவோம் என்றபடி இறங்கி நடக்க ஆரம்பித்துவிட்டார்கள். நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன் வீடு இருந்தால் தானே படலை.....
அது மட்டுமல்ல முன்பு நான் இங்கு வரும்போது பல அழகிய பெண்கள் நாய்களுடன் தெருவெல்லாம் வலம்வருவார்கள். அந்த பெண்களின் அழகில் ஒரு கிராமிய அழகு இருக்கும்.

இப்போது அந்தப் பெண்களில் ஒருத்தி நம் முன். இப்பொழுது அந்த இளமை அழகு மறைந்து முதுமையழகு செழித்திருந்தது.

இங்கு வெளி ஏற்றப்பட்டவர்களுக்கு இமராத் என்ற இந்தக் கிராமத்தின் பெயரிலேயே ஒரு புதிய கிராமம் (New Immerath) அமைத்து, அங்கு அவர்களை (7,600 மக்களைக்) குடியமரத்திவிட்டார்கள். இந்த கிராமத்தில் இருந்த அத்தனையும் அங்கு புதிதாக அழகாக அமைத்துக் கொடுத்துள்ளனர். இங்கு இருந்த தேவாலயம், கலாச்சார மண்டபம், பாடசாலை, வங்கி, மயானம் என அத்தனையும் புதிய கிரமத்தில் அழகாக செய்து கொடுத்துள்ளார்கள். நான் - எனக்கு எனது பொம்மையே வேண்டும் என்று - அடம்பிடித்துக்கொண்டு இங்கேயே இருக்கிறேன். என்னைப் போல் ஒரு 40 குடும்பம் மட்டும் இன்னும் ஒட்டிக்கொண்டு இருக்கிறோம். நான் இன்னும் சிலகாலமே வாழ்வேன், அதனை ஏன் என் சொந்த இடத்தில் கழிக்கக்கூடாது. ஏன் புதிய சூழலுக்கு மாறவேண்டும் என ஆதங்கத்துடன் கேட்கின்றார் அப் பெண்.

(Some 7,600 people are being moved in all. Of Immerath's 900 inhabitants, about 100 are still waiting to leave. The rest have resettled into Immerath-Neu (New Immerath), which has sprung out of the ground in the same district of Erkelenz, or gone elsewhere.)

புதிய இமராத் (New Immerath) Erkelenz நகரத்துள் அமைந்துள்ளது. இப்புதிய கிராமத்தின் அழகிய தெருக்கள் திட்டமிட்டு அமைக்கப்பட்டதால் கனடாபோல் அழகாக உள்ளது. முன்பு இமராத்தில் இருந்த தெருக்கள் அதே பெயருடன் அமைந்துள்ளது மற்றுமொரு சிறப்பு. ( இலங்கையில் இப்படி ஒரு திட்டம் அமைந்தால் தெருப் பெயர்கள் சிங்களமயமாகவே வாய்ப்புண்டு) அங்கு வாழ்ந்த அதே மக்கள்! அதே பரம்பரை! மீண்டும் புதிய இமராத்தில் அவர்களைப் பார்ப்பதற்கு அழகாவே உள்ளது. அங்கு இருந்த அந்த காற்றாடி சிலையாக முன்வைக்கப்பட்டுள்ளது. பழை கிராமத்தின் வரைபடம் மற்றும் புள்ளிவிபரங்கள் யாவும் பொது மக்கள் பார்கைக்கு அங்கு காட்சியாக தெரு மூலையில் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு சரித்திரத்தை அழிக்கும் பொழுது, அதனை பதிவுசெய்து அடுத்த பரம்பரைக்கு கொடுக்கும் பண்பான செயலும், மரபு இங்கு உண்டு. அரசு கிராமத்தை ஆக்கிரமித்தாலும் அங்கு வாழ்ந்த மக்கள் பலர் தம்தேசத்திற்கு நிலக்கரி தேவை, நிலக்கரி மூலம் மின் உற்பத்தி பெருகும், நாட்டின் மின்சார உற்பத்தியின் 40 வீதம் இந்த நிலக்கரியால் கிடைப்பதே. இதனை உணர்ந்து நாட்டின் நன்மை கருதி தம்கிராமத்தை விட்டு வெளியேறி உள்ளனர்.



New Immerath







பழைய சரித்திரப் பதிவுத்திடல்

அப்பெண்ணிடம் இமராத் கிராமம் இதுதானே! இங்கு நான் பல தடவை முன்பு வந்துள்ளேன்.அந்த திருமணமண்டபம் இங்குதான் இருந்தது. அதனைக் காணவில்லை என்று சொன்னபடி அந்த விலாசத்தைக் காட்டினேன். அப்பெண் ஒரு பெருமூச்சுடன் இந்தக் கிராமம் காணமால் போய், இப்போ மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. திருடன் வீடுக்குள் என்ன உண்டு என்று பார்த்து, திருடுவான். அரசு வீடுக்கு அடியில் என்ன உண்டு எனப்பார்த்து திருடிவிட்டது. அதுதான் இந்தக் கிராமத்தின் அடியில் பெருமளவு நிலக்கரி உண்டாம். யேர்மனியில் நிலக்கரியுள்ள பகுதியில் இந்தக்கிரமம் இராண்டவது பெரும் நிலக்கரி கொண்ட பூமியாம்.
எனவே நிலக்கரி எடுப்பதற்காக இங்குள்ள எல்லோரையும் வெளி ஏற்றிவிட்டனர். ஒரு பொம்மையைத் தொலைத்துவிட்டால் குழந்தைக்கு வேறு புதுப்பொம்மை வேண்டித்தருகிறேன் என்று பெற்றோர் சொல்வார்கள். சில பிள்ளைகள் புதுப்பொம்மையா என்று துள்ளிக்கொண்டு ஓடும். ஒரு சில பிள்ளைகள் எனக்கு அதே பொம்மைதான் வேண்டும் என்று அடம்பிடிக்கும்.

இன்னும் சில வருடங்களில் பழைய இமராத் கிராமம் பாதளச் நிலக்கரிச்சுரங்கமாக மாறிவிடும். இங்கு ஒன்றைப் பறிக்கும்போது அதற்கு ஈடாக சிறப்பாக ஒன்றைக் கொடுத்தே பறிக்கிறார்கள். நமது நாட்டில் பறித்தால் பறித்ததுதான்.





சிவ பார்வதி ஜோதிட நிலயம்
SHIVA PARVATI ASTROLOGY CENTRE
சோதிட துறையில் 9 வது சந்திதியினரும்
உலகப் புகழ் பெற்ற சோதிட, கைரேகை நிபுணர்
பண்டித் காளிதாஸ்
Pandith Kallidas





உங்கள் பிரச்சினைகளுக்கு
உடனடி ஆலோசனையும் தீர்வும்
நீங்கள் நீண்டகால நோய்யால்
அவதியுறுகின்றீர்களா?
கல்வி, வேலை, வாய்ப்பு பிரச்சினைகள்,
காதல் விவகாரங்கள்.திருமணம்.கணவன்
மனைவி உறவு, பணம் செலவு, காணி

வழக்குகள், உடல் நோய்கள், பிள்ளைப்பேறு,
எந்த விதமான பிரச்சினைகளாக இருந்தாலும்
தீர்வு காணப்படும்.100 வீதம் தீர்வு
உத்தரவாதம் இன்றே எம்மைக்காண
நேரத்தைப் பதிவு செய்யுங்கள்

தொடர்பு மொழி:
தமிழ் கிந்தி ஆங்கிலம் கன்டம் தெலுங்கு
வாரத்தில் 7 நாட்களும்
காலை 9:00 மணி முதல் மாலை 6:00 வரை

Pandith Kallidas
Wilhelm Str.27
59067 Hamm
+49(0) 151 44 921 486
+49(0) 152 15 670 175

# அமெரிக்க அணியை வெற்றி கொண்டது கனடா அணி










## கனடா அணியில் காவியன்

2018 இல் நியுசிலாந்தில் நடைபெற இருக்கின்ற 19 வயதுக்குட்பட்டவருக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றுவதற்கான தெரிவுப்போட்டியில் 3 நாடுகள் பங்கெடுத்தன .ஏற்கனவே பேர்முடா அணியை 2-0 என்ற வெற்றி கொண்ட கனடா அணி இறுதிப்போட்டியில் அமெரிக்க அணியையும் வெற்றி கொண்டு உலகக்கிண்ண போட்டிக்குள் விளையாடத் தகுதிபெற்றுள்ளது.

கனடா அணிக்கும் அமெரிக்கா அணிக்கும் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்து ஆடிய அமரிக்கா அணி 132ஓட்டங்களுக்குள் சகல விக்கட்டுக்களையும் இழந்தது பதிலுக்கு துடுப்பெடுத்து ஆடிய கனடா அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரும் அணியின் தலைவருமான பவிந்து ஓட்டங்கள் எதனையும் எடுக்காமல் விக்கெட்டை இழக்க தெடரந்தும் மற்றைய விக்கெட்டையும் ஓட்டங்கள் எதனையும் பெறாமல் இழந்து கனடா அணி

அதன்பின்னர் அணி சேர்ந்த அர்சலான் கான் காவியன் நரேஸ் கூட்டணியினர் 71 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்து கனடா எடுத்து கனடா அணியை வலுவான இடத்துக்கு இட்டுச்சென்றனர், இறுதியில் 6 விக் கட்டுக்களை இழந்து அமெரிக்கா அணியை கனடா அணியினர் வெற்றி கொண்டனர்.

2018 இல் நியுசிலாந்தில் நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டியில் விளையாடுவதற்கு தகுதி பெற்ற கனடா அணிக்கு வாழ்த்துக்கள்

### கனடா அணியில் காவியன்

2018 இல் நியூசிலாந்தில் நடைபெற இருக்கின்ற 19வயதுக்குட்பட்டவருக்கான கனடா அணியில் விளையாடுவதற்கு காவியன் நரேஸ் தெரிவு செய்யப் பட்டிருக்கிறார். மத்திய தர வரிசை துடுப்பாட்ட வீரரும் சுழல் பந்து வீச்சாளருமான இவர் கனடாவில் உள்ளுர்போட்டிகளில் சி.சி.சி (c.c.c) அணிக்காக விளையாடி வருகிறார் இலங்கையின் பிரபல கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளரான மறைந்த திரு லயனல் மெண்டிசிடம் ஆரம்ப பயிற்சியை பெற்றுக்கொண்ட காவியன் நரேஸ் 6 வயதிலிருந்தே கிரிக்கெட்டை பழகி வருகிறார்.

இரண்டு தடைவ சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான **(Best bats man of the year)** விருதையும் மாகாண ரீதியில் நடைபெற்ற போட்டியில் அதி கூடிய ஓட்டங்களை பெற்றமைக்கான (m.v.P) விருதையும் பெற்றிருக்கிறார்.

கனடா அணிக்கும் அமெரிக்கா மற்றும் பேர்முடா அணிகளுக்குமிடையிலான போட்டிகள் கிங்சிற்றி மற்றும் ரிசிசி மைதானத்தில் நடைபெற இருக்கிறது.

கனடா அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கும் காவியன் நரேஸ் கனடா அணியை உலகக்கோப்பையை நோக்கிய வெற்றிக்கு வழி வகுப்பார் என்று நம்பலாம்.

**மட்டுவில் ஞானக்குமாரன்**

## அவர் எனது மாமா!

**50 வார்த்தைகளுக்குள் ஒரு குறும் கதை** *கே.எஸ்.சுதாகர்*

**ரகுபதியின் ஒரே மகள் மீனா. அம்மா இறந்துவிட்டார். மீனாவிற்கும் முன்பின் அறிமுகம் இல்லாத முரளிக்கும் திருமணம் நடந்தது.**

**முதலிரவிற்காக ஹோட்டல் போகும் வழியில் மீனா தனது காதலனுடன் கம்பி நீட்டிவிட்டாள்.**

**செய்வதறியாது திகைத்தான் முரளி.**

**செய்தி கேட்ட ரகுபதிக்கு ஹார்ட் அற்றாக். வைத்தியசாலைக்கு விரைந்தார்கள். அவருடன் வைத்தியசாலையில் நிற்பதற்கு ஒருவர் தேவை என்றார்கள்.**

**முரளி "நான் நிற்கின்றேன்" என்றான்.**

S.J. ASIAN - AFRO STORE








உங்கள் இலத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்

பசுமையான மரக்கறிகள்
மற்றும் தரம்மிக்க
கடல் உணவுப் பொருட்கள்
அனைத்தும் நிதான விலையில் பெற்றுப்
பயனடையுங்கள்.

**Mannheim**
S1 – 11
68161 Mannheim
Tel.: 0621/86243212
Indo-Afro Ravels
info@asian-afro.de

**Ludwigshafen**
Schulstr. 7-9
67059 Ludwigshafen
Tel.: 0621/54544276
info@asian-afro.de



**Indo Afro Travels**
**68161 Mannheim**

**உங்கள் பயணங்களை மகிழ்வூட்ட
சிறந்த விமானச் சீட்டுக்களுக்கு
எம்மை நாடுங்கள்.**



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
£/€ 99
மட்டுமே
SET TOP BOX
INCLUDED
புதுப்பித்தல்
15
மாதங்கள்
£/€ 99
மட்டுமே
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
தமிழ்
KTV
SUN MUSIC
SUN LIFE
Lyca TV HD
Athavan TV
DEEPAM
JAYA TV
கலைஞர்
Raj TV
புதுயுகம்
தந்தி
THANTHI TV
புதிய தலைமுறை
பன்னாட்டு நேரங்களில் உங்கள் மனங்கவர்ந்த தொலைக்காட்சி அலைவரிசைகள்
INDIA
UK
EUROPE
INCLUDED
TENT KOTTA
EROSNOW
இவன் தந்திரன்
வனமகன்
KAHAANI 2
BAAR BAAR DEKHO
ROCK ON
PHOBIA
7000க்கும் அதிகமான புத்தம் புதிய TAMIL & HINDI திரைப்படங்கள்
ANDROID APP ON Google play
Download on the App Store
Roku
AirPlay
chromecast
Samsung SMART TV
LG Smart TV
androidtv
amazon fireTV
kindle fire
XBOX
0207 132 2727
069 1200 7102
www.lycatv.tv

09 ம் பக்கத் தொடர்ச்சி

## சனீஸ்வரனைப் போல் கொடுப்பாரும் இல்லை.....

விரத அனுட்டான முறைகள்:-





சனி தோஷம் உள்ளவர்கள் புரட்டாதி மாசத்து சனிக்கிழமைகளில் காலையில் நல்லெண்ணைய் வைத்து ஸ்நானம் செய்து ஆலயம் சென்று கறுப்புத் துணியில் எள்ளை சிறு பொட்டளமாகக் கட்டி எள்ளெண்ணை (நல்லெண்ணை) விட்டு விளக்கேற்றி அர்ச்சனைகள் செய்து சனீஸ்வர தோத்திரம் பாடி சனீஸ்வரனை வழிபட வேண்டும். அதன் பின் சிவ விஷ்ணுக்களை வழிபட்டுப் பிராத்தித்து கோளறுபதிகம், தேவாரம் ஓதி அல்லது விஷ்ணு தோத்திரம் பாடி துதிக்கவேண்டும்.

வீடு சென்று உணவருந்தி விரதம் முடிக்க வேண்டும். சனீஸ்வரனின் வாகனமாக காகம் அமைவதால் உணவருந்து முன் காகங்களுக்கு உணவு படைத்தபின்பே தாம் உணவருந்துவர். மற்றைய விரதங்களின் போது எண்ணை வைத்து தோயும் வழக்கம் இல்லை. ஆனால் சனிக்கிழமை-சநீஸ்வரனுடைய விரதத்திற்கு மாத்திரம் எண்ணை வைத்துத் தோயும் முறை கடைப்பிடிக்கப் பெறுகின்றது.

அவரவர் வினைக்கேற்ப பலன்கனை வழங்குவதில் சனீஸ்வரன் நீதி தவறாதவர். இவரது தினமான சனிக்கிழமைக்ளில் விரதமிருந்து சாயாபுத்திரனை வழிபடுவோருக்கு நீண்ட ஆயுளும் துன்பமில்லாத வாழ்வும் கிடைக்கும். புரட்டாதிமாத முதற்சனி வாரத்தன்று சூரியன் மனைவியான சாயாதேவி மூலம் சனிபகவான் தோன்றினார். சாவர்ணிமனுவும், பத்திரை என்ற பெண்ணும் இவருக்கு உடன்பிறப்புக்கள். ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விரதமிருக்க முடியாதவர்கள் புரட்டாதிச் சனிக்கிழமைகளில் விரதமிருக் கலாம். சனிக்கு அதிபதி மகாவிஷ்ணு. அதனால் சனிக்கிழமைகளில் விஷ்ணு சகஸ்ரநாமம் பாராயணம் செய்வது நன்மையைத்தரும்.

சனீஸ்வரனுக்கு என்று தனி ஆலயம் என்று உலகிலே இரண்டே இடங்களில்தான் அமைக்கப்பட்டுள்ளது. தென் இந்தியாவில் புதுச்சேரி மாநிலத்தில் திருநள்ளாறு என்னும் ஊரில் சனீஸ்வரனுக்கென தனிக்கோயில் உள்ளது. சனீஸ்வரனுக்கு அமைக்கப்பட்ட இரண்டாவது தனிக்கோயில் திருகோணமலை நகரில் மடத்தடிச்சந்திக்கு அருகில், ரயில் நிலையத்திற்குப் போகும் வீதியில் வலது புறம் அமைந்துள்ளது

கன்னிராசி புதனின் ஆட்சி உச்ச வீடாகும். மகா விஷ்ணுவே புதனாக அவதாரம் செய்தார் என்பர். எனவேதான் சனீஸ்வர விரதம் கடைப்பிடிப்போர் சிவ விஷ்ணு ஆலயங்களில் உள்ள சனீஸ்வர பகவானிற்கு எள்நெய் எரித்து வழிபடுவதோடு, சிவ விஷ்ணுக்களையும் வழிபடுவது கட்டாயமாகின்றது. சனீஸ்வரன் சிறந்த சிவபக்கதன். இந்தியாவில் திருநள்ளாற்றில் உள்ள சனீஸ்வரனார் கோவில் மிகவும் பிரசித்தமானது. இங்கே நள மகாராஜான் சிவபெருமானை வழிபட்டு சனீஸ்வரனால் பீடித்த துன்பத்தில் இருந்து விடுபட்டான் என்றும் கூறுவர்.

சனீஸ்வரன் தானியம் எள்ளு, வர்ணம் கறுப்பு, வாகனம் காகம். எனவேதான் சனீஸ்வர தோஷத்தால் பீடிக்கப்பட்டவர்கள் ஏழு சனிக்கிழமை காலை தொடர்ந்து எள்நெய் தேய்து, நீராடி, சிவாலயம் அல்லது விஷ்ணு ஆலயம் சென்று சனீஸ்வரனிற்கு எள்ளு, கறுத்தப்பட்டு தானமாகக் கொடுத்து எள்ளுப் பொட்டலம் கறுத்தத் துணியில் கட்டி அதனை ஒரு மண் சட்டியில் இட்டு, நிறைய எள்நெய் விட்டு தீபமாக சனீஸ்வரனுக்கு முன் வைத்து வழிபடவேண்டும். துளசி, கருங்காக்கணவன் மலரால் அர்சித்து பின் சிவன் அல்லது விஷ்ணு சந்தினாதமடைந்து, சனிதோஷம் நீங்கப் பிராத்திக்க வேண்டும். அதன் பின் ஆலயத்திலே எள், அன்னம் காகங்களுக்கு வைத்து வீடு சென்று ஏழைகள் மூவரிற்கு போசனம் அளித்துத் தானும் உணவு உட்கொண்டு விரத்தை முடிக்கலாம். இப்படிச் செய்வதால் தோஷம் நீங்கி நல்வாழ்வு பெறும்.

சனிக்கிழமை விரதம் எளிமையானது. புனிதமானது. பகலில் பழம், தீர்த்தம் மட்டும் சாப்பிட்டு, இரவில் எளிய உணவுடன் விரதம் முடிக்கலாம். சனிக்கிழமைகளில் பெருமாள் ஆலயத்தில் சனீஸ்வரனுக்கு எள் எண்ணெய் தீபம் ஏற்ற வேண்டும். புரட்டாசி மாத சனிக்கிழமை மிகவும் விசேஷம். இதுவரை விரதம் இருக்காதவர்கள், புரட்டாசி கடைசி சனியன்றாவது விரதம் அனுஷ்டித்தால், சகல செல்வமும் பெற்று வாழலாம்.

### நல்லெண்ணை முழுக்கிற்கு விஞ்ஞானம், சோதிடம் கூறும் விளக்கம்

நம் முன்னோர்கள் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நல்லெண்ணை உடல் முழுக்க பிரட்டி சிறிது நேரம் (உடம்பில் சுவறும் வரை) இருந்து தோய்வது வழக்கமாக இருந்தது எங்கள் எல்லோருக்கும் தெரியும். காரணம் கேட்டால் உடம்புச் சூடு தணிய என்று கூறுவார்கள். ஆனால் அதற்கு இன்னுமொரு காரணம் இருப்பதாக விஞ்ஞான ரீதியில் கூறப்பெற்றுள்ளது. இந்த சனிக்கிரகம் உடலுக்கு தீங்கு (தோஷத்தை) ஏற்படுத்தக் கூடிய தீய கதிர் வீச்சுக்களை வீசுகின்றது.

அதனால் அதனை ஒரு பாபக் கிரகமாக ஜோதிடம் அடையாளம் காட்டுகின்றது. சனி கிரகம் ஒரு ஜாதருக்கு பெரும் தோஷைத்தை ஏற்படுத்தக் கூடிய இடங்ளில் (ஜாதகத்தில் சந்திர ராசிக்கு 1, 2, 5, 8, 12 ஆகிய இடங்களில்) கோசாரமாக சஞ்சாரம் செய்யும் போது அதன் கதிர்வீச்சுக்கள் மேலும் தீவிரம் அடைவதாக கணிக்கப் பெற்றுள்ளன. அதனால் அந்த ஜாதகர் உடல்இ உள்ளம் ரீதியாக பெரும் பாதிப்பை பெறுகின்றார். சனிக்கிரகத்தில் இருந்து வரும் கதிர்களை எள் எண்ணையில் சுவறிய எமது உடம்பு, தாக்க விடாது தடை செய்கின்றது. தீய கதிர்கள் எம் உடலில் தாக்கத்தினை ஏற்படுத்தாது தடுக்கவே இந்த எண்ணைமுழுக்கு.

இத் தீய கதிர்கள் மூளை நரம்புகளை பாதிக்கின்றது. ஜாதகருடைய சிந்தனைகளை திசைமாறி செல்ல வைத்து பல சிக்கல்களில் மாட்டிவிடுகின்றது. அந்த கிரகத்தின் கதிர் வீச்சிலிருந்து தப்பிச்க பல பரிகார சடங்குகள் இருந்தாலும் மிக முக்கியமாக ஒவ்வொரு சனிக்கிழமையும் உடல் முழுக்க எள் எண்ணையய் (நல்லெண்ணை வைத்து) பிரட்டி சூரிய உதயத்தில் 1.'.2 மணி நேரம் நின்ற பின் தோய வேண்டும்.

அதனால் தான் எமது முன்னோர்களும் சனிக்கிழமைகளில் எண்ணை வைத்து தோயும் வழக்கத்தினைப் பின்பற்றியுள்ளனர் என்பது வெளிப்படை. ஆனால் தற்போது நாகரீக மேலாதிக்கத்தினால் அவை பின்பற்றப் படுவதில்லை.


சோஸ்ற் தமிழ் யேர்மன் கலாச்சார அமைப்பு வழங்கும்

**கலாச்சார விழா-2017**

பரத நாட்டியம்
மேற்கத்தேய நடனங்கள்
திரையிசை நடனங்கள்
இன்னும் பல
காலம் 16.09.2017
சனிக்கிழமை

இடம்:
BLAUER SAAL
Im Rathaus-1
59494 Soest
தொடர்புகளுக்கு: 0176 4159 4607



# வெற்றிமணி பற்றி நான்குபேர் என்ன சொல்கிறார்கள்.

ரஜினா தருமராஜா



வெற்றிமணி யேர்மனியில் வெற்றிகரமாக வலம் வரும் பத்திரிகையாகும். சிறுவர்களைக் கேட்டாலே தெரியுமல்லவா வெற்றிமணி பத்திரிகையை.
எமது தமிழ் கடைகளுக்குச் சென்றவுடன் திரும்பிவரும் பொழுது கைகளில் இருப்பது வெற்றிமணி. என்ன நண்பர்களே, நான் கூறுவது சரி தானே.
தமிழ்மொழியில் உருவாகும் இப்பத்திரிகையைப் பலவாசகர்கள் வாசித்து வருகிறார்கள்.




திரையுலகச் செய்திகள், புலம்பெயர் செய்திகள் மற்றும் பல செய்திகளை அறியத்தருகின்றது. பல வித்தியாசமானக் கருத்துகளும் விபரங்களும் எழுதப் படுவதனால், அனைவரும் வாசிக்கக்கூடியதாக இருக்கின்றது.

புலம்பெயர் நாட்டில் வாழும் எங்களுக்கு இங்கேயே பெற்று படிக்கும் வாய்ப்பு கிடைத்ததில் மகிழ்ச்சி. இத்தருணத்தில் எம் மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
விளம்பரங்கள் வண்ண வண்ண நிறங்களில் காணப்படுகின்றன. ஆம் இப்படங்களுக்காகவே பார்க்கலாம் என்றார் ஒருவர். அரங்கேற்றங்களின் விளம்பரங்களும் காணப்படுகின்றன.

இப்பத்திரிகையின் வடிவமைப்பினைப் பார்க்கவே படிக்கவேண்டும் என்ற ஆசை வருமல்லவா!

சிறியவர்களிலிருந்து முதியவர் வரை வாசிக்கக்கூடிய கட்டுரைகளும் கதைகளும் எழுதப்படுகின்றன.




மற்றும் என்னைப்போன்றவருக்கும் எழுது வதற்கு வாய்ப்பு தந்திருக்கிறார்கள். வளர்ந்து வரும் கலைஞர்களை ஊக்குவிப்பதில் வெற்றிமணி முயற்சி எடுக்கின்றது. எங்கள் மக்களுக்காக உருவாக்கப்பட்டது இவ்வெற்றிமணி.
இதுமட்டுமல்ல கலைநிகழ்வுகளும் நடைபெற்றுவருகின்றன. பலரை வளர்த்து வருகின்றது. புலம்பெயர் மண்ணில் வாழ்ந்து வரும் கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் அவர்கள் பெரியதொரு தொண்டு செய்து வருகிறார். ஆம் இலகுவான விடய மில்லை. வேலை சுமைகளுக்கு மத்தியிலும் இவ்வேலை களையும் செய்து வருகிறார். போற்றவேண்டிய விடயமல்லவா!

தமிழுக்குத் தொண்டு செய்து வரும் இவர் நீண்ட காலம் வாழவேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன்.

தமிழ்மொழி அழியாது காக்கும் பல மணிகளில் வெற்றிமணியும் ஒரு மணி!



வெற்றிமணியின் 250 இதழ்களுக்குள் முத்தெடுக்கும் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும், பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும்.



# இந்தக் குடும்பம் இரம்பப் பெரிசு!

XXXL XXXL




**வ.சிவராஜா**

மனித வாழ்வில் பிள்ளைச் செல்வமானது எவ்வளவு புனிதமானது. மனிதனானவன் தான் வாழ்ந்த அடையாளத்திற்கு இன்னொரு உயிரை உருவாக்கிவிட்டுச் செல்கிறான். இது இயற்கையின் நியதி என்றுகூடச் சொல்லலாம். வெள்ளைக்காரரைப் பொறுத்த அளவில் ஒரு குடும்பத்தில் 2 அல்லது 3 பிள்ளைகளைப் பெற்று அதாவது ஆசையோடு அளவாகப் பெற்று, அன்பாக வளர்ப்பார்கள். நமது மக்களைப் பொறுத்த அளவில் 4,5 பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வார்கள். முன்னைய காலங்களில் 10, 12 பிள்ளைகள் பெற்றவர்கள்தான் அதிகம்பேர். கால ஓட்டத்தில் 5,6 பிள்ளைகளாக மாறி இப்போ 3, 4 எனக்குறைந்து, இன்று ஆசைக்கு ஒன்று இரண்டு என்ற நிலைக்கு வந்துவிட்டது.

அதாவது முன்னர் நமது தாய்மார்கள் 10,12 பிள்ளைகளைப் பெற்றுப்போட்டு திடகாத்திரமாகவும் உடற்கட்டோடும் அனைத்து வேலைகளையும் செய்து குடும்பத்தைக் காப்பாற்றினார்கள். ஆனால் இன்றோ ஒரு பிள்ளையைப் பெற்றுவிட்டு ஐயோ!...குய்யோ!... என்று குளறியடித்து ஒப்பாரி வைக்கும் தாய்மார்கள்தான் அதிகம் பேராவர்.

இருக்கட்டும் இப்படத்தில் காணப்படும் குடும்பத்தைப் பாருங்கள் 10 பிள்ளைகளைப் பெற்றுவிட்டுத் தற்போது 11வது பிள்ளைக்கும் தாயாகியிருக்கிறார்.

இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 11வது பிள்ளையும் பிறக்கப்போகின்றது. (தற்போது பிறந்திருக்கும்) யேர்மனி நாட்டவர்களான தாயின் பெயர் கிளவ்டியா வயது 38 (Claudia) தந்தை பெயர் அலெக்ஸ்சாண்டர் (Alexander) வயது 43. இவர் ஒரு அரச அதிகாரியாவர் (Justizbeamter) இவர்களின் மூத்த பிள்ளைக்கு வயது 15 பெயர் Samuel இளைய பிள்ளைக்கு வயது 1. பெயர் Valentin இதில் வேடிக்கை என்னவென்றால் முதலாவதும் கடைசியும் ஆண்கள் மிகுதி எட்டுப்பேரும் பெண் பிள்ளைகள்.

கடந்த 2000ம் ஆண்டில்தான் இவர்கள் திருமணம் முடித்தார்கள். 17 வருடங்களில் 11வது குழந்தையும் பிறக்கப்போகின்றது என்பது பெருமைதான். வருடாவருடம் ஒரு பிள்ளை பெற்றிருக்கிறார்கள். உண்மையில் இந்தப் பெண்மணி பிளளைப்பெறும் இயந்திரம்போல்தான் செயற்பட்டிருக்கிறார். பாவம் இந்தப் பெண்மணி. எவ்வளவு இன்பங்கள் மத்தியிலும் எவ்வளவு துன்பங்கள், துயரங்கள், சோதனைகள், வேதனைகள் தாண்டியும் புன்முறுவலோடு 11வது பிள்ளையையும் பெற்றுக் கொள்ளப் போகின்றார்.

இந்தக் குடும்பத்தைப் பார்த்தால் ஒரு கூட்டுக்குடும்பத்தைப்போல் அனைத்து வேலைகளையும் பிள்ளைகள் குழுவாகப் பங்கிட்டுச் செய்துகொள்வார்களாம். சமையல்வேலை, பொருட்கள் கொள்வனவு, உடைகழுவுதல், வீடு சுத்தம் செய்தல், உடைகள் அடுக்கி வைத்தல், படிப்பது, இளையவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பது போன்ற இன்னோரன்ன வேலைகளைத் தாமாகவே செய்துகொள்வார்கள்.

இக்குடும்பத்திடம் 2 மினிபஸ் வண்டிகள் (Mini Bus) வைத்திருக்கிறார்கள். இவற்றைப் பராமரிப்பது மட்டுமல்ல தாய் தந்தையரோடு வாரத்தில் இரண்டு மூன்று தடவைகள் கடைகளுக்குச் சென்று இந்த மினிபஸ் வண்டிகளில் நிறையவே பொருட்கள் வேண்டிவருவார்கள். எல்லா வேலைகளுக்கும் உதவியாக வளர்ந்த பிள்ளைகள் பக்கபலமாக இருந்து வருகிறார்கள்.

200 QM சதுரமீட்டர் பரபளவுள்ள 8 அறைகள் கொண்ட பெரிய வீடு. குளியலறைகள் காணப்படுகின்றன. 6 இடங்களில் குப்பை வாளிகள் வைக்கப் பட்டுள்ளன. உடைகழுவும் இயந்திரம் 3, பாத்திரங்கள் கழுவும் இயங்திரங்கள் 3 காணபபடுகின்றன. ஒரு தொழிற்சாலைபோல் இந்த வீட்டில் அனைத்து இயந்திர சாதனங்களும் செயற்பட்டுக் கொண்டிருக்கும்.

**XXXL**

இவற்றைவிட வானொலி, தொலைக்காட்சி, கணனி, தொலைபேசி, கைத்தொலைபேசி பரிவர்த்தனைகளும் எந்நேரமும் தொழிற்பட்டுக் கொண்டிருப்பதால் மின்சாரக் கட்டணமும் மிக...மிக அதிகம்தான்.

(Topf) சமையல் பாத்திரங்கள் 13லீட்டர், 10, 8, 6 லீட்டர் வரையுள்ள பலவகையான பாத்திரங்கள் கிளாஸ்வகைகள், சமையல் உபகரணங்கள், சாப்பாட்டுப் பாத்திரங்கள் என விதம் விதமாகக் காணப்படுகின்றன. குளிர்சாதனப் பெட்டிகள் 4 காணப்படுகின்றன. எப்போதும் இப்பெட்டிகளில் பொருட்கள் நிறைந்து வழியும். பால், பழம், பாண், போன்ற உணவுப்பொருட்கள் ஒன்று இரண்டல்ல அனைத்தும் பெட்டி பெட்டியாகக் காணப்படும். இவற்றைவிட களஞ்சிய அறைகளில் கிழங்கு வகைகள் மற்றும் உணவுப்பொருட்களும் நிரம்பி வழியும். பிள்ளைகளின் புத்தக அலுமாரிகள், உடை அலுமாரிகள், கட்டில்கள், மேசைகள் என விதம் விதமாகக் காணப்படுவதால் இக்காட்சியைப் பார்த்தால் ஆச்சரியப்படத்தான் வேண்டும்.

இத்தனைக்கும் இவர்களுக்குச் சொந்த வீடு கிடையாது. மாதவாடகை 2.700 யூரோ கட்டுகிறார்கள். வாகனங்கள் பராமரிப்புக்கு மாதம் 1.400 யூரோவும் உணவு, குடிபானங்களுக்கு மட்டும் மாதம் 2.500 யூரோ எனச்செலவாகின்றது. இவற்றைவிட மின்சாரக்கட்டணம், தொலைபேசிக்கட்டணம், காப்புறுதி, பிரயாணம், பாடசாலைச் செலவுகள், மற்றும் பல செலவுகளுடன் மாதம் 7.000 10.000 யூரோவரை இக்குடும்பத்திற்குச் செலவாகும் தொகையாகும். ஆகவே இந்தக்குடும்பத்தின் மாதாந்த வரவு எவ்வளவு என்பது நமக்குத் தெரியாதுதான். அரச சமூகசேவை உதவிப்பணம், சிறுவர் உதவிக் கொடுப்பனவுப்பணம், குடும்பத்தலைவனின் உழைப்பு என அனைத்தையும் கூட்டிப்பார்ப்பது நமக்கு முடியாத காரியமாகும். வருடா வருடம் ஒரு பிள்ளை கிடைத்தது கடவுளின் நன்கொடை என்று இத்தம்பதிகள் கருதுகிறார்கள்.

எமது தாய் நாட்டை எடுத்து நோக்கினால் நானும் பத்துக்கு மேற்பட்ட பிள்ளைகள் பிறந்த குடும்பத்தில்தான் பிறந்தேன். நான் பிறந்த காலங்களில் பசி பட்டினி தெரியாது. தொழில் வளங்கள் நிறையவே இருந்தன.

## 8வது ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 19.09.1957 உதிர்வு: 07.09.2009

**அமரர் உயர்திரு.கணபதிப்பிள்ளை செந்தில்குமார்.**

யாழ் இணுவில் மேற்கில் பிறந்து யேர்மனி சுவேற்றா நகரில் வாழ்ந்து 07.09.2009 இல் எம்மைவிட்டுப்பிரிந்த எம் அன்புத் தெய்வமே!
உன் அழகுத் திருமுகம் மறைந்து ஆண்டுகள் எட்டு ஆனாலும் உன் ஆத்மா என்றும் எங்களுக்குத் துணைதான் ஐயா உங்கள் ஆத்மசாந்திக்காப் பிராத்திக்கும்.

மனைவி.மக்கள்

தகவல்: றஜீவி.செந்தில்குமார்.(யேர்மனி-சுவேற்றா)

AMMA's food
Sri Lankan & South Indian Specialities

அம்மா'ஸ் உணவகம்

அமைதியாகவும், ஆனந்தமாகவும், பிரியாணி,
கொத்துறொட்டி, இடியப்பக்கொத்து.
தோசை, இட்டலி, மசாலாத்தோசை, பாலப்பம்.
இன்னும் ...நீங்கள் விரும்பியவகை
உணவுகளை உண்டு மகிழ்ந்திட

Amma's Food

சுடச் சுட சுவையுடன்
அம்மாவின் சமையலுக்கு
ஈடானது எங்கள்
உணவுகள்!



Rheinische str.80 A - 44137 Dortmund Tel:0231 33 89 86 91

# சின்னச் சின்ன கௌரவங்கள்தான் ஒரு கலைஞனை சிகரம் தொட வைக்கின்றது

### ஒலிவியாவிற்கு கிடைத்த கௌரவம்

## "சரட்டு வண்டில"




யேர்மனியில் வசித்து வரும் ஈழத்தமிழ் பெண் ஒலிவியாவின் ஆற்றலுக்கு ஏ.ஆர்.ரஹ்மான் மரியாதை கொடுத்துள்ளார்.
ஜெர்மனியில் வசித்து வரும் ஈழத்தமிழ் கலைஞரான ஒலிவியா தனபாலசிங்கத்தின் வீணை இசையினை ஆஸ்கார் நாயகன் ஏ.ஆர்.ரகுமான் தனது பேஸ்புக் மற்றும் டுவிட்டர் ஊடாக பகிர்ந்துள்ளார்.

ஏ.ஆர். ரகுமான் தனது சமூக வலைத்தளங்களில் இப்படியான இசைக் கருவி இசையினை (instrumental cover) பகிர்ந்திருப்பது இதுவே முதல்முறையாகும். இது ஒரு சின்னக் கௌரவமாகவும் தெரியலாம். ஆனாலும் சின்னச் சின்ன பாராட்டும் கௌரவங்களுமே ஒரு கலைஞனை சிகரம் தொடவைக்கின்றது என்பதில் மாற்றுக் கருத்துக்கிடையாது.

ஏ.ஆர். ரகுமான் சமூக வலைத்தளங்களின் ஊடாக தனது 40 மில்லியனிற்கும் மேற்பட்ட அபிமானிகளுக்கு ஈழத்தமிழ் கலைஞர் ஒலிவியாவின் வீணை இசையினை தெரியப்படுத்தியுள்ளார்.

சமீபத்தில் ஏ.ஆர். ரகுமான் இசையில் வெளிவந்த திரைப்படம் ஒன்றில் அனைவராலும் ரசிக்கப்பட்ட "சரட்டு வண்டில" என்ற பாடலை ஒலிவியா.
வீணையில் மீட்டி பதிவேற்றம் செய்திருந்தார்.
அதனை ரசித்த ஏ.ஆர். ரகுமான் தனது ரசிகர்களுடன் இதை பகிர்ந்துள்ளார்.

ஜெர்மனில் பிறந்த ஈழத்தமிழரான ஒலிவியா தனபாலசிங்கம் கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், வீணை போன்றவற்றை முறைப்படி கற்றுத்தேர்ந்தவர். இவர் கானக்குயில், பரத நாட்டிய போட்டிகள் பலவற்றிலும் சிறுவயதிலேயே பல பரிசுகளைப் பெற்றவர்.

ஒன்பது வயதில் இவரது கலைப்பயணம் ஆரம்பமானது. அன்று முதல் இன்று வரை வெற்றிமணி பத்திரிகை அவரது ஆற்றலை வெளிப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

வெற்றிமணி விழாக்களில் அவரது வீணை இசை பலதடவைகள் அரங்கேறியும் உள்ளது. சிறந்த பரத நர்த்தகியாகவும் விளங்குகின்றார். அவருக்கு வெற்றிமணியின் வாழ்த்துக்கள்.













# தாயகத்தில் முதியவர்களின் நிலை



**அனித்தா செல்வராஜா பூஷன்**

"முதியவர்கள்" என்பவர்கள் வேறுயாருமல்ல. எம்மை பெற்றவர்கள் அன்றேல் எமது பெற்றோரை பெற்றவர்கள், வளர்த்தவர்களே. நாம் இன்று எமது பிள்ளைகளுக்காக செய்துகொண்டிருக்கும் தியாகங்களை எமக்குச் செய்தவர்கள், எமக்கு இந்த உலகில் வாழ்வதற்கான அனைத்து விடயங்களுக்கும் வழிகாட்டியாக இருந்தவர்களே ஆவார்.

இன்று எமது தாயகத்தைப் பொறுத்தவரை முதியவர்கள் பொருளாதார ரீதியில் பலம் இழந்தவர்களாகவே உள்ளனர். அதாவது அரச உத்தியோகம் புரிந்து, ஓய்வூதியம் பெறுபவர்களை தவிர ஏனையவர்கள் அனைவரும் தாம் பெற்ற பிள்ளைகளிடமே தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். அரசினால் வழங்கப்படும் இவ்வாறானவர்களுக்கான மாதாந்த உதவித்தொகை இன்றுவரை அவர்களின் வாழ்வாதாரத்திற்கு போதுமானதாக வழங்கப் படவில்லை. கொடுப்பனவு உதவித்திட்ட விதிகளுக்கமைய பலருக்கு இவ் உதவித்தொகை கிடைப்பதுமில்லை.

பிள்ளைகளுக்காக தமது இளமைக்காலத்தில் சம்பாதித்த அனைத்தையும் செலவழித்துவிட்டு வயதான காலத்தில் பிள்ளைகளிடம் கையேந்தி நிற்கின்றனர். இதில் என்னவொரு கவலைக்குரிய விடயமெனில், பிள்ளைகள் நினைப்பது பெற்றோர்களுக்கு வயதாகியதும் சாப்பாடு மற்றும் மருந்துப்பொருட்கள் தவிர இவர்களுக்கு எதற்கு பணம்? என்பதுதான். அதாவது வயதாகியதும் அவர்களின் விருப்பு, வெறுப்பு மற்றும் தேவைகளை வயதானவர்களிடம் கேட்காது பிள்ளைகள் தாமாகவே நிர்ணயிப்பதுதான் கவலைக்குரியது.

இதனைவிட கணவன், மனைவி இருவரும் வேலைக்குச்செல்லும் குடும்பங்களில், அவர்களின் பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பும் இவ்வயதான பெற்றோருக்கே ஒப்படைக்கப்படுகின்றது. இதற்காகவே சிலர் பெற்றோரை தம்முடன் வைத்திருக்கின்றனர். பேரக்குழந்தைகளை பராமரித்தல் என்பதை அவர்கள் முழுவிருப்பத்துடனேயே செய்வார்கள். ஆயினும் அவர்களுக்கு உடல் ரீதியான இயலாமை ஏற்படும்போதோ அன்றேல் தமக்கான சில தேவைகளை நிறைவேற்றமுடியாத சந்தர்ப்பத்தில் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர்.

இன்று யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பிள்ளைகளை புலம் பெயர் நாடுகளிற்கு அனுப்பிவிட்டு தனிமையில் வாழும் முதியவர்கள் என்பதை விட "தனிமையில் வாடும் முதியவர்களே அதிகமாக உள்ளனர். பிள்ளைகள் புலம்பெயர்நாடுகளிலிருந்து அனுப்பும் பணத்தில் வாழ்கின்றனர். தமது தேவைக்கு மிஞ்சிய பெரிய வீடுகளில் தனித்து இருக்கின்றனர். தமக்கு உதவிக்காக உறவுக்கார பிள்ளைகளையோ அன்றேல் அயலில் வசிக்கும் நபர்களையோ வைத்திருப்பர். இவ்வாறு இருப்பவர்கள் எந்தவொரு சிறிய விடயதாக இருந்தாலும் அனைத்தும் பணம் கொடுத்தே நிறைவேற்ற வேண்டிய நிலையிலிருப்பர்.



அனித்தா செல்வராஜா பூஷன்

நோயுறும்போது கூட ஆதரவாக உடனிருக்க பணம்கொடுத்தே ஒருவரை வைத்திருக்க வேண்டிய சூழ்நிலையிலும் இருக்கின்றனர். இவ்வாறு தனித்து இருக்கும் முதியவர்களுக்கான பாதுகாப்பு என்பது இன்று கேள்விக் குறியாகவே உள்ளது.

அண்மையில் கூட யாழ்ப்பாணத்தில் தனித்து இருந்த தம்பதிகளை தாக்கிவிட்டு வீட்டில் களவாடிய செய்திகளையும், மற்றும் தனியாக இருக்கும் வயதான தம்பதிகளுடன் நல்ல உறவாக பழகி, அவர்களிடம் பண உதவிகளும் பெற்று, பின் அதிக பண ஆசையால் நன்றாக பழகியவர்களே அந்த முதியவர்களை உயிராபத்தான நிலைக்கு தாக்கிய செய்திகளையும் கண்டுகொண்டுதான் இருக்கின்றோம்.

இதனைவிட இன்று முதியவர்கள் தமது பிள்ளைகள் மற்றும் பேரப் பிள்ளைகளால் ஒதுக்கப்படுவதால் தாமாகவே முதியோர் இல்லத்தை நாடு கின்றனர். பிள்ளைகள் இல்லாதவர்களை விட பிள்ளைகளை பெற்றவர்களே முதியோர் இல்லத்தில் வாழ்கின்றனர்.

இன்றைய சூழ்நிலையில் இலங்கையைப் பொறுத்தவரையில் முதியோர்களுக்கான நலன்புரித்திட்டங்கள் என்னதான் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் முதியோர்களுக்கான முழுமையான கவனிப்பு என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அதாவது சமூகநலன்புரி அமைச்சினால் முதியோர்செயலகம் ஆரம்பிக்கப்பட்டு, அதனூடாக முதியோர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்காக பிரதேசமட்டத்தில் உத்தியோகத்தர்களும் பணிபுரிகின்றனர். இதனூடாக ஒவ்வொரு கிராம மற்றும் பிரதேசமட்டங்களில் முதியோர் சங்கங்கள் உருவாக்கப்பட்டு இவை நாடளாவிய ரீதியில் இணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இவைகளெல்லாம் செயற்பட்டுக்கொண்டிருந்தாலும் முதியோர்களுக்கான சமூகநிலை என்பது இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது. ஏனெனில் பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் புகையிரதநிலையங்களிலும், கோயில்களிலும் தஞ்சமடையும் முதியவர்கள் இன்னும் இருந்துகொண்டுதான் உள்ளார்கள். இதற்கான காரணம் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளால் ஒதுக்கப்படுவதாகும். பிள்ளைகள் பெற்றோருக்கு கொடுக்கும் அன்பு, மரியாதையை வைத்தே பேரப்பிள்ளைகளும் அதனை பின்பற்றுகின்றனர். எனவே பிள்ளைகள் இவ்விடயத்தில் சிந்தித்து செயற்படவேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் இவர்களின் நிலையும் இதுபோன்றே அமையும்.

உதாரணமாக சில வீடுகளில் விருந்தினர் வந்தால் வயதானவர்கள் வீட்டில் இருந்தால் அறைக்குள் அனுப்பிவிடுவதை இன்றும் காணக்கூடியதாக உள்ளது. அவர்கள் விருந்தினருடன் அதிகம் கதைப்பதை இளம்சமுதாயம் விரும்புவதில்லை. வயதானவர்கள் தேவையற்ற விடயங்களை கதைப்பார்கள் என்பதுடன், முதுமையை அழகற்றதாக நினைக்கும் பண்புகூட ஓர் காரணமாகின்றது. எமது வாழ்வில் அனைவரும் சந்தித்தாக வேண்டிய ஒரு நிலை முதுமை என்பதை ஏனோதெரியவில்லை அனைவரும் உணர்ந்து செயற்படுவதில்லை.

வயதானவர்களும் சில விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். முக்கியமாக சுகாதார பழக்கவழக்கங்களாகும். ஏனெனில் எமது சமூகத்தில் பலர் நினைப்பது வயதானால் தம்மை யாரும் கவனிக்க மாட்டார்கள்தானே, எதற்கு நாம் நல்ல உடை உடுத்த வேண்டும், தலைவார வேண்டுமென. இது மிகவும் தவறாகும். தம்மை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பதை ஒருபோதும் தவறவிடக்கூடாது. இதனைவிட பரம்பரை இடைவெளி மற்றும் காலமாற்றம் என்பதற்கிணங்க இளையோருடன் ஒத்துப்போகும் பண்பையும் முதியோர் தம்மிடம் வளர்க்க வேண்டும். இவ்வாறு இருக்குமிடத்து குடும்பங்களிடையே ஏற்படும் முரண்பாடுகளையும் தவிர்க்க முடியும்.







படங்கள் :நந்தபாலன்

யேர்மனி சுவெற்ரா ஸ்ரீ கனக துர்க்கா அம்பாள் ஆலய தேர்த் திருவிழா காட்சிகள் 30.08.2017




படங்கள் :வெற்றிமணி

# ஈழத்தின் முதலாவது தமிழ்ப்பெண் விமானிக்கு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பாராட்டு விழா!




இந்திய, புலம்பெயர், ஈழத்து உறவுகளின் பங்கேற்புடன் ஈழத்தின் முதலாவது தமிழ்ப்பெண் விமானி அர்ச்சனா செல்லத்துரைக்கு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பாராட்டு விழாவும், "மறத்தி"இறுவட்டு வெளியீட்டு விழாவும்.
ஈழத்தமிழர்களின் சாதனைகள் தாயகத்திலும், புலம்பெயர் தேசத்திலும் எப்போதுமே தொடர்பவையே. புலம்பெயர்ந்து டென்மார்க் தேசத்தில் வசிக்கும் அர்ச்சனா செல்லத்துரை ஈழத்தினைச் சேர்ந்தவர். ஈழத்தின் முதலாவது தமிழ்ப்பெண் விமானி எனும் பெருமைக்குரியவர். இவருக்கான பாராட்டு விழாவும், "மறத்தி" இறுவட்டு வெளியீட்டு விழாவும் 07.08.2017 திங்கட்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு ஈழத்தின் யாழ்ப்பாணம் நகரிலுள்ள வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.
"சிம்மக்குரலோன்" சி.நாகேந்திரராசா நிகழ்வுக்கு தலைமை வகித்தார்.

வரவேற்புரையினை டென்மார்க் பன்முகப் படைப்பாளி கி.செ.துரை அவர்கள் வழங்கினார். தலைமையுரையைத் தொடர்ந்து வாழ்த்துரையினை வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன், டென்மார்க் நடிகை நர்வினி டெரி ஆகியோர் நிகழ்த்தினார்.

தொடர்ந்து ஈழப்படைப்பாளிகள் சார்பில் "செல்லமுத்து வெளியீட்டகம்" இயக்குநர் யோ.புரட்சி போற்றலுரை நிகழ்த்தினார். "மறத்தி" பாடல் இறுவட்டிற்கான வெளியீட்டுரையினை "கோபால் வெளியீட்டகம்" இயக்குநர் கம்பிகளின்மொழி பிரேம் நிகழ்த்தினார்.




ஈழத்தின் முதலாவது தமிழ்ப்பெண் விமானி அர்ச்சனா செல்லத்துரை அவர்கள் பாடிய பாடல்களைத் தாங்கிய "மறத்தி" பாடல் இறுவட்டினை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டு வைக்க முதற்பிரதியினை வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் அவர்கள் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து யாவருக்கும் இறுவட்டு வழங்கிவைக்கப்பட்டது. ஏற்புரையுடன் கூடிய நன்றியுரையினை ஈழத்தின் முதலாவது தமிழ்ப்பெண் விமானி அர்ச்சனா செல்லத்துரை வழங்கினார்.

"ரியூப் தமிழ்" அனுசரனையில் இடம்பெற்ற இந்நிகழ்வானது நற்திறனாளிகளை "வாழ்ந்து கொண்டிருக்கும்போது கௌரவித்தல்" என்பதன் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டும் நல்லதொரு நிகழ்வாக நடந்தேறியமை குறிப்பிடத்தக்கது.





# திருமந்திரமும் வாழ்வியலும் 20

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## திருமந்திரம் கூறும் மூச்சுப் பயிற்சி (பிராணாயாமம்) (பாகம் – 2)





சென்றமாத கட்டுரையிலிருந்து தொடர்ந்து திருமந்திரம் கூறும் மூச்சுப் பயிற்சி பற்றிப் பார்ப்போமானால் தினமும் செய்க தலைவன் ஆகலாம் பாடல் எண் 570

“எங்கே இருக்கினும் பூரி இடத்திலே
அங்கே அதுசெய்ய ஆக்கைக்கு அழிவில்லை
அங்கே பிடித்துஅது விட்டளவும் செல்லச்
சங்கே குறிக்கத் தலைவனும் ஆமே”

எங்கே இருந்தாலும் இடதுபக்கத்து மூக்குத் துளை வழியாக அந்த இருக்கும் இடத்தில் இருந்தபடியே இடகலை வழியாக மூச்சுப் பயிற்சி செய்ய உடம்புக்குக் கேடில்லை. உள்ளிழுத்த மூச்சுக் காற்றை நிறுத்திப் பின் வெளியேற்ற சங்கநாதம் முழங்கும் தலைமைப் பொறுப்புடையவனும் ஆவான்.
காற்றைப் பிடித்தவன் கடவுளும் ஆகலாம் எனக் கூறும் பாடல் எண் 571

“ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்குஅறி வார்இல்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறிஅது ஆமே”

இடப்பக்கம் (இடகலையில்) மூச்சை உள்ளே இழுத்து வலப்பக்கவழியாக வெளிவிட்டு இருபக்கமும் செய்து உள்ளே மூச்சுக் காற்றை நிறுத்தி ஆசனம் செய்யினும், மூச்சை உள்ளுக்குள் நிறுத்தும் காலஅளவைக் கணக்கைப் பலர் அறிவதில்லை. அப்படி அறிபவர் பெரியோர் (அறிவாளர்). இவர்கள் எமனை எதிர் கொண்டு வெற்றி பெறும் ஆற்றலாளர் ஆவர்.
மூச்சுப் பயிற்சியால் இறை அருளைப் பெறலாம் எனக் கூறும் பாடல் எண் 572

“மேல்கீழ் நடுப்பக்கம் மிக்குறப் பூரித்துப்
பாலாம் இரேசகத் தால்உட் பதிவித்து
மாலாகி உந்தியுள் கும்பித்து வாங்கவே
ஆலாலம் உண்டான் அருள்பெற லாமே”

மூச்சை உள் இழுத்து வெளியேற்று முன் இழுத்த மூச்சை தலை, மூலாதாரம் என்று உடல் முழுவதும் பரவித் தங்கச் செய்து ஆசனத்தின் மேல் கொண்ட விருப்பத்தால் அடி வயிற்றில் கும்பகம் செய்து வாழ்ந்தால் ஆலகால நஞ்சை உண்ட திருநீலகண்டனாகிய சிவன் அருளைப் பெறலாம்.

## காற்றைப் பிடித்தவன் கடவுளும் ஆகலாம்

மூச்சுப் பயிற்சி செய்யும் முறைமையை கூறும் பாடல் 573
“வாமத்தால் ஈரெட்டு மாத்திரை பூரித்தே
ஏமுற்ற முப்பத் திரண்டும் இரேசித்துக்
காமுற்ற பிங்கலைக் கண்ணாக இவ்விரண்டு
ஓமத்தால் எட்டெட்டுக் கும்பிக்க உண்மையே”

இடதுபக்க நாசித் துவாரத்தின் வழியாக (இடகலை) பதினாறு மாத்திரைப் பொழுது மூச்சை உள் இழுத்து, பாதுகாப்பான முப்பத்துஇரண்டு மாத்திரை அளவு வெளியேற்றி விரும்புதற்குரிய இடகலை, பிங்கலை (வலது பக்க நாசித் துவாரத்தால் வெளி விடுதல்) ஆகிய இரண்டும் இரு கண்ணாகக் கொண்டு அறுபத்துநான்கு மாத்திரைப் பொழுது கும்பகமாக்கிய (உள் நிறுத்துதல்) வேள்வியைச் செய்தால் உண்மைப் பயன் அடைய உதவும்.
எம பயம் நீங்க மூச்சுப் பயிற்சி செய்க எனக் கூறும் பாடல் 574

“இட்டது அவ்வீடு இளகாது இரேசித்துப்
புட்டிப் படத்தச நாடியும் பூரித்துக்
கொட்டிப் பிராணன் அபானனும் கும்பித்து
நட்டம் இருக்க நமன்இல்லை தானே”

தரப்பட்டுள்ளதான வீடாகிய இந்த உடம்பு தளர்ந்து போகாதிருக்கும். மூச்சை வெளிவிட்டு புடைத்துப் பத்து நாடிகளும் பூரிக்க மூச்சை உள்ளிழுத்து நிரப்பி, பிராணன், அபானன் (மலவாயு) இரண்டும் சேர்ந்து செங்குத்தாக நேராக இருக்க எம பயம் இல்லை.
இறைவன் எம்முடன் இருப்பான் எனக் கூறும் பாடல் 575

“புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட உள்ளே நின்மலம் ஆக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமம் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே”

வெளி வந்தும், உள் புகுந்தும் உடல் முழுவதும் பரவி நிற்கும் மூச்சுக் காற்றை முறையாக உடலுக்குள் கும்பகம் செய்வதன் மூலம் தூய்மை அடையச் செய்தால் உடல் உறுப்புகள் புத்துணர்வு பெற்றுச் சிவக்கும். தலைமுடி கறுத்திருக்கும். இப்படிப்பட்ட உடம்பை விட்டு சுருண்ட சடைமுடி உடைய பெருமானும் நீங்காது அதிலேயே நிலைத்து இருப்பான்.
சீவன் சிவமயமாகும் எனக் கூறும் பாடல் 576

“கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண்(டு) அங்குலம்
நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால்விரல்
கூடிக் கொளின்கோல அஞ்செழுத்து ஆமே”

உடம்பில் குடியிருக்க இடம் எடுத்துக் கொண்ட பிங்கலை, இடகலை ஆகிய இரண்டும் ஓடும் போது பன்னிரண்டு அங்குலம் நீளம் வெளிப்படும், உட்புகும். வயதான நிலையில் கழுத்துக்கு மேலே தலையில் செல்லும் நான்கு விரல் கடை குறைந்து எட்டு விரல் கடை அளவே செயல்படும். குறைவுபட்ட நான்கு விரல் கடை அளவும் கூடிவிட்டால் சீவன் சிவசொரூபம் ஆகும்.
இரவு பகலறியா இன்ப நிலை பற்றிக் கூறும் பாடல் 577



“பன்னிரண்டு ஆனைக்குப் பகல்இர வுள்ளது
பன்னிரண்டு ஆனையைப் பாகன் அறிகிலன்
பன்னிரண்டு ஆனையைப் பாகன் அறிந்தபின்
பன்னிரண்டு ஆனைக்குப் பகல்இரவு இல்லையே”

பன்னிரண்டு விரல் கடை செயல்படும் மூச்சுக்காற்றிற்கு பகல் இரவு உள்ளது. பன்னிரண்டு அங்குலம் கீழ்நோக்கிச் செல்லும் பிராணனை சீவன் அறியவில்லை. இந்தப் பிராணன் மேல்நோக்கிச் செல்லும்போது ஆன்மா அறியும். அப்போது ஆன்மா இரவு, பகல் பேதம் இல்லா இன்ப நிலையைப் பெறும்.








# அவள்

எலையா க.முருகதாசன்

அவசரமாக வெளிக்கிட்டு வேகமாக கதவு வரையும் போன தர்சினியை "எங்கை அவசரமாககப் போகிறாய்" எனக் கேட்ட தாயின் குரல் தடுத்து நிறுத்துகின்றது.

"சகானா" அவசமாகக் கதைக்க வேணுமாம் வரச் சொன்னவள் அதுதான் போய்க் கொண்டிருக்கிறன்" என்று போன போக்கில் சொல்லிக் கொண்டே தர்சினி பெருந்து நிலையத்தை நோக்கி வேகமாக நடக்கிறாள்.

தன்னை அவசரமாக வரச் சொன்ன சகானாவின் குரலில் வழமைக்கு மாறான பதட்டமும் சோகமும் இருப்பதை கைத்தொலைபேசியில் பேசிய தொனியிலிருந்து அறிந்து கொண்ட தர்சினி நிலை கொள்ளாமல் தவித்தாள்.

தர்சினியும் சகானாவும் அவர்கள் இருவரும் வசித்து வந்த அனன்பேர்க் நகரில் ஒரே வங்கியில் வேலை செய்பவர்கள். அதனால் சகானாவின் குணத்தை அவள் அறிந்து வைத்திருந்தாள். சகானா எளிதில் உணர்ச்சிவசப்படுபவள், வேகமாக கோபப்படுபவள். பலமுறை அது அவளுக்குப் பாதமாகவே முடிந்திருக்கிறது. என்னவாக இருக்கும், அவசரமாக கதைக்க வேணும் என்று ஏன் வரச் சொன்னவள் என அவளுடன் பழகி வரும் நாட்களில் ஏற்பட்ட நிகழ்வுகளையும் நினைவுக்கு கொண்டு வந்து அதுவாக இருக்குமோ இதுவாக இருக்குமோ என எண்ணியவாறு பேருந்து நிலையத்திற்கு வந்தவள் புறப்பட கதவு பூட்டிய நிலையில் ஆயத்தமாயிருந்த பேருந்தின் சாரதிக்குக் கையைக் காட்டி நிறுத்தும்படி செய்து வேகமாக ஏறி மூச்சு வாங்கியபடி இருக்கையில் அமர்கிறாள். "நான் வந்து கொண்டிருக்கிறேன்" எனக் குறுஞ்செய்தியை அனுப்பிய தர்சினி யன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு என்ன நடந்திருக்கும் என்ற பதட்டத்துடன் அவள் வரச்சொன்ன இடத்தில் உள்ள பேருந்து நிலையத்தில் இறங்கியவள், இறங்கிய இடத்தில் உள்ள கடைத்தொகுதி சுணையின் படிக்கட்டில் சகானா உட்கார்ந்திருப்பதைக் கண்ட தர்சினி வேகமாக அந்த இடத்திற்கு போய்ச் சேருகிறாள்.தனது தோழியைக் கண்டதும் சகானா குமுறி அழுதபடி அவளின் தோளில் சாய்ந்து விம்மி விம்மி அழுகிறாள். "என்னடி சொல்லு ஏன் அழுகிறாய் " என்று சொல்லியவாறு அவளின் தலையை நிமிர்த்துகிறாள். தான் இனி உயிரோடை இருக்கமாட்டன் எனச் சொல்லியவாறு தனது கைத்தொலைபேசியில் தனது பெயரில் இருக்கும் முகநூலைக் காட்டுகிறாள். சகானாவின் பெயரில் அவளின் அரைகுறை நிர்வாணப்படங்கள் இருக்கின்றன. வெவ்வேறு இளைஞர்களை கட்டி யணைத்தபடி இருக்கும் படங்களும் இருக்கின்றன.

அதிர்ச்சியடைந்த தர்சினி "என்னடி இதெல்லாம்" என்று கேட்க, என்னுடைய படத்தை எங்கிருந்தோ எடுத்து யாரோ எனது பெயரில் முகநூலைத் திறந்து இப்படிச் செய்திருக்கிறார்கள்" என அழுதவாறு சொல்கிறாள். படங்களுக்குக் கீழ் ஜேர்மன் மொழியிலும், ஆங்கிலத்திலும், தமிழிலும் மிக மோசமான அருவருக்கத்தக்க கருத்துக்கள் இருந்தன.

"இது உன்னுடைய படமா" தர்சினி கேட்க,என்னுடைய முகத்தை எடுத்து யாரோ கிராபிக்கில் இதைச் செய்திருக்கிறார்கள். அப்பா அம்மாவிற்கு இன்னும் தெரியாது, தெரிந்தால் என்ன நடக்குமோ தெரியவில்லை. "நான் உனக்குக் கனநாளாய்ச் சொன்னனான் தெரியாதவர்களை முகநூலில் இணைக்க வேண்டாம் என்று.நிறைய லைக்குகள் கிடைக்க வேண்டுமென்ற பேராசையாலை அறியாதவர்கள் எல்லாரையும் இணைத்து இப்ப பார் எங்கை போய் முடிஞ்சிருக்கு என்று, "சரி வா என்னுடன், பொலிசிலை போய் முறைப்பாடு கொடுத்தால் அவர்கள் யாருடைய கொம்பியூட்டரிலிருந்து இந்த முகநூல் செய்யப்பட்டது என்று கண்டுபிடித்துச் சொல்வார்கள் வா"என தர்சினி சகானாவின் கையைப் பிடித்து எழுப்புகிறாள்."தர்சினி வேண்டாம் வேண்டாம் அது எல்லாருக்கும் தெரியவந்திடும் வீட்டுக்கும் தெரிந்திடும்" என அவளைத் தடுக்கிறாள். மீண்டும் அவள் பக்கத்தில் உட்கார்ந்த தர்சினி" உன்னட்டை ஒரு விசயம் கேட்கிறன் மறைக்காமல் சொல்லு, உன்னை யாரையாவது காலித்து நீ அவனை வேண்டாம் என்று அவனுக்கு சொல்லியிருக்கியா" எனக் கேட்க, கொஞ்சம் தடுமாறிய சகானா "இல்லை இல்லை அப்படி யாரையும் நிராகரிக்கவில்லை"என்கிறாள்

சகானாவின் பதிலில் திருப்திப்படாத தர்சினி. "நீ எதையோ மூடி மறைக்கிறாய் முகமே காட்டுது" எனச் சொல்ல, "தர்சினி சொன்னால் நம்பு அப்படி ஒன்றும் இல்லை" என்கிறாள். உணர்ச்சிவசப்படாதை உன்னுடைய குணம் எனக்குத் தெரியும், வீட்டிலை போய் அமைதியாக இரு. இதை யார் செய்தது என்பதைக் கண்டுபிடித்துவிடலாம்" எனச் சொல்லியவாறு அவளையும் அழைத்துக் கொண்டு பேருந்தில் ஏறி இருவரும் போகிறார்கள். சகானா தான் இறங்க வேண்டிய இடம் வந்ததும் இறங்கி தனது வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். தர்சினி வீட்டின் கதவைத் திறந்ததும்" தாய் பதட்டத்துடன் சகானாசை சந்திச்சியா" என்கிறாள்" ஓமம்மா" என்கிறாள். "அங்கை ஏதோ பிரச்சினையாம் சகானாவை தகப்பன் அடிக்கப் போக அவள் கோபத்திலை நிலம் கழுவிற தண்ணியை எடுத்துக் குடிச்சிட்டாளாம். ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனவை ஒரு ஆபத்தும் இல்லையாம்" எனத் தாய் சொல்ல அதிர்ச்சியடைந்த தர்சினி"யாரம்மா சொன்னது" எனக் கேட்க, பக்கத்து வீட்டு சகுந்தலா சொன்னவள்" என்கிறாள்.வந்த வேகத்திலே தர்சினி சகானா இருக்கும் ஆஸ்பத்திரிக்கு ஓடுகிறாள்.

சகானாவை ஆஸ்பத்திரியில் பார்த்திட்டு வந்ததன் பின் தர்சினி அமைதியாக இல்லை. தனது தோழியின் தற்கொலை முயற்சிக்கு யார் காரணமாக இருக்கும் எண்ணியபடியே இருந்தாள். அன்றிரவு தனது லப்ரப் பழுதடைந்துவிட்டதால் தனது அண்ணனின் கொம்பியூட்டருக்கு முன்னால் இருந்து, ஒரு ஆய்வுக்கட்டுரையை பதிவு செய்வதற்காக பதியாத பென்றைவ் இருக்குதா என ஒன்றை எடுத்து கொம்பியூட்டரில் பொருத்தி கிளிக் செய்தவளுக்கு பெரும் அதிர்ச்சி. சகானாவின் முகநூலில் இருந்த அவளின் அரைகுறை நிர்வாணப்படங்கள் அத்தனையும் இருந்தன.சகானாவின் போலியான முகநூலும் அதில் இருந்தது.கோபத்தின் உச்சிக்கே போய்விட்டாள் தர்சினி.வேகமாக கூடத்திற்கு வந்த தர்சினி அங்கே தாயும் தகப்பனும் தனது அண்ணனும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும்" டேய் நீதானா அந்தக் கேவலமான வேலையைச் செய்தனி" என்று கோபத்துடன் அவன் சட்டையைப் பிடித்துக் கொண்டே, அவன் முகத்துக்கு நேரே பென்றைவ்வைப் பிடித்தபடி "இது என்ன" பல்லை நெருமினாள்.

அண்ணா அண்ணா எனப் பாசமாக அழைப்பவள் பத்திரகாளியாக டேய் என்று சொல்லி நின்றதைப் பார்த்து தகப்பனும் தாயும் திகைத்து நிற்க , சகானாவின் அரைநிறை நிர்வாணப் படங்களைப் போட்டு முகநூல் செய்தவன் இவன்தானப்பா, அவள் தற்கொலை செய்யப் போனதற்கும் இவன்தானப்பா காரணம், இனி எப்படி அவளின்ரை முகத்திலை விழிப்பன் என விக்கி விக்கி அழுது கொண்டே எல்லாவற்றையும் சொல்ல, "ஏனடா இந்த வேலையைச் செய்தனி" என அடிக்க கையோங்கிய கணவனைத் தாய் தடுத்து" சொல்லு ஏன் இப்படிச் செய்தனி சொல்லு, நீதான் இதைச் செய்தனி என்று மற்றவை அறிந்தால் எங்களைக் காறித் துப்புவினமே, சொல்லடா ஏன் செய்தனி எனக் கேட்க" அவன் தலையைக் குனிந்தபடியே "அவளை நான் விரும்பினன், அதை அவளிட்டைச் சொன்னன், அதற்கு அவள் "உன்ரை மூஞ்சைக்கு நீ என்னை விரும்பிறியா" என்றாள் அதுதான்..." " அதற்காக இப்படிக் கேவலமாகவா செய்வாய" என்ற தந்தை`. இது பாரதூரமான குற்றம்.அதுகள் பொலிசிலை அறிவித்தால் மானம்மரியாதை எல்லாமே போயிருக்கும். உனக்கும் ஒரு தங்கச்சி இருக்கிறாள் அதை நினைச்சியா, என்ரை கண்ணுக்கு முன்னாலை இப்ப எல்லாத்தையும் அழி...இப்ப அழிக்க வேணும்.. தந்தையின் கண்முன்னால் எல்லாவற்றையும் அழித்தான்.

எனது அண்ணன்தான் இதையெல்லாம் செய்தான் என்று எப்படி என் தோழிக்குச் சொல்வேன் என எதுவுமறியாமல் தவித்து கண்ணீர வழிய சோபாவில் ஒருக்களித்துப் படுத்திருந்தாள் தர்சினி.


SRI OM SHAKTHI ASTROLOGICAL CENTRE



அனைத்து மதங்களும் வரவேற்க்கப்படுகின்ன..

உலகப் புகழ்பெற்ற இந்திய ஜோதிடர்.

Pandith: Thulasidasan

9 வது தலைமுறையில் கடந்த காலம் , நிகழ்காலம்,மற்றும் எதிர்காலம் பற்றிக் கணித்தல், மற்றும் முகநாடி கைரேகை ஆகியவற்றிலும் வல்லுனர்.

லட்சுமி பூஜை.இல்லப் பூஜை. சாந்தி பூஜை.செய்துதரப்படும். எதிரிகள் மற்றும் பொறாமைய அனைத்தில் இருந்தும் பாதுகாப்பளிக்கப்படுகின்றது.



மந்திர செய்வினைகள் சூனியம், கெட்ட, ஆவிகள் ஆகியவற்றில், இருந்து விடுதலைபெற்று நிவாரணம் பெற, வாழ்நாள் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. வேதத்தீர்வுகள்.கல்வி, காதல், தொழில்,பதவி உயர்வு, நீதிமன்ற வழக்கு,உடல் நலம், குடும்பப்பிரச்சினை,திருமணம்,காதல் விவகாரம், குழந்தைப்பாக்கியம்,கணவன் மனைவி ஒற்றமையின்மை, இன்னும் பல..

மொழிகள்: தமிழ் இந்தி ஆங்கிலம்.

08:00 am to 8.00 pm Private and confidential

Heiderstr., 45476 Mülheim
(Bushaltestelle: Steinmetzstr)

0049(0)151 63222251
0049(0)152 18133859



யேர்மனியில் பிராங்பேட் நகரில்

JAFFNA BASAR

உரிமையாளர்: நடராஜா சுதன்

Tel: 069 25 62 63 53

மாதம் மாதம் மாதரைக்கவரும் புத்தம் புது டிசைன்களில் தங்க நகைகள்

ஒரே இடத்தில் தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும் குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள் மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்



சித்திரம் Tv எம்மிடம் கிடைக்கும்

Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main


Dortmund நகரில்
19.08.1992-19.08.2017
25 YEARS CELEBRATING
LAKSIVA ROMA
வெள்ளிவிழாக்
கொண்டாட்டம்!!!
பல்லின மக்களின் பேராதரவு பெற்ற எமது நிறுவனம்
தனது வாடிக்கையாளர்களுக்கு குளிர்பானங்களை
அன்பளிப்பாக வழங்கி கொண்டாடியது.
தமிழ் வாடிக்கயையாளர்களுக்கு இரவு 8.00 மணி முதல்
யாவும் இலவசமாக வழங்கி அசத்தியது!!
உரிமையாளர் குரும்பசிட்டி.க.சிவபாலன்.
auch zum mitnehmen
PIZZA
NUDELN
SALATE
படங்கள் :வெற்றிமணி
சுவை மிகுந்த Pizza க்கு நாடுங்கள்
Öffnungszeiten:
Montag-Sonntag
11.30-22.00 Uhr
Hohe Straße 46 - 44139 Dortmund Tel:0231 10 25 47 Fax: 0231 589 804 50



யேர்மனி – கம் சித்தி விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழா 06.08.2017





படங்கள்:வெற்றிமணி







மதிப்பிற்குரிய இதழாசிரியர் சிவகுமாரன் ஐயா அவர்களுக்கு ஹம் காமாட்சி அம்பாள் வெள்ளி விழாவில் கௌரவிக்கப்பட்ட இந்தியாவின் ஆன்மிக எழுத்தாளர் பனையபுரம் அதியமானின் வணக்கம்.
தங்கள் இதழை சிவத்திரு புவனேந்திரன் ஐயா மூலம் கிடைத்தது. மகிழ்ச்சியும் நன்றியும்.
புவனேந்திரன் ஐயாவின் நட்பு பொக்கிஷம் என்பதே உண்மை.
தங்களது தந்தையின் நினைவுகள் குறித்த கட்டுரை கண்களில் நீர் தளும்பியது.ஹம் காமாட்சி அம்பாள் அருளால் விரைவில் உங்கள் கரங்களுக்கு சொந்தமாகும்.இது நிச்சயம்.
வாழ்த்துக்களுடன்.
**பனையபுரம் அதியமான் –தமிழ்நாடு**

அன்புடன்
ஆசிரியர் திரு. மு.க.சு.சிவகுமாரன் அவர்கட்கு.
250ஆவது இதழ் என நம்பவே முடியவில்லை. வெற்றி மணியால் கிடைத்த வரங்கள் மாபெரும் பொக்கிஷங்கள்.என்றென்றும் மனதில் நீங்காத மலரும் நினைவுகள். தாயகத்தில் கிடைத்த அனைத்து ஆசிகளும் பாராட்டப்பட வேண்டியது.
தவறாது வெற்றி மணி பத்திரிகையை வாசிப்பதுண்டு. எப்போ வரும் என ஆவலாய் காத்திருப்பேன். இன்னும் பல ஆண்டுகள் தொடர்ந்து வலம் வர வேண்டும் . வெற்றி மணி மணி மணி யான செய்திகளை மக்களுக்காக அள்ளிக் கொடுத்து வெற்றி கண்டது.
என் குடும்பத்தார் அனைவர் சார்பிலும் நன்றியையும் ,வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.
அன்புடன்
**புவனம் தர்மரட்ணம் –இங்கிலாந்து**
14.07.2017-

POWER 250



அன்புடன் வெற்றிமணி ஆசிரியர்
மு.க.சு.சிவகுமாரன் அவர்களுக்கு

இன்னும் 1968 ஆண்டு எனது
கட்டுரைகளுடன் வெளிவந்த
வெற்றிமணிகள் என்வசமுள்ளன.

வீட்டுக்கு வந்து ஆசிரியர்
மு.க.சுப்பிரமணியம் அவர்களைச்
சந்தித்துள்ளேன்.




நன்றி மறவேன்

**.திக்குவல்லை கமால் – இலங்கை**




**1955 இல் வெற்றிமணியில் வெளிவந்த நேயர் குரலுக்கான ஓவியம்**

## உனக்கு தெரியுமா 250 நான் உன்னை நினைப்பது!

**கவிஞர் பாடகர்,இசையமைப்பாளர்.எம்.பி பரமேஷ்**

கவிஞர் பாடகர் இசையமைப்பாளர்,உனக்கு தெரியுமா நான் உன்னை நினைப்பது (1968) பாடல் புகழ் எம்.பி பரமேஷ் அவர்களின் வாழ்த்துக்கள்.

திரு.மு.க.சு.சிவகுமாரன் அவர்களுக்கு வாழ்த்துக்கள்

தொடுவானம் தொட
முயற்சிப்பவர்கள் உண்டு
தொட்ட பணி தொடர
முயற்சிப்பவரும்முண்டு

அன்றும் இன்றும் எம்மவரிற் பலர்
தொட்ட பணியை
விட்டோடியவர்களே

தொட்டபணி தெடர்ந்து
எட்டிப்பிடித்த 250 வது
வெற்றி மணி அடிக்கும்
நிச்சயமென் கைகளும் சேர்ந்தே...
தொடர்ந்து ஒலிக்கட்டும்

அன்புசேர்
எம்.பி.பரமேஷ்
20.07.2017


எம்.பி பரமேஷ்-மாலினி

250 வது வெற்றிமணி இதழ் கண்டதும்,மலர்ந்து விரிந்த வாழ்த்துக்கள்..




## எமனின் குழந்தையாகிறேன்.

இதோ நான் இறந்து
எமனின் குழந்தையாகிறேன்.

மனதிற்கு நின்மதியான முடிவு எடுப்பதற்கு ஏனோ
இவ்வளவு காலம் தாமதித்திருக்கிறேன்.

எனது இறப்பினால் மதுக்கடைக்காரன்
வியாபாரம் ஓரளவு குறைவடையும்.

விரோதிகளின் துப்பாக்கிகளில் எனக்காக நிரப்பப்பட்ட
தோட்டாக்களுக்கு இனி மரணம் இருக்காது.

சில தோழிகளின் தொலை பேசிகளில் இருந்து
என் தொடர்பு இலக்கம் நிரந்தரமாகவே அழிக்கப்படும்.

புகையிலை உருட்டி தந்தவர்கள் இரும்பும் போது
சிலவேளை என் ஞாபகம் அவர்களுக்கு வந்து போகலாம்

துரோகிகள் கொண்டாடுவார்கள் - ஆனால்
எதிரிகளுக்கு வாழ்வு தொலை தூரமாகிவிடும்

கூட வாழ நினைத்தவர்கள் கூட
சில வாரங்களில் மாறிவிடுவார்கள்.

இதுவரை கூட இருந்தவர்கள் என்னை கொல்லாமல்
விட்டிருந்ததே பெரும் அதிஸ்ரம் தான்.

தீர்க்க படாமல் நிலுவையில் இருக்கும் பல வழக்குகள்
என்னில் திணிக்கப்படலாம்.

சுவரொட்டியை பார்த்து முகம் தெரியாதவர்களும்
சில சமயம் கண்ணீர் சொரிவார்கள்.

பிணத்தை சுற்றி நிற்பவர்கள் கட்டாயம்
எச்சில் தடவியாவது அழுது காட்ட நேரிடும்.

கருப்புக் கொடி கட்டவோ கடை அடைக்கவோ
தீக்குளிக்கவோ...யாருக்கும் தேவை இருக்காது - காரணம்
நான் அரசியல்வாதியோ நடிகனோ இல்லை...

சாதாரண மனிதனின் சாவு இந்த உலகத்தில்
ஒரு எறும்பை நசுக்குவது போன்றது தான்

ஆனால் கரும்பையோ சக்கரையையோ திருடாத
எறும்பு தற்கொலையே செய்கிறது என்றால் - அதன் தேவை
ஒரு போதும் இனிப்பாக இருக்க வாய்ப்பில்லை...



## கொஞ்சம் பயமாய் தான் இருக்கிறது

மிக நுணுக்கமாக ருசுவால் அடிக்கடி உதடுகளை
துடைத்து ஒரு வடை சாப்பிடுவதற்கே - உனக்கு
அரை மணி நேரம் தேவைப்படுகிறது.

"பசியின் போது வீட்டில் பழங்கறி
சட்டியுள் பிரட்டி - அவெக் கென்று
எப்போதாவது சாப்பிட்டிருப்பாய் தானே..."

முகத்துக்கு முன் விழும் கூந்தல் முடிகளை
குறைச்த பட்சம் சிமிசத்துக்கு இரண்டு முறையாவது
விரல்களால் தூக்கி தூக்கி விடுகிறாய்.

"நீ தலை நுணாவியதையோ சொறிந்ததையோ
இதுவரை நான் பார்த்ததேயில்லை..."

வார்த்தைகள் இடையே ஆங்கிலம் கலப்பாய் - அதன்
உச்சரிப்பின் தொனியில் மென்மை தடவியே
உரையாடுவாய் - தொலை பேசியில் என்றால்
உன் குரல் மேலும் நளினமாகிவிடும்.

"கெட்ட வார்த்தை பற்றி சொல்லவில்லை
சிலவேளை - யாரோடாவது காட்டமாக
தொண்டை கிழிய கத்தியிருக்க கூடுமே..."


வீடியோ அழைப்பு தொடுத்தாலும் - நீ
அலங்காரம் செய்து முடித்த பிறகுதான்
முகம் காட்டுவாய் - எந்த பூச்சுகளும் இல்லாமல்
ஒரு போதும் உன்னை சந்திக்கவுமில்லை..

"நியமாகவே தூங்கி எழுந்தவுடன் - நீ
எப்படித்தான் இருப்பாயோ யோ யோ யோ..."

உன் அடக்கம் ஒடுக்கம் ஒழுக்கம்
எல்லாமே எனக்கு பிடித்தேயிருக்கிறது - ஆனால்
ஒரு முறை உன்னை சாதாரணமாக பார்க்கவே
பிரியப் படுகின்றேன்.

"கல்யாணத்துக்கு அப்புறம் எப்போதுமே
உன்னை மிக சாதாரணமாகவே
பார்க்க போகிறேன் - என்பதை நினைக்க
கொஞ்சம் பயமாய் தான் இருக்கிறது"

நெடுந்தீவு முகிலன்

ஸ்ரீ கனகதுர்க்கா
அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

Milin Impex GmbH
SALE புரட்டாதி மாத மலிவு விற்பனை
Westendorf Str.41 - 44287 Dortmund
எமது மலிவு விலைகளை
அறிந்துகொள்ள
Web :www.milinimpex.de
Web :www.milinimpex.de
Tel: 0231 45 96 17
info@milinimpex.de
எமது நிறுவனம்
Mo-Sa 10.00-இருந்து 18.00 வரை
உங்களுக்காகத் திறந்திருக்கும்

பசுமையான மரக்கறிகள் கடலுணவுப் பொருட்கள் இவற்றின் இறக்குமதியாளர்கள்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288

# ஆளப் போறான் தமிழன்

## என்பதை விஜய் ரசிகர்கள் உண்மையாக்க வேண்டும்:

## மெர்சல் விழாவில் ஏஆர் ரகுமான்



சென்னை : அட்லீ இயக்கத்தில் விஜய் நடிக்கும் "மெர்சல்" படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் பிரமாண்டமாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் லைவ் இசை நிகழ்ச்சியை நடத்தினார். இதனைத் தொடர்ந்து, "25 ஆண்டுகளான தனது திரைவாழ்க்கையில், இப்போதுள்ள ரசிகர்கள் புது தலைமுறையைச் சேர்ந்தவர்கள். அதனால் தனக்கு வயது குறைந்து" என ரகுமான் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, நடிகர் விஜய் திரைத்துறைக்கு வந்து 25 ஆண்டுகளாகியுள்ளது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என்று தொகுப்பாளர்கள் ஏ.ஆர். ரகுமானிடம் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதில் அளித்த ரகுமான், ஆளப்போறான் தமிழன் என்பதை ரசிகர்கள் உண்மையாக்க வேண்டும் என்று கூறினார். மேலும், அது எந்தத் துறையாக வேண்டுமானாலும் இருக்கலாம் என்று கூறிய ரகுமான், பெண்களை அன்பாகப் பார்க்க வேண்டும் என்றும் அவர்களை மதிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்

# கொஞ்சப் பேருக்காவது நம்மைப் பிடிக்கக் கூடாது!

கொஞ்சப் பேருக்காவது நம்மைப் பிடிக்கக் கூடாது. அப்போதுதான் வாழ்க்கை போர் அடிக்காமல் இருக்கும் என்று மெர்சல் திரைப்பட இசை வெளியீட்டு விழாவில் நடிகர் விஜய் கூறியுள்ளார். இந்த நிகழ்ச்சியில் இந்தப் படத்தின் கதாநாயகரான நடிகர் விஜய் பேசியது: முதலில் இந்தப் படத்தின் தயாரிப்பாளர் முரளி மற்றும் ஹேமாவிற்கு வாழ்த்துக்கள். அவர்களின் 100வது படமாக மெர்சல் அமைந்தது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

மெர்சலுக்கு மெட்டு இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் திரைத்துறைக்கு வந்து இது 25வது வருடங்கள் ஆகிறது. அவரோடு சேர்ந்து நானும் இந்தப் படத்தில் வேலை செய்திருப்பது சிறப்பான விஷயம். மெட்டு போட்டு ஆஸ்கர் வாங்கி உலகத்தை மெர்சல் அடையச் செய்தவர், இன்று மெர்சலுக்கு மெட்டு போட்டிருக்கிறார். 6 மாதத்தில் இந்தப் படத்தை முடித்த இயக்குநர் அட்லி மற்றும் அவரது உதவி இயக்குநர்களுக்கு நன்றி.

எதிர்மறை விஷயங்கள் நான் அட்வஸ் செய்கிறேன் என்று நினைக்காதீர்கள். நான் அவ்வளவு பெரிய ஆள் இல்லை. நிறைய இடங்களில் பலர் என்னிடம் பலர் கேட்பதுண்டு. உங்களைச் சுற்றி நடக்கும் எதிர்மறை விஷயங்களை என்ன செய்வீர்கள் என்று கேட்பார்கள்.

சிம்பிள் வழி, சும்மா விட்டுவிடுங்கள். வேற வழியே இல்லை. அதை எல்லாம் தாண்டிதான் வந்தாக வேண்டும். எல்லோருக்கும் நம்மைப் பிடித்துவிட்டால் நமக்கு வாழ்க்கை போர் அடித்துவிடும். கொஞ்சப் பேருக்காவது நம்மைப் பிடிக்காமல் போனால்தான் வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக்கும்.
உண்மையான அன்பு அன்பாக இருந்தால் பழகும் 10 பேர் கூட உண்மையாக இருப்பார்கள். நான் அன்பாக இருப்பதாக நினைக்கிறேன். அதனால்தான் நீங்கள் எனக்குக் கிடைத்துள்ளீர்கள். பெரிய ஹிட் படங்களை நடித்தாலும் உங்களை நான் பெற்றதுதான் சிறப்பு என்று விஜய் பேசினார்.



## நயன்தரா கூட...

சிவகார்த்திகேயன். அட பாரடா அவன் நயன்தாராகூட நடிக்கிறான் என்று எல்லோரும் இணையத்தில் கலாய்க்கும்போது உங்கள் மனநிலை எப்படி இருக்கும் என்று கேட்டதற்கு.

"எனக்கும் அவங்களைப் போலவே அதிசயமாக இருக்கிறது" என்று ஒற்றைவரியில் சொல்லிக் கலாய்த்துவிட்டார் சிவகார்த்திகேயன்.

இல்லை அப்படி எனக்கு! என்றால் இன்னும் 100 கலாய்ப்புக் குவிந்திருக்கும்.
படிப்படி என்ற சொல்லுக்கே இலக்கணமானவர் சிவகார்த்திகேயன். எடுத்த எடுப்பில் முன்னக்கு வரவில்லை படிப்படியாக தன் கடின உழைப்பால் முன்னுக்கு வந்த வேலைக்காரன் அவர். மேலே அவர் வேலக்காரன் படத்தில் நயந்தராவுடன்.


தீபாவளிக்கு
புஙுகு
"இது பொய்யல்ல மெய்"






Hückelhoven நகரில்
துரித பணமாற்றுச் சேவை
Asiatischer Super markt
ஆசியா சமுத்திரம்



Lyca TV

பசுமையான மரக்கறிகள்
கடல் உணவுப் பொருட்கள் -
மளிகைப்பொருட்கள் அனைத்தும்
மலிவாகவும் கிடைக்கும்.

TEMPO money transfer
VALUTRANS money transfer
Ria Money Transfer
MoneyGram money transfer



Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan


Rathy Jewellers Ltd
The Leading Jewellery store in London with the largest selections
அதிக தேர்வுடன் கூடிய, லண்டனில் முன்னணியில் திகழும் நகைமாளிகை ரதி!
28 Ealing Rd
Wembley
HAO 4TL London
Tel: 02089033063
Opening Hours
Mon-Sat 10.00 am to 6.30 pm
Sun 12.00 to 6.30 pm
எமது புதிய கிளை
UNIT 6
Plaza Parade29-33
Ealing road
Wembley HA0 4 YA
Tel: 0208 9000 818


உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Emirates
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண
மாற்றுச் சேவை!
VALUTRANS MONEY TRANSFER
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
இந்தியா- இலங்கை- விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com


புத்தம் புது வரவுகள்
முந்துங்கள்
Jasmine Silk House
காஞ்சிபுரம் நம்பர் 1 பட்டு
சாறிகள் நம்மிடம் கிடைக்கும்
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்
Tel:02102 844744


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
VALUTRANS MONEY TRANSFER
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282
உரிமையாளர்:
பா. கனேஷ்


வீட்டுக்கடன்
1,2%
வட்டிவீதத்திலிருந்து
நீங்கள் புதிய மனை
அமைக்கவோ, கடன் பெறவோ,
எதுவானாலும் உடனடி உதவி
எங்களிடம் உண்டு
தற்போதைய வீட்டுக்கடனை
அல்லது (தனிநபர்)கடனை
குறைந்த வட்டிக்கு மாற்றுதல்
"Umschuldung"
தொடர்புகளுக்கு:
gothab Finance 0231/53375365 0152/53961138
Rheinische Str. 72, 44137 Dortmund 0231/10876361
Th. Gobinath


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
SARAVANAA BHAVAN
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


StaR - Impex
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Tilda
Kipper Str.3 44147 Dortmund Germany